அருள் பெற்ற கவிஞர்கள்

ஆர்வி



அருள் பெற்ற கவிஞர்கள்

ஆசிரியர் :

ஆர்வி

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை - 4.

முதற் பதிப்பு: ஜனவரி 1966

விலை ரூ. 1-50

PRINTED AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS,
TIRUVIDAIMARUDUR.

68-2

முன்னுரை

அருள் பெற்ற கவிஞர்கள் என்ற வரிசையில் இங்கே பதின்மரை அறிமுகப்படுத்த முயன்றிருக்கிறேன். இந்தப் பத்துப் பேருக்குமே பொதுவான பண்புகள் சில இருப்பதைக் காண்கிறோம்.

இசை என்பது எல்லாருக்குமே வாய்த்துவிடுகிற செல்வமில்லை. இந்த அரிய சம்பத்தைப் பக்திக்கு ஒரு சாதனமாகப் பயன்படுத்தி, நம் உள்ளத்தில் நிலையான இடத்தைத் தேடிக்கொண்டவர்கள் இவர்கள். இறைவன் அருளால் இசைக் கவிபாடும் திறமைகளை இறைவனுக்கே அர்ப்பணம் செய்து எளிமையை மேற்கொண்டு வாழ்ந்த மகான்கள் இவர்கள். அருள் பாடல்களினால் தாமும் உயர்ந்து, மக்கள் குலத்தையும் உயர்த்தி உய்விக்கிற பேரருள் பெற்ற பெருமக்கள் இவர்கள்.

இவர்களைப் பற்றிச் சரியான விவரங்கள் எதுவும் எளிதில் நமக்குக் கிடைப்பதில்லை. உண்மையோடு பல கட்டுக்கதைகள் கலந்து பல விவரங்கள் வழங்குகின்றன. ஒருவர் வாழ்க்கையில் நேர்ந்த ஒரு சம்பவத்தையே இன்னொருவர் வாழ்க்கையிலும் நிகழ்ந்ததாகச் சேர்த்துச் சொல்லி வருகிறார்கள்.

இயன்ற வரையில் சரியான செய்திகளைச் சேகரித்து, சரித்திரபூர்வமாக உண்மைகளை ஆராயும் முயற்சிகள் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றன. அந்த முயற்சிகளையே ஆதாரமாகக் கொண்டு இவர்களுடைய வாழ்க்கையையும் இவர்களுடைய பெருமைகளையும் அறிந்துகொள்ளுவதற்கு இது ஓரளவு பயன்படும் என்று நம்புகிறேன். பெரியோர், சிறியோர், கற்றவர், மற்றவர் அனைவருமே இதைச் சுலபமாகப் படித்துப் புரிந்துகொள்ளும் விதத்தில் எழுத வேண்டும் என்பதே என் நோக்கம். கையெழுத்துப் பிரதிகளைப் பரிசோதித்த அன்பர்கள் என் நோக்கம் கைகூடியிருப்பதாகச் சொல்லவே, எனக்குக் கொஞ்சம் தைரியமும் உற்சாகமும் உண்டாயின. அந்தத் தைரியத்தில் இதைப் புத்தக வடிவாக வெளியிட முன்வந்தேன்.

அதற்கும் மேலே, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய அனுக்கிரகமும் இதற்குக் கிடைத்துள்ளது, என்னுடைய பெரும் பாக்கியமென்றே கருதுகிறேன்.

அன்பர்கள் ஆதரவு இதற்குப் பெரிதும் கிடைக்குமென்று நம்புகிறேன்.

மயிலாப்பூர்,
27—12—1965. } ஆர் வி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்

ஸ்ரீமுகம்

கலியுகத்தில் பகவந்நாமாவைச் சொல்வதனுல் மற்ற யுகங்களில் கடும் தபஸினுல் அடையக் கூடிய பகவத் ஸாக்ஷாத்காரத்தை அடைய முடியும் என்று சாஸ்திரங்களுக்கு உகந்த முறையில் வாழ்நாள் முழுவதும் பகவானின் நாமத்தைப் பாடி, பகவத் ஸாக்ஷாத்காரத்தை அடைந்த மஹான்களான தியாக ராஜர், ஹரிதாஸர், கனகதாஸர், ஆண்டாள், கபீர் தாஸர், ஜயதேவர், கிருஷ்ண சைதன்யர், மீராபாய், புரந்தரதாஸர், ஸூர்தாஸர் போன்றவர்களின் சரித் திரத்தைப் பக்திச் சுவை குறையாவண்ணம் எல்லா மக்களும் எளிய முறையில் அறிந்து கொள்வதற்கு மிகவும் உபயோகமாயுள்ளதாய் ஸ்ரீமான் ஆர். வேங்கட ராமன் (ஆர்வி) அவர்களால் தொகுத்து எழுதப்பட்டு, கலைமகள் வெளியீடாக 'அருள் பெற்ற கவிஞர்கள்' என்னும் தலைப்பில் வெளியிட் டிருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறேம்.

எல்லா ஆஸ்திக மக்களும் இவ்வுத்தம சரித்தி ரத்தைப் படித்து, பக்தி மார்க்கத்தில் செல்வார்களாக.

யாத்ரா ஸ்தானம்
திருவொற்றியூர்
விச்வாவஸு
மார்கசீர்ஷ பகுள
த்வாதசி

நாராயண ஸ்ம்ருதி:

[illegible]

[illegible]

பதிப்புரை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பொருளடக்கம்

1

மகான் தியாகராஜர்

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் நிறைந்த வாழ்வு வாழ வேண்டும். இன்பம் அடைய வேண்டும். இல்லறத்தில் ஈடுபட்டு, குடும்பத்தை நடத்தியவாறே தெய்வ சம்பத்தைப் பெற முயலவேண்டும். வாழ்க்கை அல்லல்களிலிருந்து தப்பி ஓடுவதற்காகத் துறவறத்தை மேற்கொள்வது கூடாது. உலக வாழ்க்கையில் நாலு ஆசிரமமும் அவசியம். இவ்வாறு கருதிய அருட்கவி, மகான் தியாகராஜர். எண்ணிறந்த பக்திக் கீர்த்தனைகளைப் பாடி சங்கீதக் கலைக்கும் மக்கள் குலத்துக்கும் அரும் தொண்டு புரிந்த உத்தம சீலர் அவர்.

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் தியாகராஜர். பிறந்த ஊர் திருவாரூர். திருவாரூரில் எழுந்தருளி யிருக்கும் தியாகராஜப் பெருமானின் பெயரையே கடைசிப் பிள்ளையான இவருக்கு இவருடைய பெற்றோர்கள் சூட்டினார்கள்.

இவருடைய தந்தை ஒரு தெலுங்கப் பிராம்மணர். ராமப்பிரம்மம் என்ற பெயருடையவர். சங்கீதப் பரம்பரையில் வந்தவர். அத்துடன் சம்ஸ்கிருத கவியும்கூட. தாய்க்கு நல்ல சங்கீத ஞானம் உண்டு. பாட்டனாராகிய கிரிராஜ கவி தஞ்சை சம்ஸ்தான சம்ஸ்கிருத பண்டிதர். தியாகராஜருக்குப் பதினாறு வயதாவதற்குள்ளேயே இவர் பெற்றோர்களை இழந்துவிட்டார். வறுமை காரணமாகக் குடும்பம் திருவையாற்றுக்குக் குடிபெயர்ந்து போயிற்று. தியாகராஜருடைய தமையன்மார்கள் இருவரும் உலக ரீதிப்படி வாழ்ந்துவந்தார்கள். ஆனால் தியாகராஜர் இளமையிலேயே தெய்வ பக்தியும் தர்மத்தில் பற்றும்

கொண்டு விளங்கினர். சின்ன வயதில் கரிக்கட்டியை எடுத்துச் சுவரெல்லாம் ராம நாமத்தை எழுதிவைப்பார். அவர்களுடைய குலதெய்வம் ஸ்ரீராமபிரான்தான். அவர் அந்த ராமபிரானையே நம்பி, எப்போதும் பக்தி செலுத்திவந்தார். சங்கீதத்தில் அவருக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. அதுதான் கடவுள் அருளைப் பெறுவதற்கு எளிய வழி என்று தியாகராஜர் உறுதியாக நம்பினர். தஞ்சாவூர் ராஜ வம்சத்து ஆஸ்தான வித்துவானிடம் சங்கீத பாடம் பயின்றார். கூடிய சீக்கிரமே அவர் குருவையும் மிஞ்சும் நிலைக்கு வந்துவிட்டார். ராகம் பாடுவதில் நிகரற்ற புலமை உண்டாகிவிட்டது.

ஒரு நாள் திருவையாற்றுக்கு ராமகிருஷ்ணர் என்று வழங்கிய சந்நியாசி ஒருவர் வந்தார். அவரைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பு தியாகராஜருக்கு ஏற்பட்டது. அவர்தான் பேரின்ப வழியைத் தமக்கு உணர்த்தக் கூடிய குரு என்று அவருக்குப் பட்டது. தமக்கு ஞான ஒளி காட்டியருள வேண்டும் என்று அவரைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டார் தியாகராஜர். இவருடைய அந்தரங்கமான ஆர்வத்தைக் குருவும் தெரிந்துகொண்டார். இருந்தாலும் பல சோதனைகள் நடைபெற்றன. தியாகராஜரின் பக்தி, இதயத்தின் ஆழத்திலிருந்து வருவது என்று கண்ட குரு அவரது செவியில் புனிதமான ராமநாம தாரக மந்திரத்தை உபதேசித்தார். அதைத் தொண்ணூற்றாறு கோடி தடவை உருப்போடும்படி கட்டளையிட்டார். நாற்பது வயது ஆவதற்குள் இந்தப் பரீட்சையில் தியாகராஜர் தேறி வெற்றி பெற்றுவிட்டார். இதன் காரணமாக உடலையும் உள்ளத்தையும் அடக்கியாளும் ஆற்றல் அவருக்கு வந்துவிட்டது.

அவருடைய மூத்த சகோதரர்கள் இரண்டுபேருக்கும் தம்பியின் போக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றி, எரிச்சலை மூட்டியது. குடும்பத்தைக் காப்பாற்ற வழி ஒன்றையும் தேடாமல் எப்போதும் ராமபிரானுடைய

விக்கிரகத்தையே வைத்துப் பூஜித்துக்கொண் டிருப்பது கண்டு கோபமடைந்தார்கள். ஒரு நாள் அந்தக் கோபத்தில் அவர்கள் அந்த விக்கிரகத்தைத் தூக்கித் தெருவில் எறிந்துவிட்டார்கள். அத்துடன் நிற்காமல் அவரையும் வீட்டை விட்டு வெளியே துரத்திவிட்டார்கள்.

இப்படி அவர்கள் அறியாமையும் முரட்டுத்தனமும் சேர நடந்துகொண்டதை எண்ணி, தியாகராஜர் மிகவும் மனம் நொந்துபோனுர். அதனுல்தானே என்னவோ, தமையன்மார் இருவரும் தாம் செய்தது தவறு என்று உணர்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு ஊணும் செல்லவில்லை; உறக்கமும் கொள்ளவில்லை. கடைசியாகத் தியாகராஜரையும் அவர் பூஜித்துவந்த விக்கிரகத்தையும் வரவழைத்துக்கொண்ட பிறகுதான் அவர்களுக்கு நிம்மதி உண்டாயிற்று.

சங்கீத பாடமெல்லாம் பயின்ற பிறகு தியாகராஜர் தம்மை மறந்து விக்கிரகத்துக்கு முன்னுல் உட்கார்ந்து அருமையான கீர்த்தனைகளைப் பாடி லயித்திருப்பார். உலக வாழ்வில் கண் முன்னுல் காணும் இன்பமெல்லாம் அவருக்கு இன்பமாகவே படவில்லை. நாதோபாசனையில் ஆழ்ந்து இறைவனேடு ஒன்றியிருக்கும் அநுபவம் ஒன்றே உண்மையான இன்பமாக அவருக்குத் தோன்றியது. இந்த இன்ப அநுபவத்தைப் பிறருக்கு எப்படி உணர்த்தமுடியும். அவரவர் அநுபவித்துப் பார்த்தாலொழிய சொல்லித் தெரிந்துகொள்கிற இன்பமா இது? கண்களை மூடிக்கொண்டு அவர் தம்மை மறந்து பாடுவதைக் கேட்பவர்களும் மணிக்கணக்காக உட்கார்ந்து மெய்ம்மறந்து கேட்பது வழக்கமாகி விட்டது.

இவர் பாடுவதைக் கேட்க ஒரு நாள் ஒரு சாது வந்து சேர்ந்தார். தியாகராஜருடைய கீர்த்தனைகள் தெய்விகத் தன்மை பெற்றிருந்தன என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். வீடு தேடி, பாட்டுக் கேட்க வந்த சாதுவைத் தியாகராஜர் வரவேற்று நன்ருக உபசரித்து, தம் வீட்டில்

அதிதியாக இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டார். சாது அதற்கு மறுமொழி கூற முடியாமல் இணங்கி, காவிரி ஆற்றிலே நீராடிவிட்டுத் திரும்பி வருவதாகச் சொன்னார். புறப்படுவதற்கு முன் பாக, ''இதோ பார்; இதை வைத்துக்கொள். ஸ்வரார்ணவம் என்ற அற்புதமான சங்கீத நூல் இது. நான் வந்து பிறகு வாங்கிக்கொள்கிறேன்'' என்று கூறி விட்டு அந்த நூலைத் தியாகராஜரிடம் கொடுத்துச் சென்றார். போனவர் என்ன ஆனாரோ தெரியவில்லை. அதிதியாக வந்த அவர் திரும்பி வரட்டும் என்று சாப்பிடாமல் வாசற் திண்ணையிலேயே காத்திருந்தார் தியாகராஜர். வெகு நேரமாகிவிட்டது. சாதுவைக் காணோம். ஆனால் தியாகராஜர் கண்ணயர்ந்து விட்டார். அப்போது கனவில் அந்தச் சாது தோன்றினார். தாம் நாரத முனிவர் என்றும், தாம் கொடுத்து வந்த நூலைத் தியாகராஜர் படித்துப் பார்க்கவேண்டும் என்றும், ராமாயண காவியத்தை வால்மீகி முனிவர் பாடியதுபோல் இந்தக் கலியுகத்தில் தியாகராஜர் ராமபிரானுடைய புகழைக் கீர்த்தனைகளாகப் பாடவேண்டும் என்றும் சொல்லிவிட்டுப் போனார்.

பதறி யடித்துக்கொண்டு துயில்நீங்கிய தியாகராஜர் அந்த நூலைப் பிரித்துப் பார்த்து உவகை கொண்டார். அரிய பொக்கிஷம் போன்ற அந்த நூலைக் கொடுத்துச் சென்ற சாது நாரத முனிவர்தான் என்று தெரிந்தபின், அந்தக் குருநாதனின் பெருங்கருணையையும் அன்பையும் எண்ணி மனம் உருகிப் போனார். சாதுவாக வந்த முனிவரைக் கண்டுகளித்த இன்பமெல்லாம் திரண்டு உருக்கொண்டு ஒரு கீர்த்தனையாக வெளிப்பட்டது. 'ஸ்ரீ நாரதமுனி குருராய' என்ற கிருதியைப் பாடி மனம் கசிந்து உருகினார்.

தியாகராஜர் சமயப்பற்றும் ஆசாரமும் சீலமும் மிகுந்த பாகவத பரம்பரையில் தோன்றியவர். அவருக்குப்

பெரியவர்களிடம் மதிப்பும் பழைய மரபுகளில் ஈடுபாடும் அதிகமாக உண்டு. ஸ்ரீ ராமபிரானே அவருக்குக் கண் கண்ட தெய்வம். ஸ்ரீ ராமபிரானையே உள்ளூற நம்பி எந்த நேரமும் வழிபட்டு வந்தார். எளிய குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தாலும் இந்த உறுதியும் நம்பிக்கையுமே அவருக்கு நல்ல ஞானத்தைக் கொடுத்தன. சாகித்தியம், கவிதை இயற்றுவதில் அவர் அபாரத் திறமை பெற்றிருந்தார். சங்கீதத் துறையில் வழிகாட்டிகளான நாரதர், புரந்தரதாசர் இவர்களிடத்தில் அவருக்கு மிகுந்த பக்தி. நாடக பாணியில் அமைந்த மூன்று சரிதப் பாடல்களையும் தெலுங்கிலும் சம்ஸ்கிருதத்திலும் இயற்றியிருக்கிறார்.

அந்தக் காலத்தில் சங்கீத வித்துவான்களில் மிகவும் பிரபலமாக விளங்கியவர் சொண்டி வேங்கடரமணய்யா என்பவர். இவரிடம் தியாகராஜர் சிஷ்யராக இருந்து சிட்சை கற்றுக்கொண்டார். வேங்கடரமணய்யா தம் சிஷ்யரின் அபார ஞானத்தைப் பாராட்டுவது வழக்கம். காளிதாசனைப் போலத் தியாகராஜரும் அருட்கவி; சங்கீதத்தின் மூலம் கடவுளை உணரலாம், அநுபவிக்கலாம், அடையலாம் என்பதை உறுதியாக உணர்ந்தவர். சங்கீதத்தைவிட நேரான வழியில்லை. அதுவே பக்தி மார்க்கமும் ஆகும் என்ற கருத்தை 'சங்கீத ஞானமு, பக்திவினு, ஸன்மார்க்கமு கலதே' என்ற கிருதியில் வலியுறுத்திக் கூறுகிறார் தியாகராஜர். மற்றும் பல மகான்களைப் போலவே சங்கீதத்தின் ஆத்ம சக்தியில் அவருக்கு நம்பிக்கை உண்டு. நாதத்திலிருந்தே மனித குலமும் பிரபஞ்சமும் தோன்றின என்ற கருத்துள்ளவர் அவர். ஆத்ம அநுபூதியைப் பெறுவதற்கு நாதமே சிறந்தது என்பதைச் சில கிருதிகளில் விவரித்திருக்கிறார். முன் காலத்தில் நம் நாட்டில் வாழ்ந்த மகான்களும் இந்த வழியைத்தான் கடைப்பிடித்து வந்தார்கள்.

தியாகராஜர் சிறந்த சாகித்திய கர்த்தராக இருந்ததோடு பாகவதர்கள் வழக்கப்படி அதைத் தாமே பாடிக்

காட்டுவதிலும் தேர்ந்திருந்தார். பக்தி மிகுந்த சமயங்களில் உணர்ச்சி பொங்க இப்படிப் பல கிருதிகளை அவர் பாடியிருக்கிறார். இவை எளிமையும் ஆழ்ந்த உண்மையும் பொருந்தியவை. கேட்பவர் உள்ளத்தை நெகிழ்விக்கும் சக்தி படைத்தவை. திருத்தமோ மாறுதலோ செய்வதற்கு இடம் இல்லாதபடி இவை அவ்வளவு சம்பூர்ணமாக அமைந்து விளங்குகின்றன. அவருடைய நிறைவான சங்கீத ஞானத்தை வியந்து பல வித்துவான்கள் அவரைப் பாராட்டினார்கள். சங்கீதத் துறையில் தம்மை மிஞ்சியவர் இல்லை என்று அகந்தை கொண்ட பலபேர் அவர் எதிரில் நிற்க முடியாமல் அடங்கி ஒடுங்கிப் போய் விட்டார்கள்.

தீமை, செல்வம், உலகபோகம் இவற்றை அறவே வெறுத்தவர் தியாகராஜர். இதனால் பல தீய பழக்க வழக்கங்களை எதிர்த்துத் தியாகராஜர் சமாளிக்க வேண்டியிருந்தது. அவருடைய மகிமை எங்கும் பரவியது. பல பிரபல சங்கீத வித்துவான்கள் அவரை எங்கெங்கிருந்தெல்லாமோ காணவருவார்கள்; பிரமாதமாகத் தங்களைப் பற்றிப் பெருமை யடித்துக்கொண்ட பேர்வழிகள் எல்லாரும் அவருடைய சங்கீத ஞானத்தைக் கண்டு அயர்ந்து ஒடுங்கிப் போனார்கள். தஞ்சாவூரை அப்போது ஆண்ட மராட்டிய மன்னரான சரபோஜி, தியாகராஜருடைய புகழைக் கேள்வியுற்றார். தம் ஆஸ்தானத்துச் சங்கீத வித்துவானாக அவரை நியமிக்க எண்ணி, ஏராளமான வெகுமதிகளை அவருக்கு அனுப்பி வைத்தார். தியாகராஜர் அவைகளை அடியோடு ஏற்க மறுத்துவிட்டார்.

“பொற்குவியலும் நிதியும் இன்பத்தைத் தருவதில்லை. மனிதனுக்குச் சேவகம் புரிவதால் ஒரு பலனும் இல்லை. தெய்வத்தைத் தொழுது வந்தால்தான் மனத்திலே இன்பம் உண்டாகும்” என்று சொல்லி, தியாகராஜர் அந்த வெகுமதிகளைத் திருப்பியனுப்பி விட்டார்.

"இந்தப் பொருள்கள் இருந்தால் அவற்றை வைத்துக்கொண்டு நாமாவது சுகமாக வாழ்ந்திருக்கலாமே. இங்கிதம் தெரியாமல் இப்படி நடந்துகொண்டு நம் வாயில் மண்ணைப் போட்டுவிட்டானே!" என்று மூத்த சகோதரர்கள் இருவரும் பெரும் கோபம் கொண்டார்கள். தங்கள் தம்பி வேண்டுமென்றே இப்படிச் செய்வதாக அவர்களுக்குப் பட்டது. ஆகவே, பரம்பரையாகப் பூஜித்து வந்த அந்த ஸ்ரீராமருடைய விக்கிரகத்தை இந்தத் தடவை அவர்கள் மீண்டும் எடுத்துவர முடியாத படி காவிரி யாற்றிலே கொண்டுபோய் எறிந்து விட்டார்கள். தாம் மிகவும் பக்தியோடு பூஜித்து வந்த இந்த விக்கிரகம் காணுமல் போய்விட்டதே என்று தியாகராஜருக்குத் துக்கம் துக்கமாக வந்தது.

"என் ஐயனே, ராமா! என்மீது கருணை வைத்து நீ மறுபடியும் தோன்ற மாட்டாயா?" என்று அவர் மனமுருக ஸ்ரீராமபிரானை வேண்டினுர். எங்கெங் கெல்லாமோ தேடிப் பார்த்தார். அப்படியும் விக்கிரகம் கிடைக்கவில்லை. சாது உபதேசித்த தாரணை என்ற யோக நித்திரையில் ஆழ்ந்தார். அப்போது பகவான் தியானத்தில் தோன்றி, அது காவிரி யாற்றில் இன்ன இடத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லி மறைந்தார்.

தியாகராஜர் தாரணை நீங்கி எழுந்து ஆற்றங்கரைக்கு ஓட்டமாக ஓடினுர். ஆற்றில் குறிப்பிட்ட இடத்தைக் கண்டு மூழ்கிப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! ஸ்ரீராமருடைய விக்கிரகம் கையிலே அகப்பட்டுவிட்டது. துள்ளிக் குதித்துக்கொண்டு அதை எடுத்து வந்து பூஜையில் வைத்தார். முன்னிலும் தீவிரமாக அதைப் பக்தியோடு பூஜிக்கத் தொடங்கினுர். அந்த விக்கிரகத் தைச் சாட்சாத் ஸ்ரீராமனுகவே கருதித் தொழுது வந்தார். திருப்பள்ளி யெழுச்சி ஒன்று பாடினுர்; திருமணப்பாட்டுப் பாடினுர். நலங்கும் ஊஞ்சலும் பாடி

விசிறினர். தாலாட்டுப் பாடி, பகவானை உபசரித்துப் படுக்க வைத்தார். பகவானுக்கு இவ்வாறு கீர்த்தனைகளாலேயே அஞ்சலி செய்து வந்தார்.

கொஞ்ச நாட்கள் சென்றதும் அவருக்குத் தென்னிந்தியாவிலுள்ள க்ஷேத்திரங்களுக்குச் சென்று வர வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. மதுரைக்குப் போனர்; காஞ்சிக்குப் போய்விட்டுத் திருப்பதிக்கும் சென்றார். திருப்பதியில் ஏழுமலையாண்டவனைத் தரிசிக்க அவர் வந்தபொழுது. சுவாமி சந்நதியில் திரைபோட்டு மூடியிருப்பதைக் கண்டார். நேரம் அதிகமாகிவிட்டதால் அன்று மறுபடியும் திரையை விலக்க மாட்டார்கள் என்று தெரிந்தது. தியாகராஜரோ வெகு தொலைவிலிருந்து தரிசனம் செய்ய ஆவலோடு வந்திருந்தார். இன்னும் நெடுந்தூரம் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. அதனல் ஓய்வுபெற எண்ணினர். ஆனல் இவ்வளவு தூரம் வந்துவிட்டு, சுவாமி தரிசனம் செய்யாமல் நித்திரை செய்வதாவது என்று வருந்தினர்.

“ஆண்டவனே—அவர்கள் திரையை விலக்க மாட்டார்கள். நீயாவது மனமிரங்கலாகாதா?” என்று பகவானையே பார்த்து வேண்டிக் கொண்டார். பகவான் அதைச் செவிமடுத்துக் கேட்டுவிட்டதாகத் தோன்றியது. மனமிரங்கிப் பக்தனுக்கு அருள் செய்யக் கருதிவிட்டார். திரை தானகவே விலகியது. சகல ஆபரணங்களும் அணிந்தவராக, தியாகராஜர் மனம் குளிரும் வண்ணம் காட்சி தந்தார். தியாகராஜர் நெஞ்சுருக, கண்குளிர வேங்கடத்து ராமனைத் தரிசித்துவிட்டுச் சென்றார்.

பிறகு அங்கிருந்து திரும்பி வரும் வழியில் ஒரு கிராமத்தில், ஒரு சோகமயமான காரியம் நிகழ்ந்து விட்டதாக அவருடைய சிஷ்யர்கள் சொன்னர்கள். யாரோ ஒரு பக்தன் குடும்பத்தோடு மலைக்கு வந்து இரவில் தங்கினனும். காட்டு விலங்குகள் சஞ்சாரம் அதிகமாக இருக்கவே, அவன் வெளியில் படுக்கப் பயந்து

கோயிலுக்குப் போனானும். கோயில் உட்பக்கம் தாழிடப் பட்டிருந்தது. அதைத் திறந்து விட்டுக் குடும்பத்தாரை உள்ளே படுக்கச் சொல்ல எண்ணி, மதில்மேல் ஏறி உள்ளே குதித்தானும். அங்கே கிணறு இருந்தது தெரியாமல் தவறி விழுந்து இறந்துவிட்டானும். சிஷ்யர்கள் சொன்ன செய்தி இதுதான். பக்தனுடைய குடும்பம் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தது. இதை யெல்லாம் நேரிலேயே பார்த்த தியாகராஜர் உள்ளம் வருந்தியது. பகவான் இப்படிக் கள்ளம் கவடு அறியாத பக்தன் ஒருவனைத் தண்டித்தது சரியல்ல என்று மனம் நொந்து போனார்.

''ஆண்டவனே, அவன் மீண்டும் உயிர்பெற்று எழுந்திருக்க அருள்புரிய வேண்டும்'' என்று பகவானைத் துதித்து ஒரு கிருதி இயற்றிப் பாடினார்.

திரையை விலக்கித் தரிசனம் தந்த தெய்வம் இப்போதும் அவர் முறையீட்டுக்குத் திருவுள்ளம் இரங்கியது. அந்தப் பக்தன் உடலில் உயிர் நெளிந்து அசைவு கொடுத்தது. துயில் நீங்கி விழித்தவனைப்போல அவன் உயிர் பெற்று எழுந்துவிட்டான்.

கோவூர் என்ற ஊரில் தியாகராஜர் ஒரு பண்ணையாரின் வீட்டிலே தங்கியிருந்து விட்டு, மீண்டும் பயணம் புறப்பட்டார். அப்போது அந்தப் பண்ணையார் ஒரு பை நிறையப் பொற்காசுகளைக் கட்டி அவரிடம் கொடுக்க வந்தார்.

''எனக்கு எதற்கு இதெல்லாம்? வேண்டாம்'' என்று மறுத்துவிட்டார் தியாகராஜர்.

ஆனால் பண்ணையாரோ விடவில்லை. அவருக்குத் தெரியாமல் அந்தப் பையைத் தியாகராஜருக்கென்று ஏற்பாடு செய்திருந்த பல்லக்கில் அதை வைத்து விட்டார். சிஷ்யர்கள் எந்தப் பக்கமும் பேசமுடியாமல் பேசாதிருந்து விட்டார்கள்.

அடர்ந்த காட்டு வழியாகப் பல்லக்குப் போகவேண்டி யிருந்தது. திருடர்களுக்குத் தெரியாதா மோப்பம்? அவர் பல்லக்கை மடக்கிக்கொண்டு பயமுறுத்தத் தொடங்கி விட்டார்கள்.

அவரோ அமைதியாக, "என் கையில் என்ன இருக் கிறது? ஒன்றும் இல்லையே!" என்று சொன்னார்.

பண்ணையார் பணம் வைத்திருக்கும் செய்தியைச் சிஷ்யர்கள் அவரிடம் சொல்ல வேண்டியதாகிவிட்டது.

"அப்படியா? ஸ்ரீராமா, உனக்கு இந்தப் பணம் வேண்டுமானால் நீதான் இதைக் காக்கவேண்டும்" என்று ராமபிரானை வேண்டிக் கொண்டார். ஸ்ரீராமரும் லட்சுமணரும்தான் வேடர்கள் வடிவிலே வந்திருக்க வேண்டும்! எங்கிருந்தோ இரண்டு வேடர்கள் வந்து தோன்றி, அம்புகளைத் தொடுத்து, அந்தத் திருடர்களை விரட்டியடித்து விட்டார்கள். திருடர் கண்களுக்குப் புலப் பட்ட அந்த ராம லக்ஷ்மணர்கள் தம் கண்ணில் படாமல் மறைந்து விட்டார்களே என்று அவருக்கு ஏக்கம்தான் உண்டாயிற்று.

அந்த ஏக்கம் அவரைவிட்டு நீங்கவேயில்லை. யாத்திரையிலிருந்து திரும்பிய பிறகு பல கீர்த்தனங்களைப் பாடினார். கேட்டவர்கள் எல்லாரும் பரவசமடைந்தார்கள். ஆனால் அவருக்குத்தான் மனத்தில் நிம்மதியில்லை. எந்த நாளும் எந்த நேரமும், "'முந்து வெனக இரு பக்கல தோடை' பகவானே, உன் தரிசனம் எனக்குக் கிடைக் காதா?" என்றுதான் அங்கலாய்ப்பு.

இந்த நாட்களில் அவருடைய ஆருயிர் மனைவி இறந்து போனாள். அந்தப் பிரிவின் துயரம் அவருக்குத் தாங்கவில்லை.

"ராமா! நானும் இந்த உலகை விட்டு விரைவில் போய்விடக்கூடாதா? இந்த உடல் என்னும் தளையிலிருந்து

நீங்கி உன் திருவடி சேர அழைத்துக் கொள்ள மாட்டாயா?'' என்று ஏங்கி ஏங்கிப் பாடினார்.

ஸ்ரீராமபிரானுக்கும் அவருக்கும் இருந்த உறவு விசித்திரமானது. முதலில் குடும்பத்தில் இருந்த சொத்துக்கள் பிரிவினை ஆனபோது, மூத்த சகோதரர்கள் இருவருககும் இருக்கும் சொத்துக்களைக் கொடுத்துவிட்டு, தம் மூதாதையர் வழிபட்டு வந்த அந்த ராம விக்கிரகமே தமக்குப் போதும் என்று கூறிவிட்டார். திவ்விய சோபை யுடன் விளங்கிய அந்த விக்கிரகம் ஒன்றே ஈடு இணையற்ற பொருளாகவும் எல்லாமாகவும் எண்ணி அவர் நிறைவு பெற்று வாழ்ந்தார். அது வெறும் விக்கிரமாக அவருக்குத் தோன்றவேயில்லை. ஸ்ரீராமபிரானே தமக்கு எதிரில் விக்கிரக வடிவு கொண்டு எழுந்தருளியிருப்பதாகத்தான் அவர் நம்பி வாழ்ந்தார். பூஜையின்போது பழமும் புஷ்பமும் பாலும் தாம்பூலமும் வைத்து, ''இதை ஏற்றுக் கொள், என்னப்பனே ராமா'' என்று பாடுவார்.

இப்படி அந்த ராமனை எதிரே வைத்துக்கொண்டு பாடியவைதாம் அத்தனை கீர்த்தனைகளும். ராம விக்கிரகம் தொலைந்தபோது, ''ஏ ராமா, உன்னைக் காணோம் என்று நான் எங்கே தேடுவேன்?'' என்று பாடியதும், விக்கிரகம் கிடைத்ததும், ''கண்டு கொண்டேன், ராமா, உன்னைக் கண்டு பிடித்துவிட்டேன்'' என்று பாடியதும் இந்த உண்மைகளை நமக்குத் தெளி வாக்குகின்றன.

தியாகராஜருக்கு ஒரே பெண். சீதாலக்ஷ்மி என்று பெயர். சீதம்மா என்று அவர் செல்லமாக அழைப்பார். அவளுடைய கல்யாணத்தின்போது அவருடைய சிஷ்யர் ஒருவர் ராமபடத்தைப் பரிசளித்தார். அதை அவர் வாலாஜாபேட்டையிலிருந்து தூக்கிக்கொண்டு கால் நடை யாகவே வந்தார் என்பதை அறிந்து, தியாகராஜருக்கு ராமபிரானே நடந்து வந்ததாகத் தோன்றியது. அவர் மனம் உருகிவிட்டது. ''என்னைக் கடைத் தேற்றவென்றே

ராமா, நீ நடந்து வந்திருக்கிருயா?'' என்று, ''நன்னு பாலிம்ப நடசி வச்சிதிவோ?'' என்று கசிந்துருகப் பாடினுர்.

எங்கே சென்ருலும் ஸ்ரீராமர் அவருடன் இருப்பதாகத் தான் பாவனே. அவரே தம்மைக் காத்து, அருள் சுரக்கப் பாடச் செய்வதாக அவருக்கு ஒரு திடநம்பிக்கை. உலகில் அவருக்கு எல்லாமே ராமனுகக் காட்சியளித்தது. துன்பமும் மனக்கவலேயும் ஏற்பட்ட போதெல்லாம் அவற்றை ஸ்ரீராமனிடம் சொல்லி முறையிடுவதை அவர் கீர்த்தனேகள் சிலவற்றில் காணலாம். அப்படியேதான் ஆனந்த பரவசமாக ஆனுலும், இந்த மாதிரி மனநிலே களில் அவருடைய கீர்த்தனேகளில் ஓர் ஆழ்ந்த நெகிழ்ச்சியையும் குதூகலத்தையும் காணலாம். கேட்பவர் மனம் உருகும்படி இவைகளில் அற்புத கற்பனேச் செறிவு நிறைந்திருக்கும். எதிரே இருக்கும் ஸ்ரீராம விக்கிரகத்தில் பகவான் ஆவிர்ப்பவித்திருப்பதாக அவருக்கு அத்தனே திடநம்பிக்கை இருந்தது. அந்த விக்கிரகத்தையே பார்த்த வண்ணம் நாழிகைக் கணக்காக அவர் இருப்பதுண்டு.

அதனுல்தான் அவருடைய கிருதிகளில் பரிபூரண மான *பாவம்* இருக்கிறது. சொல்லின் தெளிவு இருக்கிறது. உள்ளத்தைத் தொடும் இயல்பு இருக்கிறது. பக்தி மிகுந்த சமயங்களில் உணர்ச்சி பொங்கிவரப் பாடியிருக்கிருர்.

உலக விஷயங்களில் அவருக்குப் பற்று இல்லே. மக்கள் சமயப் பற்றும் கடவுள் நம்பிக்கையும் குன்றி வாழ்ந்து வருவது அவருக்கு வேதனேயளித்தது. இறைவனுடைய பெருமையை உணராமல் விலங்குகளேப் போல் வாழ்கிருர்களே என்று அவர் துன்பமுற்ருர். அவர்களுடைய துன்பத்துக்கெல்லாம் அவர்களுடைய அறியாமையே காரணம் என்று அவர்களுக்காக ஸ்ரீராமனே எண்ணிப் பாடியிருக்கிருர். ஸ்ரீராமனே அவருக்கு முழு முதற் கடவுள். ஸ்ரீராமனே அவருடைய உயிர் மூச்சு.

தியாகராஜருக்கு ஜோஸ்யம்கூட நன்ருகத் தெரியும். இருந்தாலும் ராமபிரானின் அற்புத சக்தியில் அவருக்கு அபார நம்பிக்கை. ராமனது அருளுக்கு முன்னுல் கிரகங்களின் வலிமை எம்மாத்திரம் என்ற கருத்தை வைத்து அவர் பாடியிருக்கிருர்.

இப்படி வாழ்க்கையில் ராமனைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை என்று உண்மையாகவே நம்பி வாழ்ந்த உறவு அவருக்கும் ராமபிரானுக்கும். எனவேதான் மனைவி இறந்த துக்கத்தில் தம்மையும் ராமன் திருவடிக்கு அழைத்துக்கொள்ள மாட்டானு என்று பாடினுர்.

அவருடைய முறையீட்டுக்கு வழக்கம்போல இந்த முறையும் ஸ்ரீ ராமன் கருணை காட்டினுர். அவருடைய கனவில் தோன்றி, ''இன்னும் ஐந்தே நாளில் நீ என் திருவடி வந்தடைவாய். ஆகவே சந்நியாசம் வாங்கிக் கொள்!'' என்று கூறினுர்.

சரியாக ஐந்தாம் நாள் பகவான் அவர் கண்களுக்கு முன்னே பிரத்தியட்சமாகி அவரை வாழ்த்தியருளினுர். திவ்விய ஒளியோடு விளங்கிய ஸ்ரீராமபிரானைக் கண்ணுரக் கண்ட நிலையில் தியாகராஜர் சமாதி அடைந்தார்.

அவர் சமாதி அடைந்த வருடம் 1847. அதாவது பராபவ ஆண்டு புஷ்ய பகுள பஞ்சமி அன்று குறித்த நேரத்தில் காவிரிக் கரையில், மகா சமாதியில் ஆழ்ந்து, ஸ்ரீராமனுடைய திருவடியை அடைந்தார்.

அவருடைய சாதனை மகத்தானது. அவருடைய வாழ்வு தூய்மையானது; சாந்தம் நிரம்பியது. அவர் காட்டிய நாத உபாசனையில் ஈடுபட்டு எத்தனையோ ஆண்-பெண்கள் பேரமைதியையும் உண்மைப் பேரழகையும் கண்டு களித்து வருகிருர்கள். அவருடைய உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் அமைந்த ஆயிரக் கணக்கான கீர்த்தனைகள் ஸ்ரீராமபிரானுடைய அருள் பெற்ற கவிகளாகும். அதனுல் அவை உலகம் உள்ளளவும் நிலைத்தும் உலவியும் வரும்.

2

மகான் ஹரிதாஸர்

இந்துஸ்தானம் முழுவதும் தான்சேன் என்ற பெரும் பாடகனுடைய புகழ் பரவியிருந்தது. அவன் டில்லி பாதுஷா அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனைப் பாடகனுகச் சிறப்புப் பெற்றவன். கேட்பவரைக் கவர்ந்திழுக்கும் அற்புதமான காயகன். ஈடு இணையற்ற லய ஞானம் படைத்தவன். சங்கீத தேவதையின் பரிபூரண அருளைப் பெற்றவன்.

ஒரு சமயம் அவன் அக்பர் சக்கரவர்த்திக்கு முன்னுல் கானமழை பொழிந்துகொண் டிருந்தான். அன்று எப்போதையும்விட அற்புதமாக இருந்தது அவனுடைய பாட்டு. அக்பர் சக்கரவர்த்தி மெய்ம்மறந்து போனுர்.

"தான்சேன், உலகத்தில் உன்னை இசையிலே மிஞ்சக் கூடியவன் ஒருவனும் இருக்கமாட்டான்" என்று அவர் தான்சேனை உள்ளன்புடன் புகழ்ந்தார்.

"இல்லை, பாதுஷா அவர்களே! என்னை மிஞ்சக் கூடியவர் ஒருவர் இருக்கிறுர்!" என்றுன் தான்சேன்.

"அப்படியா? யார் அவர்? எங்கே இருக்கிறுர் அவர்?" என்றுர் சக்கரவர்த்தி.

"அவர் சாமானியமானவரல்ல. பெரிய மகான். அவரே என் குருமகராஜர், ஹரிதாஸ் சுவாமிகள்" என்று தன் குருநாதரின் பெயரைச் சொல்லவே மிகவும் கூசினுன் தான்சேன்.

"அப்படியா? அவர் எங்கே யிருக்கிறுர்?"

"நிதிவனம் என்ற பிருந்தாவனத்தில்."

தான்சேனையும் மிஞ்சிப் பாடக்கூடிய அவருடைய சங்கீதத்தைக் கேட்க வேண்டும் என்ற ஆசை துடி துடித்தது சக்கரவர்த்திக்கு. மிகவும் தேர்ந்த ரசிகர் அவர். பல கலைகளையும் அநுபவிப்பதில் ஆர்வம் மிக்கவர்.

''அவரை இங்கே அழைத்து வர முடியுமா, தான்சேன்?'' என்று கேட்டார் அவர்.

''பல மன்னர்கள் முயன்று பார்த்துவிட்டார்கள்; அவர் பிருந்தாவனத்தை விட்டு எங்கும் வருவதில்லை.''

அக்பர் சக்கரவர்த்தி யோசனையில் ஆழ்ந்தார். இந்துஸ்தானத்தின் புகழ்மிக்க சக்கரவர்த்தி. அவராலும் முடியாத காரியம் ஒன்று இருக்க முடியுமா? ஆனாலும் அவர் அப்படியெல்லாம் மகான்களிடம் நடந்துகொள்ள விரும்பவில்லை. ஆனால் அந்த அற்புதமான பாட்டைக் கேட்க வேண்டும் என்ற ஆவலைமட்டும் அவரால் அடக்க முடியவில்லை.

''அப்படியானால் அவர் பாட்டைக் கேட்க என்ன வழி?''

''ஒரே வழிதான் இருக்கிறது. ஆனால் அதைத் தங்களால் செய்ய முடியாது!'' என்று பணிவோடு சொன்னான் தான்சேன்.

''நீ அந்த வழியைச் சொல் முதலில். பிறகு முடியுமா, முடியாதா என்று பார்க்கலாம்.''

''தாங்கள் மாறுவேஷத்தில் என்னோடு வந்தால் கேட்கலாம்.''

அக்பர் முதலில் தவறாகப் புரிந்துகொண்டார் அதை.

''வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றால்......''

''இல்லை, பெருமானே! அது இல்லை...... என் சிஷ்யன்போல மாறுவேஷம் போட்டுக்கொண்டால், அது

வேறு விஷயம்'' என்று சக்கரவர்த்தியின் சந்தேகத்தை நீக்கினன் தான்சேன்.

அதுபோலவே அக்பர் சக்கரவர்த்தி, தான்சேனுடைய சிஷ்யன்போல் வேஷம் போட்டுக்கொண்டு, பிருந்தா வனத்துக்கு அவனுடன் புறப்பட்டுச் சென்றார்.

தான்சேன் குருமகராஜரைக் கண்டு தொழுது வணங்கினன். பிறகு சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டு நந்தவனத்திலே மாலைவரையில் மாறுவேஷம் போட்ட தன் சிஷ்யனுடன் பொழுதைப் போக்கினன். மீண்டும் குருவுக்கு முன்னல் சென்று ஏதோ ஒரு பாட்டைப் பாட ஆரம்பித்தான். அதை நடுவில் வேண்டுமென்றே தப்பாகப் பாடினன். குருதேவர் அவன் பாடுவதைத் திருத்துவதற்காக முதலில் சரியாகப் பாடிக் காட்டினர். அப்புறம் அதே மூச்சில் தொடர்ந்து பாடிக்கொண்டே போனர். பாட்டிலே லயித்து, இறுதியில் மெய்ம்மறந்து மூர்ச்சையாகி விட்டார்.

அக்பர் அசையாமல் பிரமித்துப்போய் உட்கார்ந்து விட்டார். பாட்டா அது? பிரமிக்கவைக்கிற சங்கீதம். அமிர்த தாரை. கல்லும் கரைந்துபோகும் உருக்கம்; இயற்கையே தேங்கித் திகைத்து நிற்கிற தெய்விக இனிமை; மயக்கம். உயிர்நிலையைப் பிடித்து உலுக்கி வைக்கிற அற்புதமான கானம்.

''தான்சேன்! நீ பெரிய பாக்கியசாலி. இத்தகைய குருதேவரைப் பெற்ற நீ பெருமைக்குரியவன். உன் சங்கீதத்துக்கு இணையாகப் பாடக்கூடிய யாரும் இருக்க மாட்டார்கள் என்றே நான் நினைத்தேன். ஆகா, இந்தப் பாட்டு அதை மிஞ்சிவிட்டது. இது என்ன தேவகானம்! இவர் பாட்டிலே மாத்திரம் இந்தத் தெய்விகசக்தி எப்படி வந்தது, தான்சேன், எப்படி வந்தது?'' என்று கேட்டார்.

அதற்குத் தான்சேன் லேசாகச் சிரித்தான். பிறகு பாதுஷாவை நோக்கி, ''கீர்த்திமிக்க சக்கரவர்த்தி

அவர்களே! இது தெளிவாகத் தெரியவில்லையா? என் குருதேவர் பாட்டிலே மட்டும் இந்தத் தெய்விக இனிமையும் சக்தியும் வருவதற்குக் கேட்பானேன்? என்னைப்போல அந்த மகான், சக்கரவர்த்திகளுக்காகப் பாடுவதில்லையே! எல்லாம் வல்ல சர்வேசுவரனுக்காக அல்லவா பாடுகிறார்? ஆண்டவன் ஒருவனைத் தவிர, வேறு யாருக்காகவும் பாடுவதில்லை அவர்! ஆகவே அது தேவகானம் என்பதில் என்ன சந்தேகம்?" என்றான்.

அக்பர்தான் நல்ல ரசிகராயிற்றே. அத்துடன் அவர் சிறந்த அறிவாளியுங்கூட.

"ஆமாம், தான்சேன். அதுதான் உண்மை" என்றார்.

இசை என்பது இந்த நாட்டில் அந்தக் காலம் முதலே பக்திக்கு ஒரு சாதனமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அந்த மரபில் வழிவழியாக வந்தவர்தான் ஹரிதாஸ் சுவாமிகள்.

வடநாட்டில் இருந்த பழம் பெரும் கீர்த்தனக் காரர்களைப் பற்றி இன்னும் சரியாக அறியமுடியவில்லை. பழங்காலத்தில் வாழ்ந்தவர்களாக மட்டும் அல்லாமல், இசைத் துறையில் புதிய சம்பிரதாயத்தைத் தோற்றுவித்த வர்களாகவும் இருக்கவேண்டும்.

இத்தகைய பழமையான வடநாட்டுக் கீர்த்தனக் காரர்களுள் ஹரிதாஸர் ஒருவர்; முதன்மையானவர். அவருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் மேலே குறிப்பிட்ட தான்சேன், பைஜூ பாவரா, கோபால லால், மதனராய், ராமதாஸ், திவாகர பண்டிதர், சோம பண்டிதர், ராஜா சங்கசேனர் ஆகியவர்கள். இவர்களில் தான்சேன், பைஜூ, ராமதாஸ் முதலியவர்கள் ஆண்டவன் திருக்கோயிலில் பாடும் முறையைவிட்டு, அரசவைகளில் பாடிப் பெரும் புகழ் பெற்றார்கள். இவர்களுடைய பாடல்களில் ஹரிதாஸரின் வேதாந்தக் கருத்துக்களும்

பக்தி ரசமும் இடம் பெற்றிருந்தன. ஆனால் சுவாமிகளோ தமது இருப்பிடத்தைவிட்டு, எத்தனையோ பேர் வேண்டி அழைத்தும் எங்கும் போகவில்லை. அவருடைய இனிமையான தெய்விகக் கவிதைக் கிருதிகளைப் பருக ஆயிரமாயிரம் மக்கள் நிதிவனத்துக்கு வந்து குழுமு வார்கள். அக்பர் பாதுஷாவைத் தவிர, ராஜா ராமசந்திர பதேல் என்பவரும் இந்த இசை நிதியைப் பருகிச் செல்ல பிருந்தாவனத்துக்கு வந்து சென்றார்.

ஹரிதாஸர் கி. பி. 1481-இல் பிருந்தாவனத்துக்கு அருகில் ராஜாபுர் என்ற ஊரில் பிறந்தார். ராதா கிருஷ்ணனை இஷ்ட தெய்வமாகப் போற்றி வணங்கிய சுவாமிகள் ராதையின் அவதார தினமான பாத்திரபத சுக்கில அஷ்டமியன்று பிறந்தார். அவர் சாதியில் சநாட்ய அந்தணர். இன்னும் அந்தப் பக்கங்களில் இந்த வகுப்பார் ஏராளமாக இருக்கிறார்கள். ஹரிதாஸருடைய தந்தையின் பெயர் கங்காதரர்; தாயின் பெயர் சித்திராதேவி.

ஹரிதாஸருக்குப் பக்திமார்க்கத்தை உபதேசித்த குரு ஆசுதேவி தேவஜி. இந்தக் குரு நிம்பார்க்க சம்பிர தாயத்தை சேர்ந்தவர். பக்தியின் மூலம் இறைவனை வழிபடுவது அந்தச் சம்பிரதாயத்தின் முக்கிய குறிக்கோள். அவரிடம் இந்த மார்க்கத்தை உபதேசம் பெற்றுக்கொண்ட ஹரிதாஸர் தமது இருபத்தைந்தாவது பிராயம் வரையில் குடும்பத்தோடு இருந்தார். அதற்குள் அவர் சம்ஸ்கிருதமும் புராணங்களும் வேதாந்தமும் இசையும் குறைவறப் பயின்றார். ராதாகிருஷ்ணனைத் தியானிக்கும்போது அவர் இந்த உலகத்தையே நினையாது, மெய்ம்மறந்து போயிருப்பார். இருபத்தைந்தாவது வயதில் அவர் பற்றுக்களைத் துறந்து துறவம் மேற்கொண்டார். ராஜாபுரை விட்டுப் பிருந்தாவனத்தில் நிதிவனம் என்ற தனிமையான, இயற்கை எழில் வாய்ந்த இடத்தில் வந்து தங்கினார்.

தம்மைக் கண்ணனின் நாயகியாகவும் தோழியாகவும் பாவித்துக்கொண்டு அவர் இயற்றிப் பாடிய இன்னிசைப் பாடல்கள் பிருந்தாவனம் எங்கும் எதிரொலித்தன. அதைக் கடந்து வெகு தூரம் வரைக்கும் அவர் பாடல்களின் பெருமை சென்று பரவியது. அருமையான உபநிஷதக் கருத்துக்களையும் பக்தி மார்க்கத்தின் சுலபமான நயங்களையும் கொண்ட சிறந்த பாடல்களை அவர் நாள்தோறும் உலகுக்கு வழங்கிய வண்ணம் இருந்தார். தென்னாட்டில் வாழ்ந்த மகான் தியாகராஜரைப் போலவே இவரும் தொண்ணூற்றைந்தாவது பிராயம் வரையில் இறைவன் புகழ் பாடியே வாழ்ந்திருந்தார்.

மிகவும் கடினமான ஒரு முறையை எடுத்துக்கொண்டு, அந்த முறையில் பல பாடல்களை இயற்றி அதை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார் ஹரிதாஸர். அவருடைய கீர்த்தனைகள் சௌதாளம், ஜாபம், தமார் முதலிய தாளங்களில் அமைந்தவை.

அவர் கையாண்ட ராகங்கள் பழமையானவை; சுத்தமானவை. இன்ன நேரத்தில், இன்ன ராகம் பாட வேண்டும் என்னும் வரையறை வகுத்து அவர் பாடினார். ரஸபாவங்கள் நிறைந்த பாடல்களாகவே கிருஷ்ண சரித வரலாறுகளை அவர் அரிய முறையில் பாடியிருக்கிறார்.

ஹரிதாஸரின் பக்தி கனியும் சுவையான பாடல்களை வைஷ்ணவக் கோயில்களில் இப்போதும் இசையோடு அவர் வரையறை செய்தபடியே பாடுகிறார்கள். இந்தப் பாடல்களில், 'ஸ்ரீஹரிதாஸ் கே ஸ்வாமி ச்யாம்' என்ற முத்திரை இருப்பதைக் காணலாம். இவற்றைக் கோயில்களில் பாடும் பத்ததியை நானூறு ஆண்டுகளுக்கு மேலாக, பரம்பரையாகக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். மிகச் சிறந்த இந்த இன்னிசைக் கீர்த்தனங்கள்

பாரதநாடு முழுவதுக்கும் பொதுவானவை. ராதாஷ்டமி யன்று ஹரிதாஸரின் பிறந்த நாளை நாடெங்கும் கொண்டாடுகிறார்கள். அந்த அருள் பெற்ற கவிஞருக்கு உவப்பான பக்தி நாடெங்கும் பரவித் தழைத்தால் அதுவே அவருக்குச் செலுத்தும் சிறந்த கைம்மாறாகும். அந்தப் பக்தி தழைக்கவே அவர் பல நாட்கள் வாழ்ந்தார்; பல பாடல்கள் இயற்றியருளினார்.

3

பக்த கனகதாசர்

ஆண்டவனுடைய அருளைப் பெறுவதற்குக் குலம் தடையாக இருக்க முடியுமா? வேறு எந்த விதத்தில் இருக்க முடியுமோ, முடியாதோ, பக்தி மார்க்கத்தின் மூலம் குலம் என்ன, எதுவுமே தடையாக இருக்க முடியாது என்பதைத் தமிழகம் தெளிவுறக் காட்டியிருக்கிறது. நந்தனார் என்னும் திருநாளைப் போவார், திருப்பாணாழ்வார் ஆகிய இருவருக்கும் குலம் என்பது தடையாக இருந்த நிலை அடியோடு விலகிவிட்டது. அவர்களுடைய கடவுள் பக்தி, குலத்தின் கட்டுப்பாடுகளைத் தகர்த்து எறிந்துவிட்டது. ஆண்டவனுடைய திருவருளைப் பெறுவதற்கு எதுவுமே தடையாக இருக்க முடியாது என்பதுதான் நம் முன்னோர்கள் கண்ட உண்மை. கன்னட நாட்டில் இதற்கு மற்றோர் உதாரணமாகத் திகழ்ந்தவர் கனகதாசர்.

அவர் பக்தர் மட்டுமல்ல; மகான் தியாகராஜரைப் போல, மகான் ஹரிதாசரைப் போல அருள் பெற்ற கவிஞரும் ஆவார். இன்றைக்கும் இவருடைய கிருதிகள் கன்னடத்தில் சிறப்பாகக் கையாளப்படுகின்றன. பக்திப் பெருக்கை மக்களிடையே பரவி ஓடச் செய்தன இவர் இயற்றிய இனிய பாடல்கள்.

கனகதாசர் என்பது இவருடைய காரணப் பெயர் தான். அவருடைய இயற்பெயர் அவர் வாழ்நாளிலேயே மறைந்துவிட்டதாம். இவர் பெற்றோரை இழந்து, ஆதரிப்பவர் யாருமின்றி இளம் வயதில் அநாதையாக அலைந்து கொண்டிருந்தார். நெஞ்சிலே ஹரியின் நினைவு. அதனால் வலுப்பெற்று உறுதி பெற்ற வைராக்கியம். உலகில்

வேறு எதிலுமே இவருக்குப் பற்ரே, அக்கறையோ இல்லை. அதை விளக்குவதுபோல அந்த நாளில் இவர் வாழ்வில் நடந்த சம்பவம் ஒன்று:

தெய்வச் செயலாக இவருக்குத் தங்கப் புதையல் ஒன்று கிடைத்தது. எடுத்துப் பார்த்தால் அத்தனையும் பொற் காசுகள்; தங்கக் கட்டிகள். ஹரி பக்தியினுல் வைராக்கியத்தை முன்பே நிதியாகப் பெற்றிருந்த இவருக்கு இந்தப் பொன் நிதியினுல் என்ன பயன்? அதை இவர் ஏழை எளியவர்களுக்கெல்லாம் எடுத்து வழங்கிவிட்டார். பொன் இவருக்குத் தூசிக்குச் சமமாகி விட்டது. உலகில் எல்லாரும் பொன்னுக்கு அடிமை யாவது கண்கூடாக இருக்க, இவருக்குப் பொன் அடிமை யாகிவிட்டது; பொன் இவருக்கு ஒரு பொருட்டாகவே படவில்லை. அதனுல் அன்று முதல் இவரைக் கனகதாசர் என்ற பெயரால் குறிப்பிட்டார்கள். அதுவே நிலைத்தும் போய்விட்டது. இயற்பெயர் என்னவென்றே தெரியாமல் போய்விட்டது.

கனகதாசர், 'பாட' என்ற ஊரில் பிறந்தவர். இந்த ஊர் தார்வார் பகுதியில் பங்காபூர் என்ற தாலூகாவைச் சேர்ந்த கிராமம். பிறப்பினுல் இவர் வேடஜாதியைச் சேர்ந்தவர். குறும்பர் இனத்தைச் சேர்ந்தவர் என்று கூடச் சிலர் கருதுவதுண்டு. பீரே கௌடர் என்பது இவருடைய தந்தையின் பெயர். பச்சம்மா என்பது தாயின் பெயர். மகாபாரத காலத்தில் வாழ்ந்த விதுரரே இந்த யுகத்தில் கனகதாசராக அவதரித்திருக்கிருர் என்று பக்தர்கள் சொல்லுவார்கள்.

இவரைப்பற்றிய சுவையான நிகழ்ச்சி ஒன்று கன்னட நாட்டில் வழங்குகிறது. புரந்தரதாசருக்குச் சம காலத்தில் வாழ்ந்தவர் கனகதாசர். வியாசராயர் என்ற பெரியார் ஒருவருடைய சீடர் இவர். இவருடன் பல சீடர் களும் வியாசராயரிடம் பயின்று வந்தார்கள்.

ஒரு நாள் ராயர் தம் சீடர்கள் எல்லாருக்கும் வாழைப் பழத்தை ஒவ்வொன்ருகப் பிய்த்துக் கொடுத்து, "பிறர் யாரும் காணுதபடி இந்தப் பழத்தைத் தின்றுவிட்டு வாருங்கள்" என்ருர்.

எல்லாச் சீடர்களும் அதை வாங்கிக் கொண்டு போனுர்கள். சுவர் மறைவிலோ, மரத்தடியிலோ போய் நின்று கொண்டு, ஒருவர் கண்ணிலும் படாமல் பழத்தை உறித்துத் தின்றுவிட்டு வந்தார்கள். கனகதாசர் மட்டும் பழத்தைத் தின்னுமல் திருப்பிக் கொண்டு வந்து குருநாதரிடமே கொடுத்தார்.

"ஏன், இதை உன்னுல் யார் கண்ணிலும் படாமல் தின்ன முடியவில்லையா? ஏன் திருப்பிக் கொண்டு வந்துவிட்டாய்?" என்று கேட்டார் ராயர்.

"யார் கண்ணிலும் படாமல் என்னுல் தின்ன முடியவில்லை!" என்ருர் கனகதாசர்.

"இது என்ன பெரிய விந்தை! மற்றவர்கள் ஒருவர் கண்ணிலும் படாமல் பழத்தைத் தின்றுவிட்டு வந்திருக்கிருர்களே! உனக்கு மட்டும் என்ன?"

"நான் என்ன செய்வேன்? மனிதர்கள் இல்லாத இடம் உண்டு. மனிதருக்குத் தெரியாமல் எதையும் செய்துவிடலாம்; ஏமாற்றிவிடலாம். ஆனுல் ஆண்டவன் இல்லாத இடம் உண்டா, சுவாமி? அவனுடைய பார்வைக்குத் தப்பிய இடம் ஒன்றையும் காணேமே. நான் எப்படி அந்த ஆண்டவன் கண்ணில் படாமல் தின்ன முடியும்? என்னுல் முடியவில்லையே!" என்ருர் கனகதாசர்.

வியாசராயர் தம் சீடனின் மனநிலையைப் பெரிதும் மெச்சிப் பாராட்டிக் கொண்டாடினுர். பெரியவற்றுக்கெல்லாம் பெரியவராய், அணுவிலும் சிறியவராய் விளங்கும் கடவுள், உண்மையான பக்தனுக்கு எங்கும் நிறைந்து, எப்போதும் நிறைந்துதான் தோன்றுகிருர்.

அந்தக் கடவுளுக்கு உயர்வு, தாழ்வு என்பவை இல்லை. கனகதாசர் கடவுளை அறிந்து உணர்ந்த முறை இதுதான். குருநாதருக்கு அப்போதுதான் கனகதாசருடைய மகிமையும் பெருமையும் புரிந்தன.

கனகதாசர் என்ற காரணப் பெயர் வழங்க மற்றொரு நிகழ்ச்சியும் நேர்ந்ததுண்டு. கனகன் என்பது இவருக்கு இயற்பெயராக இருக்கக் கூடும் என்று இதிலிருந்து தெரிகிறது.

உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ணருடைய ஆலயம் பிரசித்தமானது. அந்த ஆலயத்தின் ராஜகோபுர வாசல். வைதிகர்கள் கூட்டம் கூட்டமாய்க் கோயிலுக்குள் போய் வருகிறார்கள். கோயிலை மாவிலைத் தோரணங்களாலும் வாழை, தென்னைக் குலைகளாலும் கட்டி, பூரண கும்பங்களும் கண்ணாடிகளும் கொண்டு அலங்கரித்திருக்கிறார்கள். பெரிய உற்சவம் நடக்கிறது. பேரி, நகராக்கள் முழங்குகின்றன. இடையிடையே கொம்புகள் ஒலிக்கின்றன. மங்கள வாத்தியங்கள் இசைக்கின்றன. கண்ணனுக்குப் பிரியமான வேய்ங்குழலின் நாதம் மக்களின் செவியையும் மனத்தையும் இணைத்து இழுக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வேதகோஷம் எழும்பிக் கேட்கிறது. மத்வக் குளத்தில் முழுகி எழுந்து, மடி உடுத்து. வேத மந்திரங்களை ஓதிக் கொண்டே பல பண்டிதர்கள், வித்துவான்கள் ஆலயத்தினுள்ளே நுழைகிறார்கள்.

இந்தச் சமயத்தில் கோபுர வாசலுக்கு முன்னால் ஒருவன் நின்றான். குட்டையான ஆசாமி. அழுக்கேறிய ஆடைகள். ஒரு கையிலே தாளம், மற்றொரு கையிலே சுரைப் பிருடைத் தம்பூரா. தோளிலிருந்து ஜோல்னாப் பை ஒன்று தொங்குகிறது. தாளத்துக்கும் சுருதிக்கும் இசைய அவன் வாயிலிருந்து இனிமையான கீர்த்தனை ஒன்று வெளிவருகிறது. காலும் ஒரு கையும் தாளம் போடுகின்றன. கண்கள், எதிரே தெரியும் கண்ணனுடைய, இணையற்ற குழந்தை வடிவத்திலே லயித்து நிற்கின்றன.

அவன் தன் உடலேயே மறந்து பரவசமான நிலையில் ஊன்றிவிட்டான். வருவோர் போவோரைப் பற்றிய நினைவே அவனுக்குச் சிறிதும் இல்லை.

ஆனால் தாசரி ஒருவன் கர்ப்பக்கிருகத்துக்கு இவ்வளவு அருகாமையில் நிற்பது முறையாகுமா? வைதிகர்கள் கூட்டம் இதை அநுமதிக்குமா? அதோடு மடியாக, ஆசாரத்துடன் வைதிகர்கள் ஓடியாடும் வழியை அல்லவா அவன் மறைத்துக்கொண்டு தடையாக நிற்கிறான்! அவர்களின் பொறுமை எல்லை கடந்தது. நிதானம் மீறியது.

ஒருவர் முன்னால் வந்து, "அடே மூளையற்றவனே, நீ எங்கே நிற்கவேண்டும் என்பது உனக்குத் தெரிய வில்லையா? இது வைதிகர்கள் நடமாடும் வழி. இது புரியாமல் வழியை அடைத்துக்கொண்டு நிற்கிறாயே. இங்கிருந்து நகர்ந்து போ!" என்று கடிந்து கொண்டார்.

அந்தத் தாசரியின் காதில் இந்தப் பேச்சு விழவில்லை அவன்தான் தன்னை மறந்து நிற்கிறானே! மற்றவர்களுக்கு அவன் வேஷம் போடுவதாகத் தோன்றியது. வேண்டு மென்றே பிடிவாதமாக அழுத்தம் செய்கிறான் என்று எண்ணிய மற்றொருவர் ஆத்திரமாக முன்னால் வந்து, "அந்தப் பிரஷ்டனை நெட்டிப் பிடித்துத் தள்ளுங்கள். வாயினால் சொன்னால் மரியாதையாகக் கேட்கமாட்டான். வெறும் தடியன். நாலு வீட்டில் பிச்சை எடுத்தாலாவது நாலு பிடிச் சோறு கிடைக்கும். இங்கே வந்து நின்று அழும்பு பண்ணுகிறான். பிடித்துத் தள்ளுங்கள், இவனை!" என்று கர்ஜித்தார்.

பிறகுதான் தாசரி கண் விழித்துப் பார்த்தான். அங்குள்ள நிலைமை அப்புறம்தான் அவனுக்குப் புரிந்தது. மெல்ல அங்கிருந்து நகர்ந்தான். இந்த மனிதர்களின் சுடு சொற்களுக்கு அவன் சிறிதும் முகத்தைச் சுளித்துக்

கோபம் கொள்ளவில்லை. பதிலே பேசாமல் அங்கிருந்து திரும்பினான்.

மெதுவாக நடந்து, கோயிலைச் சுற்றிக்கொண்டு பின்புறமாக வந்தான். அங்கே கர்ப்பக்கிருகத்தின் பின் புறச் சுவரில் தலையைச் சாய்த்துக்கொண்டு, "ஹரே கிருஷ்ணா!" என்று நின்றுவிட்டான். அங்கே வந்து அவனை யார் தடைச் செய்யப் போகிறார்கள்? அவன் கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல் பெருகியது. கண்ணபிரானைக் கண்குளிரக் காணமுடியாமல் போய் விட்டதே என்று அவன் உள்ளம் ஏங்கி அழுதது.

"அப்பனே! என்னை ஆண்ட பிரானே! நான் குலத்தில் வேடன் ஆனதால் உனக்கும் வேண்டா தவன் ஆகிவிட்டேனா? நீ எல்லாருக்கும் தந்தை இல்லையா? மக்கள் குலத்தில் உனக்கு ஏற்றத் தாழ்வு உண்டா? காட்டு யானையின் பக்திக்கு மெச்சிக் கருணை காட்டியவனாயிற்றே நீ! இந்த வேடனைக் கைவிட்டு விடுவாயா? எந்தையே! எம்பிரானே! தயை செய்; நீயும் கைவிட்டால் என்னைக் காத்து ரட்சிப்பவர் யார்?" என்று முறையிட்டுக்கொண்டான். அந்த முறையீடு அற்புத மான கவியாக வெளிப்பட்டது. அவனுடைய உள்ளத்தில் கசிந்த சோகமே அப்படிப் பாட்டாக உருப்பெற்று வந்தது.

"ஹரியே, உன் தாமரைப் பாதங்களை விட்டு அகன்றால் பிழைக்க முடியுமா? வீண் வார்த்தை ஏன்? அறிந்து சொல்கிறேன், ஐயா! தாய் தந்தையரைப் பிரிந்து தவம் செய்யலாம்; தாயாதிகளையும் பந்துக்களையும் விட்டு விடலாம். பிறர் வேண்டிய காலத்தில் உயிரையும் கொடுத்து விடலாம். மானம்-அவமானம் என்பவற்றையும் விட்டுவிடலாம். ஆனால் ஜீவராசிகளின் தலைவனாகிய ஆதிகேசவனே, மாயம் மிகுந்த கண்ணனே! உன் பாதங்களை மட்டும் விடவே முடியாது" என்பதே அவர் அப்போது பாடிய பாடலின் பொருள்.

என்ன ஆச்சரியம்! அவர் பாடி முடித்த அந்தக் கணமே இடி இடித்தது போல் ஒரு பெரிய சத்தம் கேட்டது. கல்லால் கட்டப்பட்ட அழுத்தமான சுவர் வெடித்தது. பெரிய இடைவெளி தெரிந்தது. அந்த இடை வெளிக்குச் சரியாய் உள்ளே இருந்த கிருஷ்ண விக்கிரகம் திரும்பி நின்றது. பக்தியால் மெய்ம்மறந்த தாசரி தெய்வ வடிவத்தைக் கண்ணாரக் கண்டான்; பாடினான்; பரவசக் கூத்தாடினான். அவன் பெயர்தான் கனகன்; பின்னால் கனகதாசர் என்று பெயர் பெற்ற பக்திமான். கிருஷ்ணர் கோயிலின் பின்புறச் சுவரில் தோன்றிய இந்த இடைவெளி 'கனகன் துவாரம்' என்று பெயர் பெற்றது.

இந்த அதிசயத்தை உடுப்பியிலுள்ள கோயிலில் இன்றும் காணலாம். கோயிலுக்கு வருபவர்கள் முதலில் 'கனகன் துவாரம்' என்ற அந்த இடைவெளி மூலமாகவே கிருஷ்ண தரிசனம் செய்கிறார்கள். 'கனகன் துவாரம்' என்றால் பக்தியின் வழி. பக்தியின் பாதையில் சென்றால்தானே ஆண்டவனைக் காணலாம்?

காகிநில என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் ஆதிகேசவப் பெருமாளே கனகதாசரின் வழிபடு கடவுள். ஆயினும் பேலூர்ச் சென்னகேசவரையும் இவர் தம் கிருதிகளில் பாடித் துதித்திருக்கிறார். காகிநில ஆதி கேசவர் என்ற முத்திரையே தம் கிருதிகளில் இவர் வைத்து அமைத்திருப்பதைக் காணலாம். ஏராளமான கீர்த்தனைகளை இவர் இயற்றியிருப்பதோடு நளசரித்திரம் என்ற ரசம் பொருந்திய காவியத்தையும் இவர் அருமை யாக இயற்றியிருக்கிறார். இவருடைய மற்றொரு காவியத்தின் பெயர் மோகன தரங்கிணி என்பதாகும்.

இவருடைய பிரபந்தங்களில் 'ஹரிபக்தி சாரம்' என்பதும் ஒன்று. தெளிந்த நடையில் அமைந்த இது பல மக்களின் பேராதரவைப் பெற்றது. நம் தினசரி வாழ்க்கைக்கு உதவும் ஒளியை, கவர்ச்சியும் இனிமையும் நிறைந்த இந்தப் பாடல்களிலிருந்து நாம் பெறலாம்.

அதற்கு இதோ சில உதாரணங்கள்:

"கோபம் என்பது இந்த உடலில் குடியேறிய பாபம். நரகக் குழி தப்பாது. இது சாஸ்திரம் தீர்மானித்தன்றோ?" என்று கோபத்தால் விளையும் தீமையைப்பற்றிக் கூறுகிறார். "ஏற்பது பெரிய துன்பம்; துன்ப வாழ்க்கையைச் சுட்டுப் பொசுக்கு" என்று இரத்தலில் இகழ்ச்சியையும் பிறரிடம் கையேந்தி யாசிப்பதில் மனம் படும் வேதனையையும் நினைவுறுத்துகிறார். அகந்தையை விரட்டுகிறபோது, "கோபுரத்தைப் பொம்மை தாங்குகிறதா?" என்று கேட்கிறார்.

"நான் ஏழை; ஆனால் நீயே உலகுக்கெல்லாம் படியளப்பவன். ஆராய்ந்தால் நான் புத்தியில்லாதவன்; மதியில்லாதவன். அரிய பெருமையையுடைய கைவல்ய நாதன் நீ!" என்று வெளிவரும் எளிய சொற்களிலே அவருடைய தூய உணர்ச்சி பொங்கி நிற்பதைக் காணலாம்.

ஆண்டவனுடைய பெருமையும் நம்முடைய சிறுமையும் இவருடைய வாக்கைக் கேட்டவுடன் நமக்கு நினைவு வரும். "பக்தியே முக்திக்கு காரணம். மனிதர்களின் துஷ்டச் செயல்கள் அடங்க, உன் திருநாமத்தின் நினைவு ஒன்றே போதுமானது" என்று கடைசியில் வாழ்க்கையின் குறிக்கோளையும் அதற்குச் சுலபமான வழியையும் எவ்வளவு நுட்பமாகக் கனகதாசர் சொல்லியிருக்கிறார்!

இவர் சிறந்த ஹரி பக்தர் என்பதுடன்கூட மிகச் சிறந்த கவியும் ஆவார். கிருதிகளைக் கவிதையாகவே புனைந்திருக்கிறார். வேதாந்த உட்பொருளான உயர்ந்த கருத்துக்களைப் புதிர் கூறி விளக்குவதுபோல் பாட்டிலே அமைந்திருப்பது மிகவும் அழகாக இருக்கிறது. இவை கன்னட மொழியில் இன்றைக்கும் சிறப்பாகக் கையாளப் படுகின்றன.

கனகதாசரும் மற்ற சில மகான்களைப்போல நீண்ட காலம் வாழ்ந்தவர். இவர் அமரராகும்போது இவருக்கு எண்பது வயது. தம் நீண்டகால வாழ்வால் பிறரையும் உய்வித்தார். பக்திப் பெருக்கை மக்களிடையே பரப்பி, பேரின்ப நிலையையும் புகழையும் அடைந்தார். ஆண்டவனுக்கு உகந்த குலத்தைச் சேர்ந்த மகான் கனகதாசர்,

4

மகான் ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்

காஷ்மீரத்துப் பண்டிதர் ஒருவர் மகா கர்வத்துடன் நாடெங்கும் திக்விஜயம் செய்து வந்தார். மகா பண்டித கேசவ காஷ்மீரியின் பெயரை எடுத்தாலே ஆங்காங்கு உள்ள பண்டிதர்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனம்தான்.

அவர் ஒரு சமயம் வங்காளத்தின் கீழ்ப் பகுதியான நவத்வீபத்துக்கு (நதியா என்ற நகரம்) திக்விஜயம் செய்தார். யானை, குதிரையுடன் வாத்தியம் முழங்க அவர் அட்டகாசத்துடன் வந்து இறங்கினார். வடக்கு, மேற்குப் பகுதிகளிலுள்ள வித்வான்கள், பண்டிதர்கள் எல்லாரையும் வாதுக்கு அழைத்து அவர் வெற்றிக் கொடி நாட்டியிருந்ததால் அவர் புகழ் அவருக்கு முன்னதாகவே நவத்வீபத்துக்கு எட்டியிருந்தது.

இங்குள்ள பண்டிதர்களையும் வாதிலே வென்று விட்டால் கேசவ காஷ்மீரியின் வெற்றிக் கோலம் பூர்த்தியானதுமாதிரிதான். ஆகவே அந்தப் பகுதியிலுள்ள பண்டிதரை அவர் அறைகூவி அழைத்தார். தம்முடைய உடைமை ஒன்றுவிடாமல் பணயம் வைப்பதாக முழக்கினார்.

ஆனால் அவரை எதிர்த்து வாதாட எவருக்குமே துணிவில்லை. நவத்வீபத்தில் இருக்கும் பெரிய பெரிய பண்டிதர்கள் எல்லாம் தலையை வெளியே காட்டாமல் பதுங்கித் திரிந்தார்கள். சரஸ்வதி தேவியே அவருடைய நாவில் குடியிருப்பதாக அத்தனை பேரும் நம்பிவிட்டார்கள். பெரிய பெரிய பண்டிதர்களில் எதிர்த்துப் பேசக்கூடியவர்கள் மூன்றே மூன்று பேர்தான். இவர்களால்தான்

நவத்விபத்தின் மானம் நிலைக்க வேண்டும். எல்லாரும் சேர்ந்து நிமாயி பண்டிதனையே தேர்ந்தெடுத்தார்கள். நிமாயி என்பது சைதன்யரின் செல்லப் பெயர். வேம்பு என்று பொருள். வேப்ப மரத்தின் கீழே அவர் பிறந்ததால் அவருடைய தாய் சசிதேவி அப்படித்தான் அழைத்தாள். அவருடைய தந்தை வைத்த பெயர் விசுவம்பரர். முதிர்ந்த அறிவும் பல சாஸ்திரங்களில் பாண்டித்தியமும் பெற்றவர் ஜகந்நாத மிச்ரர். அவருடைய பத்தாவது பிள்ளை சைதன்யர். கடைசிப் பிள்ளை. மூத்தவர்களில் எட்டுப் பேர் பெண்கள்; ஒரே அண்ணு; விசுவரூபர் என்று பெயர்.

அந்த நிமாயி பண்டிதனுக்கு அப்போது வயது பதினுன்குதான் முடிந்திருந்தது. தர்க்க சாஸ்திரத்தில் எவரையும் வெல்லும் ஆற்றல் அவருக்கு ஏற்பட்டிருந்தது. கங்காதர பண்டிதர் என்ற குருவுக்கு முக்கியமான சிஷ்யர்கள் மூன்றுபேர். அவர்களிலும் முக்கியமானவன் நிமாயி. பெரிய பிள்ளைகளையெல்லாம் தர்க்கத்தில் கடினமான கேள்விகள் கேட்டுத் திணற அடித்து விடுவான். அதனுல் அவனையே வாதிடுவதற்குப் பொறுக்கியெடுத்தார்கள்.

கங்கை யாற்றங்கரையில் மாலை வேளையில் பல மாணுக்கர்களுடன் உட்கார்ந்து சாஸ்திர சர்ச்சை செய்து கொண்டிருந்தார் அவர். கேசவ காஷ்மீரி அந்தப் பக்கம் வந்து இவர்களைப் பார்த்தார். நிமாயி பண்டிதன் இவனுகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டார்.

"நீதான் இந்த ஊரில் வியாகரணம் போதிக்கிருயோ? உன் பெயர்தானே நிமாயி என்பது?" என்று விசாரித்தார்.

"ஆமாம் சுவாமி, தாங்கள் இங்கே வந்து எங்களுக்குத் தரிசனம் கொடுத்தது எங்களுடைய பாக்கியம்."

"என்னைத் தெரியுமாஉனக்கு?"

"தெரியும் சுவாமி. திக்விஜய கோலாகல கேசவ மகாபண்டித காஷ்மீரியை நாங்கள் அறியாதிருப்போமா?"

"சரிதான்."

"ஒரு வேண்டுகோள், சுவாமி!"

"கேளேன்!"

"இதோ எதிரே கங்கை நதி ஓடுகிறது. இதன்மேல் ஒரு கவிதை பாடவேண்டும். அதைக் கேட்டால் எங்கள் பாவமெல்லாம் விலகுமே."

கேசவ காஷ்மீரி நின்ற இடத்திலேயே மடமட வென்று ஒரு கவிதை இயற்றி, பல சுலோகங்களாகப் பாடினர். எல்லாரும் வியப்போடு கேட்டுக்கொண் டிருந் தார்கள்.

"சுவாமி, நடுவில் ஒரு சுலோகம் சொன்னீர்களே, அதன் பொருள் என்ன?"

"எந்தச் சுலோகத்தைச் சொல்கிருய்?"

அவர் ஒரே தடவை பாடிய சுலோகத்தை அந்தக் கணமே திருப்பிப் பாடிக் காண்பித்து, "இதன் பொருள் என்ன என்றுதான் தெரிந்துகொள்ள விரும்பினேன்."

அத்தனை சுலோகங்களையும் சைதன்யர் ஒரு முறை பாடிக் காண்பித்த போது கேசவ காஷ்மீரி திகைத்துப் போய் நின்று விட்டார்.

"காஷ்மீரி சுவாமிகளே! உங்கள் கவிதைகளின் பொருள்களை விளக்கட்டுமா?" என்று கேட்டு அவ்வாறே ஒன்று விடாமல் விளக்கமும் கூறினர் நிமாயி.

"சுவாமி, உங்கள் கவிதையின் நயத்தையும் உணர்ந்தேன். குறையையும் கண்டு கொண்டேன்!" என்று காவிய லட்சணத்தை வைத்து, காஷ்மீரியின் சுலோகங்களை அலசித் தீர்த்து விட்டார் நிமாயி.

'பார்த்தால் ஒரு பையன்; இவனிடத்திலா எனக்குத் தோல்வி!' என்று வாயடைத்துப் போய்விட்டார் காஷ்மீரி.

"கவிதை புனையும் ஆற்றல் கடவுள் அருள் காரண மாக உண்டாவது. வெறும் கல்வியறிவினால் குற்றமற்ற கவிதைகளை இயற்றிவிட முடியாது. எனவே குற்றம் குறை இருப்பது சகஜம். இதற்காகத் தாங்கள் வெட்கப் பட வேண்டியதில்லை. அருள் சுரக்கும் அமுத கவிதை களைப் பாடவேண்டுமானால் இந்த அகம்பாவம் மட்டும் இருக்கக் கூடாது" என்று பொருள்படும் அருமையான கவி ஒன்றை அந்தக் கணமே பாடினார்.

கேசவ பண்டிதருக்கு அன்று இரவு தூக்கமே பிடிக்க வில்லை. பொழுது விடிவதற்குள் சைதன்யரைப் பார்க்க ஓடி வந்தார். பார்த்ததும் காலடியில் விழுந்தார். கண்ணீர் ஆறாகப் பெருகியது. நாத் தழுதழுத்தது. சைதன்யர் பதறிப்போய் அவரைத் தூக்கி நிறுத்தி, "இதென்ன அபசாரம்! மகா பண்டிதரான நீங்கள் சிறுவ னாகிய என் காலில் விழுவது முறையாகுமா?" என்று அவரை அணைத்துக் கொண்டார்.

கேசவ காஷ்மீரி தம் உடமைகள் யாவையும் நவத் வீப வாசிகளுக்கே தானமாக வழங்கிவிட்டு, சந்நியாசம் மேற்கொண்டு விட்டார். சைதன்யரின் வெற்றி ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடப்பட்டது.

கிருஷ்ண சைதன்யருடைய தந்தை ஜகந்நாத மிச்ரர் ஸ்ரீஹட்டம் என்ற சில்ஹட்டைச் சேர்ந்தவர். அவர் காலத்தில் வங்காளத்தில் பட்டாணியர் ஆட்சியிருந்தது. ஹுசேன் ஷா என்பவன் அரசனாக இருந்தான். ரூபன், ஸநாதனன் என்ற இரண்டு அந்தணர்கள் அவனுடைய முக்கிய மந்திரிகளாக இருந்தார்கள். நாடு முழுவதும் இந்து – முஸ்லிம் ஒற்றுமை நிலவியது. ஜகந்நாத மிச்ரருக்கு வரிசையாக எட்டுப் பெண் குழந்தைகள். பிறகு தான் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. விசுவரூபன் என்று

பெயரிட்டார்கள். அடுத்தபடிதான் சைதன்யர்; பததாவது குழந்தை. விசுவம்பரர் என்று பெயரிட்டார்கள். தாய் சசிதேவி மட்டும் கடைசிப் பிள்ளையைச் செல்லமாக நிமாயி என்று அழைத்தாள். நிமாயி என்ருல் வேம்பு என்று பொருள். ஜாதகம் கணித்ததில் ஒரு மகா புருஷனுக்குரிய அம்சங்கள் அவருக்கு இருந்தன. மாசு மறு இல்லாத பசும்பொன் மேனி படைத்த குழந்தைக்கு 'கௌரஹரி' என்று மற்ருெரு பெயர் சூட்டிஞர்கள். அது கௌராங்கர் என்று பின்ஞல் மாறியது. அழும் குழந்தையிடம் ஹரி நாமத்தைச் சொன்ஞல் போதும்; அழுகை ஓய்ந்துவிடும். ஹரிநாம வாசனை நடுவில் வந்ததல்ல; கர்ப்பத்திலேயே உண்டானது.

விசுவரூபர் தந்தையைப்போல் பெரிய பண்டிதர். ஆனுல் விவாகம் செய்வதற்கு முன்பே அவருக்கு வாழ்க்கையில் ஒரு விரக்தி வந்துவிட்டது. பற்றற்ற விரக்தியும் வைராக்கியமும் பெற்று அவர் ஒருநாள் நடு நிசியில் அவர் வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்டார். குளிர்ந்த கங்கை ஆற்றில் இறங்கிஞர். ஞானவேட்கை நிரம்பிய மனத்துடன் ஆசையை இக்கரையிலேயே அறுத்தெறிந்துவிட்டு எங்கோ போய்விட்டார்.

பெற்ருேர் மனம் துடித்தது. சைதன்யரின் முகத்தைப் பார்த்து அவர்கள் ஆறுதல் பெற்ருர்கள். துடுக்குத்தனமும் விஷமமும் நிறைந்திருந்த சைதன்யர் அன்றிலிருந்து அடியோடு மாறிவிட்டார். ஒன்பது வயதிலிருந்தே அவருக்கு இலக்கண விதிகளை ஆராயும் ஆற்றல் பிறந்தது. தந்தை உபநயனம் செய்து வைத்தார். சைதன்யருடைய உடம்பின் காந்தியும் அவர் ஆடையும் காண்போர் சொக்கும்படி இருந்தன.

ஜகந்நாத மிச்ரர் காலமாகிவிட்டார். சசிதேவி வறுமை மிஞ்சிய குடும்பத்தை வைத்துக்கொண்டு அல்லலுற்ருள். சைதன்யரின் அழகு முகம் ஒன்றே அவளுக்கு ஆறுதலும் உயிர்ப் பற்றுக்கோடுமாக

இருந்தது. பிறகு எப்படியோ அவரைக் கங்காதர பண்டிதரிடம் பாடம் கற்க அனுப்பினாள். பதினான்கு வயதில் அவருக்கு வியாகரணம், தர்க்கம், நியாயம் ஆகியவற்றில் நல்ல புலமை இருந்தது. அவருடன் ரகுநாதன் என்பவர் கூடப் பழகியவர். அவர் நியாய சாஸ்திரத்தில் 'தீதிதி' என்று ஒரு பெரிய நூல் எழுதிக் கொண்டிருந்தார். இது சைத்னயருக்குத் தெரியாது.

அவரும் அதே சாஸ்திரத்தின் விரிவான ஆராய்ச்சி ஒன்றை ஏறக்குறையப் பூர்த்தி செய்திருந்தார். இருவரும் ஒரு நாள் படகில் புறப்பட்டுப் போகும்போது, சைதன்யர் தம் நூலை ரகுநாதனுக்குப் படித்துக் காட்டினார். ரகுநாதன் முகம் வாடிவிட்டது. சைத்ன்யரின் புத்தகமே உலகில் ஓங்கி நிற்கும் என்பதில் ரகுநாதனுக்குக் கொஞ்சம்கூடச் சந்தேகமேயில்லை. அவன் வாட்டமடைந்திருப்பதைக் குறிப்பால் உணர்ந்தார் சைதன்யர். "என்னவோ போல இருக்கிறாயே; ஏன் உடம்புக்கு என்ன?" என்றார்.

ரகுநாதன் துக்கம் தொண்டையை அடைக்க 'ஓ'வென்று அழுதுவிட்டான். "நான் எழுதிய நூலே சிறப்பாக இருக்கும் என்று கனவு கண்டேன். ஆனால் அது உன் நூலுக்கு இணையாகாது. நான் எழுதியது வீண்! என் ஆசை வீணாயிற்று!" என்றான்.

சைதன்யரின் நெஞ்சம் இளகிவிட்டது. "இதற்காகவா வருத்தப்படுகிறாய்? நியாய சாஸ்திரத்தில் நீயே வல்லவனாக இரு" என்று சொல்லி, தம் அரிய நூலை அப்படியே ஓடும் கங்கையில் வீசி எறிந்தார்.

சைதன்யர் அன்றைக்கே நியாய சாஸ்திரத்துக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டார். அவர் மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்த ஹரிநாம நினைவு மேலோங்கி வந்தது. உலக வாழ்வில் ஊறி, அல்லல்பட்ட மக்களுக்குப் பக்தி ரஸமான ஹரிநாம சங்கீர்த்தனமே அரிய மருந்து

என்று அவருக்கு மிகத் தெளிவாகப் பட்டுவிட்டது. தம் முன்னோர் வாழ்ந்த கிராமங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். எங்கும் ஹரிநாம மகிமையைப் பரப்புவதே வேலை. கேட்ட மக்களின் உள்ளத்தில் அவருடைய நாம சங்கீர்த்தனம் ஒரு பெருங்கிளர்ச்சியை உண்டாக்கியது. ஜனங்கள் தங்கள் தொல்லைகளுக்கு ஹரிநாம பஜனையும் சைதன்யருடைய உபதேசங்களும் சரியான மருந்தாக இருப்பதை உணர்ந்து கொண்டார்கள்.

சைதன்யர் அப்போது மணமானவர். சாஸ்திரங்களை ஆராய்வதால் அறிவு வளரும்; அறிவினால் வரும் பயன் தெய்வ பக்தி. இந்த உண்மையைக் கொண்டு பக்தி மார்க்கத்தில் சைதன்யர் மனத்தைச் செலுத்தினார். தர்க்க வியாகரணங்களிலும் நியாய சாஸ்திரங்களிலும் அவருக்குப் பிடிப்புக் குறைந்து வந்தது.

எப்போதும் ஹரியின் நினைவே அவர் மனத்தை விட்டு அகலாமல் இருந்தது. ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகளும் பிரபாவங்களும் அவர் புலமையைக் கவிந்து மூடிக்கொண்டு வந்தன. வறட்டு அறிவினால் பயன் ஒன்றும் இல்லை என்று அவர் மனம் தெளிந்தது. அதில் பிரேமை அல்லது பக்தி என்ற உயிர்ப் பொருள் கலக்காமல் இருந்துவிட்டால் வாழ்க்கையே பயன் அற்றதாகிவிடும் என்று அவர் உணர்ந்து கொண்டார்.

கீழ் வங்கத்தில் சுற்றி வந்தபோது அது உண்மை என்பது உறுதிப்பட்டு விட்டது. ஜனங்களின் உள்ளத்தில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்படி அவர் செய்து விட்டார். சில மாதங்கள் கழித்து அவர் நதியாவுக்குத் திரும்பியபோது, அவருக்கு ஒரு துக்கச் செய்தி காத்திருந்தது. அவருடைய மனைவி லக்ஷ்மி பாம்பு கடித்து இறந்துபோன செய்திதான் அது. பொங்கி வந்த துக்கத்தை அடக்கிக் கொண்டு, "அம்மா, ஹரியே எல்லாவற்றையும்விட மேலானவன். அவன் நினைவு ஒன்றில் எந்தத் துக்கத்தையும் கரைத்து விடலாம்!"

என்று கூறினர். அதுவே அற்புதமான பாடலாக, உயர்ந்த கீர்த்தனமாக வெளிப்பட்டது.

சசிதேவிக்கு வீட்டில் மருமகள் இல்லாத குறை பெரிதாக இருந்தது. தினம் நீராடப் போகும்போது லட்சணம் வாய்ந்த பெண் ஒருத்தியை அவள் சந்திப்பது வழக்கம். குலம், கோத்திரமெல்லாம் கேட்டு விசாரித்த போது இவளையே தன் மருமகளாகக் கொண்டால் தேவலை என்று அவளுக்கு ஆவல் மூண்டது.

அந்தப் பெண்ணின் பெயர் விஷ்ணுப்ரியை. பெயரே அவளுக்கு மிகவும் பிடித்து விட்டது. "ஒரு வைஷ்ணவனின் மனத்துக்குப் பிரியமாக இரு!" என்று அடிக்கடி கூறுவாள். அவள் ஸநாதன மிச்ரர் என்ற ஆஸ்தான கவியின் குமாரி. செல்வம் மிகுந்த குடும்பம். திக்விஜய பண்டிதரை வென்ற சைதன்யருக்குத் தம் பெண்ணை மணம் செய்து கொடுக்க அவர் பெரிதும் விரும்பினர்.

சைதன்யருக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவருக்கு மறுமுறை மணந்துகொள்வதில் விருப்பம் இல்லை என்பதைத் தரகன் மூலமாக அறிந்த ஸநாதன மிச்ரர் மனம் இடிந்து போனர். இதைக் கேட்ட சைதன்யர் தாமே அவரிடம் நேரில் சென்று விவாகம் செய்துகொள்ள இணங்கினர். ஸநாதன மிச்ரரின் உள்ளம் குளிர்ந்தது. விஷ்ணுப்ரியை மகிழ்ச்சி வெள்ளத் திலே ஆழ்ந்துபோனள். பள்ளியறைக்குப் போகும் சமயத்தில் அந்த ரூபவதியின் கால் நிலைப் படியில் தடுக்கி விட்டது. காயமும் பட்டுவிட்டது. ரத்தப் பெருக்கை நிறுத்தச் சைதன்யர் தம் காலால் தம் மனைவியின் காலைக் கெட்டியாக அழுத்திக்கொண்டார். இது விஷ்ணுப்ரி யைக்கு ஏதோ அபசகுனமாகப் பட்டது. சைதன்யரோ ஹரிநாமத்தைச் சொல்லிவிட்டு அந்தக் கணமே அதை மறந்து போனர்.

சைதன்யர் தம் தந்தைக்குச் சிரார்த்தம் செய்யக் கயைக்குப் போயிருந்தார். அங்கே ஈசுவரபுரி என்ற பெரியாரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் கிருஷ்ண மந்திரத்தைச் சைதன்யருக்கு உபதேசித்தார். அன்று முதல் கிருஷ்ண பக்தியிலே அவருக்குப் பித்து மூண்டு விட்டது. ஹரியின் நாமம் அவர் நாவிலே தவழும்போது அவருக்கு மயிர்க் கூச்சிடும். பகவானைக் காணும் வெறி அவருக்கு அடிக்கடி பொங்கியெழும். ஏங்கி அழுவார். ஊனை மறப்பார். ஆனந்தக் கூச்சல் போடுவார். "கிருஷ்ணா! ஏ ராதா ரமணா!" என்று புலம்புவார். அவர் நவத்வீபத்தில் நடத்தி வந்த வித்தியாலயத்தில் இலக்கணம் நடத்துவதற்குப் பதில் பக்தியின் மேன்மையைப் புகட்டத் தொடங்கி விடுவார். வர வர, தம்மையே மறந்து மணிக்கணக்கில் மெய்ம்மறந்து போயிருப்பார்.

நாளடைவில் அவருக்கே இது மனத்தை உறுத்தியது. பாடம் சொல்வதையே நிறுத்திவிட்டார். அந்த மாணவர்களைப் பார்த்து, "நான் என்ன செய்யலாம்? உங்களுக்குப் பாடம் கற்றுத் தர நினைத்துத்தான் வருகிறேன். ஆனால் என்னால் முடியவில்லையே. என் கண்முன் நீலமேக வண்ணன் வந்து நின்று இனிய குழல் எடுத்து ஊதுகின்றானே! என் மனம் அந்த அமுத கீதத்தில் திளைத்துப் போகிறது. என்னையே மறந்து விடுகிறேன். உலகத்தையும் மறந்து விடுகிறேன். இனி என்னால் பாடம் கற்றுத் தர முடியவே முடியாது. ஆகையால் வேறு ஆசிரியர் யாரிடமாவது போய்ப் படியுங்கள்!" என்றார்.

மாணவர்கள் எல்லாரும் இதைக் கேட்டுக் கண்ணீர் பெருக்கினார்கள். "சுவாமி, எங்களுக்கு இந்த இலக்கண இலக்கிய வித்தைகள் எல்லாம் எதற்கு? கண்ணனுடைய நாம சங்கீர்த்தனம் பண்ணும் வழியைச் சொல்லிக் கொடுங்கள். அது போதும்" என்றார்கள்.

கையில் தாளம் போட்டுத் தம்மை அண்டிய ஒவ்வொரு மாணவனுக்கும் பஜனையைச் சொல்லிக் கொடுத்து அவர் ஆனந்தக் கூத்தாடினார். மாணவர்களிடமிருந்து இந்தச் சங்கீர்த்தன ஜுரம் ஊரில் அனைவருக்கும் தொற்றிக் கொண்டது. படித்தவர், பாமரர் எல்லாருமே பக்திப் பெருக்கில் அடித்துக் கொண்டு போகப்பட்டார்கள்.

''கண்ணன் எழிலைக் காணப் பக்தியே சிறந்த வழி. அறிவினால் கண்ணனைக் கவர முடியாது'' என்று பாடி, சைதன்யர் ஒரு புதிய தர்மத்தையே பிரசாரம் செய்தார்.

நாளடைவில் கௌராங்க சைதன்யரைச் சுற்றி ஒரு கூட்டமே சேர்ந்துவிட்டது. கிருஷ்ண பக்தியும் ஹரி நாமமும் நவத்வீபம் எங்கும் மதுரமான இனிய குரலில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. சைதன்யர் ஸ்ரீகிருஷ்ண சைதன்யராகி விட்டார். கண்ணன் பெருமையை அவர் பல பாடல்களாகப் பாடி வழங்கினார்.

அவருடைய சிஷ்யர்களிலும் கிருஷ்ணபக்தியில் ஈடுபட்டவர்களிலும் முக்கியமானவர்கள் நான்கு பேர். அவர்களில் யவன ஹரிதாஸர் என்பவரும் ஒருவர். அவர் பிறப்பும் வளர்ப்பும் விந்தையான கதை. அவர் பிறந்த உடனேயே அவருடைய பெற்றோர்களான பிராம் மணத் தம்பதிகள் இறந்துவிட்டார்கள். அநாதையாகி விட்ட குழந்தையைக் கவனிப்பார் யாருமில்லை. ஒரு முஸ்லிம் தம்பதிகள் அவரை எடுத்து வந்து, தம் குழந்தையாக வளர்த்தார்கள்.

வயது வந்ததும் அந்தப் பெற்றோர்கள் தங்கள் மதத்தின் தொழும் முறைகளைக் கற்று வைத்தார்கள். ஆனால் பையன் ஹரிநாமத்தை ஜபிக்கத் தொடங்கினான். எத்தனையோ சொல்லி அதட்டி அடித்துப் பார்த்தும் பையன் திருந்தவேயில்லை. ஹரிநாமத்தையே உறுதியாகச் சொன்னான். என்ன கஷ்டம் நேர்ந்தாலும் ஹரி

நாமத்தை விடாமல் சிரித்தபடியே ஸ்மரித்துக்கொண்டிருந்தான். அவனுடைய ஹரி பக்தி காரணமாக ஊர் ஜனங்கள் அவனை 'ஹரிதாஸ்' என்றே அழைத்தார்கள். அவனுக்கு இட்ட பெயர் என்னவோ அது அடியோடு மறந்தே போய்விட்டது.

அவன் வீட்டை விட்டு ஒருநாள் வெளியேறினான். துளசிச் செடிகளும் நந்தியாவட்டைச் செடிகளும் வளர்ந்த ஒரு கிராமத்தில் ஒரு குடிசை அமர்த்திக் கொண்டான். தினமும் மூன்று லட்சம் தரம் ஹரிநாமத்தைச் சொல்லாமல் அவன் எதையும் செய்வதில்லை. எப்போதாவது பசி நேரத்துக்கு யாராவது கொஞ்சம் சாதம் போட்டுவிடுவார்கள். அவனுக்கு அந்தக் கவலையே யில்லை.

ஒரு பணக்காரர் அவனுடைய உண்மைப் பக்தியைச் சோதிக்க ஒரு வேசியை அவனுடைய குடிசைக்கு அனுப்பினார். ஹரிதாஸ் ஒரேயடியாகத் தியானத்தில் மூழ்கியிருந்தார். மூன்று நாட்கள் இடைவிடாமல் வேசி காத்திருந்தும் அவன் தியானம் கலையவில்லை. உண்மையில் அவர் ஒரு மகா புருஷர் என்று வேசிக்குப் பட்டுவிட்டது. மன்னிப்புக் கோரி அவரை வணங்கினாள். அதுகூட அவருக்குத் தெரியாது. ஆனால் கண் விழித்ததும், "தாயே ஹரியின் பெயரைச் சொல்லு! உன் ஜன்மம் கடைத்தேறும்" என்று கூறினார். வேசி அந்த இடத்தைவிட்டு மாசு நீங்கி வெளியேறினாள். சொத்துக்களை ஏழைகளுக்குத் தானமளித்துவிட்டு, ஹரிநாம பஜனை செய்துகொண்டே அவள் அமைதி பெற்றாள்.

முஸ்லிம் ஒருவன் இஸ்லாமியக் கொள்கையை மறந்து ஹரிநாமத்தைச் சொல்வது பொருந்துமா? பிரதான காஜி அவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்தான்.

"இஸ்லாமுக்கு இது தீங்கு இழைப்பதல்லவா?" என்று காஜி அவருக்குப் புத்திமதி கூறினான்.

''பரம்பொருள் ஒன்றே. பல பொருளில், பல பெயரில் நாம் அவனைக் குறிக்கிறோம்! ஹரியும் அல்லாவும் ஒருவரே!'' என்று விடை கிடைத்தது.

''நான் சொல்வதை மீறி நீ இஸ்லாமுக்குத் துரோகம் இழைத்தால் உனக்குத் தண்டனை கிடைக்கும். என்ன தண்டனை தெரியுமா? தூக்கு மரம்!'' என்றான் காஜி.

''இந்த உடலைப் பல துண்டங்களாக வெட்டினாலும் இந்த நாக்கு ஹரியை மறக்காது. எல்லா மதமும் ஒரே மதம். ஹிந்துவானாலும் முஸ்லிம் ஆனாலும் எல்லாருக்கும் பொதுவான பரம்பொருள் ஒன்றே!''

ஹரிதாஸரைச் சாட்டையால் அடித்தார்கள். கொத்தவாலுக்குக் கைதான் சளைத்ததே தவிர, ஹரி தாஸருக்கு அது உறைக்கவேயில்லை. சமாதி நிலையில் இருந்த அவரை ஆற்றில் தள்ளினார்கள். ஆனால் அவர் ஸ்நானம் செய்துவிட்டு வருபவர்போல் கரையேறி வந்துவிட்டார்.

காஜியின் மனம் மாறி அவர் விருப்பம்போல் விடுதலை செய்து விட்டான். அவர் நவத்வீபத்துக்கு வந்தார். சைதன்யரும் மற்ற நண்பர்களும் அவரைக் கட்டி யணைத்துக்கொண்டு தேகம் தெரியாமல் கண்ணன் புகழ் பாடி சரஸலீலை செய்து ஆடித் தம்மை மறந்தார்கள்.

இவர்களுடைய கீர்த்தனைப் பாடல்களும் பஜனை செய்யும் முறையும் பலருக்கு வெறுப்பையளித்தன. எத்தனையோ ஹிம்சைகள் புரிந்தார்கள். அடிக்க வந்தார் கள். ஆனால் கிருஷ்ண சைதன்யரின் இனிமையான கானம் அவர்களை அடியோடு மாற்றிவிட்டது.

''கிருஷ்ணனை நம்பு!'' என்று தன்னை அடிக்க ஓடி வந்த அதிகாரி ஒருவனைப் பார்த்துப் பாடினார் சைதன்யர்.

அந்தப் பாடலைக் கேட்ட அதிகாரி தன்னை மறந்து, ''ஹரி ஹரி!'' என்று அவரோடு சேர்ந்து பாடத் தொடங்கி விட்டான்.

அவரோடுகூட வந்த நித்யானந்தர் என்ற பக்தரை இன்னோர் அதிகாரி பானை ஓட்டினால் அடித்தான். மண்டையில் ஓட்டு விளிம்பு பட்டுக் குத்திவிட்டது. குருதி பெருகியது. ஆனால் அவரோ, "நீ அடித்தது அடித்து விட்டாய். ஹரியின் பெயரை ஒரு தடவை யாவது சொல்லேன்!" என்று கேட்டுக் கொண்டார்.

அது மந்திரம்போல் அவனை உருக்கி விட்டது. "ஹரி, ஹரி!" என்று ஆடிக் குதிக்கத் தொடங்கி விட்டான் அவன்.

"ஹரிநாமத்துக்கு உள்ள மாயாசக்தி வேறு எதற்கும் இல்லை. கரித்துண்டும் வயிரக் கல் ஆகிவிடும். கயவர்கள் கண்ணியமானவர்களாகி விடுவார்கள்" என்று ஒரு கீர்த்தனை பாடினார் சைதன்யர். மிகவும் பிரபலமான கீர்த்தனையாக அந்தப் பாட்டு இன்றும் விளங்குகிறது. அதன் சொற்களிலே உயிர்த் துடிப்பும் மந்திர சக்தியும் மிளிர்வதை இன்றும் என்றும் அனைவரும் உணர்வார்கள். காஜியின் மனம்கூட அந்தப் பாடலைக் கேட்டு உருகி மாறிவிட்டது. பக்த கோஷ்டியுடன் அவனும் வந்து சேர்ந்துகொண்டு குதிக்கத் தொடங்கி விட்டான்.

"கிருஷ்ணன், ஹரி என்பதெல்லாம் வெறும் பெயர்களே! பரம்பொருள் ஒன்றே! பல மதங்களும் பல பெயர்களில் அந்தப் பரம்பொருளையே குறிக்கின்றன" என்று மீண்டும் பாடினார் சைதன்யர்.

கிருஷ்ண பக்தியில் திளைத்த சைதன்யருக்குச் சம்சார பந்தத்தில் வெறுப்பு உண்டாகி வந்தது. எப்பொழுதும் சங்கீர்த்தனத்திலேயே ஈடுபட்டிருந்தார். அவரை ஓர் அவதார புருஷராகவே மக்கள் மதித்தார்கள், சதா கிருஷ்ணன் புகழ் பாடுவதுதான் வேலை. இதற்கு வேளை, சமயம் எதுவுமே கிடையாது.

"இங்கே நான் கதறுகிறேனே! கண்ணா! உன்னை என் கண்கள் காணவில்லையே!" என்று தம்மைக் கோபியாகப் பாவித்துக்கொண்டு பாடிக் கதறுவார்.

அவர் சந்நியாசம் ஏற்க முடிவு செய்தார். அந்தச் சமயம் அவர் மனைவி ஊருக்குப் போயிருந்தவள் ஓடி வந்தாள். "நானும் வந்துவிடுகிறேன். கூடவே அழைத்துப் போங்கள். அன்று என் காலில் இடறியபோதே இப்படி ஏதாவது நடக்கும் என்று நினைத்தேன்!" என்று தேம்பினாள்.

சைதன்யர் அவளை ஆதரவோடு தம் மடியில் சாய்த்துக்கொண்டார். ஆகாரமெல்லாம் ஆனதும், "உங்களை என் கைகளாலேயே சிங்காரித்துவிட வேண்டும்" என்று அவள் கேட்டுக்கொண்டாள்.

சைதன்யர் இணங்கினார். பொன் மேனியில் சந்தனம் பூசி, மாலதி புஷ்பத்தைச் சூடி, பட்டுப் பீதாம்பரத்தை அணிவித்து முடித்ததும் அவள் கண்களுக்கு அவர் சாட்சாத் கிருஷ்ண பரமாத்மாவாகவே தோன்றினார். அதேபோல அவரும் தம் மனைவியைச் சிங்காரித்து முடித்தார். கிருஷ்ணன் விரும்பும் கோபியாகவே அவள் காட்சியளித்தாள். அந்தப் பிரேமா லிங்கனத்தை யாரால்தான் விளக்கிப் பேச முடியும்? நள்ளிரவில் அவர் இல்லறத்தைத் துறந்துவிட்டு, வெளியேறினார். கங்கையாற்றில் இறங்கி, அக்கரையில் இருந்த கேசவ பாரதியின் ஆசிரமம் சென்றார். அங்கே அவர் ஞான தீட்சை பெற்றுக்கொண்டார்.

சந்நியாசி ஆகிறவன் சிகையை மழிக்க வேண்டும். அந்த அழகிய கேசக் கற்றையைத் தொடக்கூட முதலில் நாவிதன் மறுத்துவிட்டான். அவருடைய ஒளியைக் கண்டு அவன் பின்வாங்கினான். அவனைத் தேற்றுவதே பெரும் பாடாகிவிட்டது.

மந்திர தீட்சை பெற்றுக்கொண்ட சைத்னயர் அந்த நிமிஷம் முதல் கிருஷ்ண சைதன்யர் என்ற திருநாமம்

பெற்ருர். பிருந்தாவனத்தை நோக்கி யாத்திரை புறப்பட்டார். அவர் சென்ற இடமெல்லாம் அவருடைய கீர்த்தனங்கள் பரவிச் சென்றன. பக்தி வெள்ளம் பெருகி ஓடியது. ஹரிநாம சங்கீர்த்தனம் அவருக்கு முன்ஞல் சென்று அவரை வரவேற்றது.

கிருஷ்ண சைதன்யர் தென்ஞட்டை நோக்கிச் சென்ருர். ராமேசுவரம் போய்விட்டு வந்து ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் தங்கிஞர். அங்கேயே சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொண்டார்.

ஸ்ரீரங்கத்தின் ஆலயத்தில் ஒரு பிராம்மணன் கீதையைப் பாராயணம் செய்துகொண் டிருந்தான். சம்ஸ்கிருதத்தைத் தவருக உச்சரிப்பதைக் கேட்டு, "இதென்ன, இப்படிப் பாராயணம் செய்கிறீர்களே?" என்ருர் சைதன்யர்.

"நான் மூடன். எனக்கு அர்த்தம் எதுவுமே தெரியாது. குருட்டுத்தனமாகப் பாராயணம் செய்கிறேன், பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் காட்சி மட்டும் என் கண்ணெதிரே வந்து நிற்கிறது. அந்த ஆனந்தமே போதும்" என்ருன்.

"நீரே கீதையின் உட்பொருளைக் கண்டவர்" என்று சைதன்யர் அவரைக் கட்டியணைத்துக் கொண்டுவிட்டார்.

ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சி முதலான க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்று, கோதாவரி தீரம் சென்ருர். பிறகு பூரி ஜகந்நாதரைத் தரிசித்து அவர் சந்நதியிலேயே காலம் கழித்தார். பிறகு ஒரு சமயம் காசிக்குச் சென்ருர்.

ஒரு நாள் நதியாவில் இருந்த மந்திரி ஸநாதனன் அவரைத் தேடி வந்தான். சுகபோகத்தின் விளைவாக உடம்பெல்லாம் சிரங்கு அழுகிச் சொட்டியது. ஆயினும் சைதன்யர் அவனைக் கட்டியணைத்துக் கொண்டார். அது சைதன்யரின் பொன் மேனியைப் பாழாக்கவில்லை. மாருக அவன் வியாதியை நீக்கியது.

அவன் அங்கிருந்தே வடமொழியில் கிருஷ்ணனைப் பற்றி அற்புதமான பக்தி நூல் ஒன்று இயற்றினான். சைதன்யரால் தீட்சை பெற்றான். ரூபகோஸ்வாமி என்று அவனுக்குப் பின்னால் பெயர் வந்தது.

மீண்டும் அவர் பூரி ஆலயத்துக்குச் சென்றார். கிருஷ்ணன் நினைவாகவே இருந்து அநேக பாடல்களைப் பாடினார். அவருடைய பக்தி மார்க்கம் வட இந்தியா முழுவதும் ஓர் இயக்கமாகவே அதற்குள் பரவிவிட்டது. அவருக்குக் கிருஷ்ண பக்தி வெறிபோல் பிடித்துக் கொண்டுவிட்டது. நீலக்கடலைப் பார்த்து அது கண்ணன் திருமேனியே என்று அதில் கலந்துவிட ஓடினார். செம்படவன் ஒருவன் அவரைக் கரையில் இழுத்துப் போட்டு விட்டான்.

கடைசியில் அவர் பூரி ஜகந்நாதரைத் தரிசிக்க ஆலயத்தினுள் சென்றார். சென்றவர் திரும்பவேயில்லை!

அவர் அர்ச்சித்த பக்தி மலர் இன்றுவரை வாடாமலே மணம் வீசிக் கமழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. என்றும் அதன் மணம் கமழ்ந்துகொண்டுதான் இருக்கும்!

5

பூங்கோதை ஆண்டாள்

வடபெருங் கோயிலுடையான் என்னும் வடபத்திர சாயி கோயில் அர்ச்சகர் வயது முதிர்ந்தவர். மகா பக்தர். அருள் பெற்றவர். அவர் பெருமாளுக்குச் சாத்தவேண்டிய பூமாலைகளைக் குடலையிலிருந்து எடுத்தார். திடீரென்று அவர் கை கூசியது. உற்றுக் கவனித்தார். ஆமாம்; சந்தேகமே யில்லை; மாலைகளோடு ஒரு ரோமம் காணப் பட்டது. நீண்ட கூந்தலின் ரோமம்.

அவர் கண் கூசியது; மனம் கலங்கியது; கை நடுங்கியது. அவருக்கு ஒரு கணம் என்ன செய்வது என்று புரியவில்லை. பிறகு மாலைகளைத் தொடுத்து எடுத்து வரும் ஆழ்வாரை நோக்கி, "விஷ்ணுசித்தரே! உங்களுடைய தொண்டிலே பிழை காணவும் என் நெஞ்சு துணியுமோ?" என்று சொல்லிவிட்டு, அந்த ரோமத்தை எடுத்துக் காட்டினார்.

விஷ்ணுசித்தர் என்று இயற்பெயர் படைத்த பெரியாழ்வார் திகைத்துப் போனார்; திகில் அடைந்தார். பேசவே நாவெழவில்லை.

"நல்ல வேளை, பெருமாளுக்குச் சாத்துவதற்கு முன் இது என் கண்ணில் தென்பட்டது. இந்த மாலைகளைக் கூடையோடு கொண்டுபோய்க் கொட்டிவிட்டு, புது மாலைகள் தொடுத்துக் கொண்டு வேகமாக வந்து சேருங்கள்!" என்றார் அர்ச்சகர்.

"அப்படியே செய்கிறேன். இந்தப் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று கூடையை வாங்கிக் கொண்டார் பெரியாழ்வார்.

"இருங்கள்; நானே கொண்டுபோய்க் கொட்டு கிறேன்!" என்று கூடையை வாங்கிக்கொண்டு போய், கோவில் வாசலில் கொட்டிவிட்டு, வெறும் கூடையைப் பெரியாழ்வாரிடம் கொடுத்தார் அர்ச்சகர்.

விஷ்ணுசித்தர் மனம் பதைத்து நின்றார். துக்கத் திஞல் நெஞ்சு விம்மியது. பெருமாளுக்கு இப்படி ஒரு பிழை செய்ய நேர்ந்ததே என்று நொந்துகொண்டார். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, உடனே தாம் அருமை பெருமையாக வளர்த்துவரும் நந்தவனத்துக்கு ஓடினார். புதிய பூக்களாகக் கொய்தார்; அங்கேயே மாலைகளாகக் கட்டி எடுத்துக்கொண்டு, வடபத்திரசாயி கோயிலுக்கு விரைந்து வந்தார்.

"அர்ச்சகப் பட்டரே! என் பிழையைப் பொறுத்துக் கொள்ள வேணும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

"விஷ்ணுசித்தரே! நானும் எத்தனையோ நாளாக நீங்கள் கட்டிக்கொண்டு வரும் மாலைகளை வாங்கி வாங்கிப் பெருமாளுக்குச் சாத்தி வருகிறேன். ஆனால் சில தினங் களாகவே மாலைகள் வாடி, நிறம் மாறியிருப்பது என் ஒளி மங்கிய கண்களுக்கும் தெரிந்துவிட்டன, ஆனால் பாண்டிய நாட்டுச் சக்கரவர்த்தியின் ஞானகுரு நீங்கள். பக்தியில் பெரியவர்கள். அப்படிப்பட்ட தாங்கள் கட்டிக் கொண்டு வந்த மாலைகளுக்கு மறு உண்டாக்கிப் பேசுவது சரியல்ல என்றே பேசாமல் இருந்துவிட்டேன். இன்று தலைமயிர் இருப்பதையும் கண்ட பிறகுதான் துணிந்து உங்களிடம் கூறினேன்" என்றார் அர்ச்சகர்.

இதைக் கேட்டதும் விஷ்ணுசித்தருக்கு இன்னும் நடுக்கமும் கலக்கமும் உண்டாயின. சில நாட்களாகவே மாலைகள் நிறம் குன்றி வாடிப்போய் இருக்கின்றன என்றால் என்ன விந்தை! எப்போதும் போலத்தானே மாலைகளை அவரே தொடுக்கிறார்! வீட்டில் அவரைத் தவிர அதைத் தொடுவார் யாரும் இல்லையே!

பெரியாழ்வாருக்குப் பெரிய யோசனையாகி விட்டது. வீட்டில் இளம் சிறுமி கோதையைத் தவிர யாரும் இல்லை. அவள் ஏதாவது செய்திருப்பாளோ? இருக்காது; ஒரு நாளும் இருக்காது. அவருடைய பெண் அவர் வணங்கும் பெருமாளுக்குரிய மாலைகளைத் தீண்டவும் மாட்டாள். அப்படியானல் இது எவ்வாறு உண்டாயிற்று? மறுநாள் இதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

மறுநாள் உதயத்திலே நீராடிவிட்டு நந்தவனத் துக்குச் சென்று தூய மலர்களைக் கூடை நிறையப் பறித்து எடுத்து, அழகிய மாலைகளாகத் தொடுத்து வைத்தார். தொடுக்கும் நார்களை ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் உபயோகித்தார். பிறகு அந்த மாலைகளைக் கூடைகளிலே வைத்து வீட்டில் கொண்டு வந்து வைத்தார்.

எப்பொழுதும் அவர் உபாதானம் எடுத்துத்தான் ஜீவனம் செய்து வந்தார். பாண்டிய மன்னன் வல்லப தேவனின் ஞான குருவாக இருந்தும் அவர் தம் செல்வத்தையும அரசன் அளித்த செல்வத்தையும் தம் நந்தவனத்தைப் பெரிய பூங்காவனமாக்குவதற்கே பயன் படுத்தி விட்டார். அன்றுட வாழ்க்கையை உபாதானம் செய்தே நடத்தி வந்தார். இன்று அவர் உபாதானத் துக்குப் புறப்படுவதாகச் சொல்லிவிட்டு, ஒரு புறமாக மறைந்து ஒளிந்திருந்தார். என்ன நடக்கிறது என்று முற்றும் ஆராய்ந்து பார்த்துவிட வேண்டாமா?

அவருடைய செல்வத் திருமகள் கோதை மலர்க் கூடை யருகே வருவதைக் கண்டு அவர் நெஞ்சம் துணுக் குற்றது. அவள் அங்கு யாரும் இல்லை என்று எண்ணி, கூடையிலிருந்த மாலைகளை ஒவ்வொன்ருக எடுத்தாள்; பார்த்தாள். பிறகு ஒவ்வொன்ருகக் கூந்தலிலும் மார்பிலும் சூட்டிக்கொண்டு கண்ணுடி முன் நின்று தன்னை அழகு பார்த்துக்கொண்டாள். பிறகு ஒவ்வொரு மாலையாக எடுத்துக் கூடையில் அடுக்கி வைத்தாள்.

பெரியாழ்வார் பெரும் கோபம் கொண்டார். அவருக்கு இது பெரிய அதிர்ச்சியைத் தந்தது. கோதை மாலைகளை வைத்து நிமிர்வதற்குள் அவள் எதிரே பாய்ந்து நின்றார்.

கோதை பதறிப் போனாள். அவளுக்கு உண்டான பயத்தில் அழுகைதான் வந்தது. விம்மி விம்மி அழுதாள். பெரியாழ்வாரின் கோபம் அந்தக் கோதையின் கண்ணீரில் அடியோடு கரைந்து போயிற்று.

''குழந்தாய்! நீயா இப்படிச் செய்வது? இன்று நீ செய்ததைப்போல் உலகத்தில் வேறு யார்தான் செய்யத் துணிவார்கள்? என்னுடன் பழகி நீ இதெல்லாம் தெரிந்து கொண்டிருப்பாய் என்றே நம்பியிருந்தேன். தெய்வத்தின் பெருமை என்ன? கேவலம் மனிதராகிய நம்முடைய நிலை என்ன? பெருமாளுக்குச் சூட்டுகிற மாலையை நாம் அணியலாமா?'' என்று வருத்தத்தோடு கூறினார்.

கோதைக்கு மேலும் அழுகைதான் வந்தது.

''குழந்தாய்! பரம்பொருள் மகா கருணை வாய்ந்தவர். எளிமையான குணம் படைத்த பெருமாள் உன் பிழையை மன்னிப்பார். நீ பயப்படாதே. ஆனால் மறந்தும் இனி இத்தகைய பிழையைச் செய்யாதே!'' என்று சொல்லி விட்டு, மீண்டும் நந்தவனம் சென்று, புதிய மலர்கள் கொய்து, மாலைகள் கட்டி, கோயிலுக்கு எடுத்துச் சென்றார்.

''அடியேன் பிழையையும் சிறு பெண்ணாகிய கோதையின் அறியாச் செயலையும் பொறுத்தருள வேண்டும்'' என்று பெருமாளை நோக்கி வேண்டிக் கொண்டார்.

திரும்பி வரும் வழியெல்லாம், குழந்தையைக் கோபித்துக் கொண்டுவிட்டோமே என்று அவர் மனம் வருந்தியது.

அந்தக் கோதை அவர் வயிற்றில் உதித்த பெண் அல்ல. என்றாலும் அவளைத் தம் உயிரினும் மேலாக மதித்து வளர்த்து வந்தார் அவர்.

புலமையும் செல்வமும் கொழித்த பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒரு புதிய நகரமாகத் திகழ்ந்தது. வில்லி என்ற வேடன் தன் மல்லி நாட்டுக்குத் தலை நகராக அந்த ஊரைப் புதிதாக அமைத்திருந்தான். சிற்பம் முதலான பல்வேறு தொழில்களுடன் பக்தியும் செழித்திருந்தது ஸ்ரீவில்லிப்புத்தூரில். வயிற்றுப் பசிக்கு உழைக்கும் விவசாயியையும் இதயப் பசிக்கு உழைக்கும் அடியார்களையும் கொண்ட ஊரில் நந்தவனத் தொண்டு புரிவதற்காகவே வாழ்ந்து வந்தார் விஷ்ணுசித்தர். அவர் பாண்டியனைச் சிஷ்யனாக்கி, மதுரையில் பக்திக் கொடியைப் பறக்கவிட்டு விட்டுப் பெரியாழ்வாராக நந்தவனக் கைங்கரியம் செய்வதில் ஈடுபட்டிருந்தார். தம் மாளிகையைப் பக்தர்கள் பாடும் கூடமாகச் செய்து விட்டு அவர் ஒரு குடிலில் தங்கி, இறைவனுக்குப் பாமாலையும் பூமாலையுமாகச் சூட்டி இன்புற்றிருந்தார். பாண்டியன் கொண்டாடிய பட்டர்பிரான் என்றும் அவரை மக்கள் குறிப்பதுண்டு. மலர்களைத் தொடுத்து விட்டு, உபாதானம் செய்தே அவர் நாளைக் கழித்து வந்தார்.

ஒரு நாள் வழக்கம்போல் மலர் கொய்து, மாலை கட்டுவதற்காக அவர் நந்தவனத்துக்குள் சென்றார். அன்று ஆடிப்பூரத் திருநாள். துளசிச் செடிக்கு அருகே சென்றபோது அவர் கண்கள் துளசிக் கொழுந்தை இன்று காணவில்லை; பெண்ணின் கொழுந்தாக அங்கே ஓர் அழகான குழந்தை கிடப்பதைக் கண்டன. எழிலும் ஒளியும் பொருந்திய ஒப்பற்ற நந்தா விளக்குப் போல இருந்தது குழந்தை. பெரியாழ்வார் குழந்தையின் வனப்பைக் கண்டு உருகிப் போய் நின்று விட்டார். இறைவனே கருணை கூர்ந்து அனுப்பிய செல்வமாக

அவருக்குப் பட்டது. பூமித்தாய் ஈன்றெடுத்துத் தந்த அந்தச் செல்வத்தை இரு கைகளாலும் வாரி அணைத்து எடுத்து வடபத்திரசாயியின் சந்நிதியில் கொண்டு வந்து சேர்த்தார்.

குழந்தை வந்ததும் கோயிலே புத்தொளி பெற்று விட்டதுபோல் தோன்றியது. தொண்டர்குழாம் வியந்து நின்றது. இறைவனுக்கு அர்ப்பணிக்கக் கொண்டுவந்த புதுமலர் அது. பெரியாழ்வார் பரவசமாக நின்ருர்.

அர்ச்சகர் வாயிலாக இறைவனின் திருவுள்ளம் வெளிப்பட்டது. "குழந்தையின் வரலாற்றை நீங்கள் பின்னுல் தெரிந்துகொள்வீர்கள். இவளை வீட்டுக்கு எடுத்துச் சென்று உங்கள் திருமகளாகவே பேணி வளர்க்க வேண்டும்" என்ற கட்டளையைக் கேட்டு, பெரியாழ்வார் மனம் ஆனந்தத்தினுல் துள்ளியது.

பெருமாள் ஏறும் சிவிகையில் ஏற்றி அந்தக் குழந்தையை மங்கள வாத்தியங்கள் முழங்கத் தம் திருமாளிகைக்கு அழைத்து வந்தார். அவருடைய தவமெல்லாம் ஓர் உருக்கொண்டு குழந்தையாக வந்து விட்டதாகவே ஊரார் எண்ணிக் கொண்டாடினுர்கள். நந்தவனத்தில் பூங்கொடிகளைப் பேணி வளர்ப்பது போலவே குழந்தைக்குக் கோதை என்று பெயர் சூட்டி அதைச் சீராட்டி அழகுபடுத்தி வளர்த்தார். அழகின் கொழுந்தாக வளர்ந்தாள் கோதை. கோதையின் விளையாட்டுப் புத்தியிலும் பக்தி இடம் பெற்றிருந்தது. பெரியாழ்வார் பெருமாளுக்குப் பூக்கொய்வதையும் பக்தி யோடு மாலை புனைவதையும் தீராத ஆவலோடு கவனித்திருப்பாள் கோதை.

பெரியாழ்வாரின் எளிய வாழ்வே கோதைக்கு ஒரு பெரும் உபதேசமாக இருந்தது. அந்த நந்தவனத்திலேயே கோதை தன் பக்திப் பயிரையும் உரமிட்டு அன்புநீர் பாய்ச்சி வளர்க்கக் கற்றுக்கொண்டாள்.

பெரியாழ்வார் கண்ணனுக்குப் பாடிய பிள்ளைத் தமிழைக் காதாரக் கேட்டு, நெஞ்சு நிறையப் பருகி, பாடிப்பாடி அவளும் இன்பம் பெறுவாள். பெரியாழ்வார் குழந்தைக் கண்ணனைக் கண்ணாரக் கண்டார். அந்தத் தெய்விகக் குழந்தையின் லீலைகளைக் கண்டு பரவசமானார். பிள்ளையைத் தொட்டிலில் இட்டு இன்பம் கண்டார். அம்புலி காட்டி ஆனந்தப்பட்டார். குழந்தையின் முறுவலையும் பின்னல் கொண்டையையும் தண்டையணிந்த தளர் நடையையும் கண்டு சொக்கி நின்றார். அந்த அழகுகளையெல்லாம் தம் பாடலாலே பிறருக்கும் காட்டினார். சிறுமி கோதை மட்டும் சும்மா இருப்பாளா?

மனத்தினுள்ளே வளர்ந்த பிள்ளை, மனையில் வளர்ந்த அருமைப் பெண்ணுக்கு அறிமுகமாகி, நண்பனுமாகி விட்டான். அந்த நட்புரிமை வயது வளர வளர, வளர்ந்தும் வந்தது. பூங்கொடி கண்ணன் என்ற கொழு கொம்பைச் சுற்றிப் படரத் தொடங்கி விட்டது.

குழந்தைகளாகச் சேர்ந்து வெகு பாடுபட்டுக் கட்டி முடிக்கும் சிறு வீட்டை மழை வந்து கரைக்கும்போது கண்ணனே வந்து கலைப்பதாக அவள் கருதி இன்பம் பெறுவாள். கோபமோ வருத்தமோ கொள்வதற்குப் பதில் அவள் கண்ணனின் மாயத் தோற்றத்தைக் கண்டு புளகமடைவாள்.

பெரியாழ்வார் மாலையும் கழுத்துமாக நின்று ஆடிப் பாடிப் பஜனை செய்யும் போதெல்லாம் மாயக் கண்ணன் வந்து தன் மனத்துக்குள்ளே புகுந்து மயக்குவதாக உணர்வாள். பிறகு தன் தோழிகளோடு சேர்ந்து பாடுவாள்; ஆடுவாள்; குறி கேட்பாள்; குதூகலம் அடைவாள்.

பெரியாழ்வார் மாலைகளைத் தொடுத்து வைக்கும் போதெல்லாம் தன் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் கண்ணனுக்கு அதை முதலில் சூட்டி அழகு பார்க்க

விரும்புவாள். மணத்துக்கு மணம் சேர்க்க அவள் மனம் ஆராயும்.

அந்த நினைப்பில் அவள் ஒரு நாள் கூடையிலிருந்த மலர் மாலை ஒன்றை எடுத்து மோந்து பார்த்துவிட்டாள். பிறகு தன் கூந்தலில் வைத்துச் சூடிப் பார்த்துக் கொண்டாள். உள்ளத்தில் உறையும் அமுதன் கண் குளிரட்டும் என்று கண்ணாடி முன் நின்று அழகு பார்த்துக் கொண்டாள். மையிட்டுக் கொண்டாள். மாலைகளைக் கழுத்தில் அணிந்துகொண்டாள். உபாதானத்துக்குப் போயிருக்கும் பெரியாழ்வார் திரும்பி வருவதற்குள் எல்லாவற்றையும் எடுத்துப் பழையபடியே கூடையில் அடுக்கி வைத்துவிட்டாள். இதை ஒரு புதிய தொண்டாகவே அவள் கருதினாள்.

இப்படியே சில தினங்கள் கழிந்தன. இந்த மாலைகளால் அலங்கரிக்கப் பெற்ற எம்பிரானும் மனம் மகிழ்ந்திருப்பதுபோல் பக்தர்களுக்குக் காட்சி யளித்தான். கோதை புதியதோர் இன்பம் கொண்டாள்.

ஆனால் இன்று அதற்கு ஒரு பெரிய தடை ஏற்பட்டு விட்டதே. தந்தை பார்த்துவிட்டுத் தடுத்துவிட்டாரே! கோதையின் உள்ளம் கொந்தளித்துக்கொண் டிருந்தது.

வீட்டுக்கு வந்த பெரியாழ்வார் தம் செல்வ மகளை அழைத்தார். அருகில் உட்கார வைத்து அமுதனின் பெருமைகளையும் அன்பர்களின் பக்தி சரித்திரங்களையும் எடுத்துச் சொல்லி, கோதையின் உள்ளத்தைத் திருத்த முயன்றார். அவளுக்குத் தன் செய்கை பெரும் தவறு என்று தோன்றியது.

அன்று இரவு பெரியாழ்வார் கனவில் பெருமாள் தோன்றி, "எம்மோடு பக்கத்தில் எப்போதும் அமர்ந் திருக்கும் பூங்கோதையே உம்முடைய மகளாக வாய்த்திருக்கிறாள். அவள் சூடித் தந்த மாலையில் தலைமயிர் இருந்ததென்றும் மாசு படிந்துவிட்டது என்றும்

சொல்லி எறிந்து விட்டீர்களே. அந்த மணத்தை நுகர்ந்து மனம் மகிழ நாம் எவ்வளவு ஆவலோடு காத்திருக்கிறோம், தெரியுமா?'' என்று கேட்டார்.

பெரியாழ்வார் திடுக்கிட்டுக் கண் விழித்தார். அர்ச்சகரிடம் இந்தக் கனவைப்பற்றித் தெரிவிக்க ஓடினார். அர்ச்சகரும் அதே சமயத்தில் இவரைக் காணப் புறப்பட்டுக்கொண் டிருந்தார். பெரியாழ்வாராகிய பட்டர் பிரானைக் கண்டதும் அவரைத் தொழுது வணங்கி, "ஆழ்வாரே, என் அபசாரத்தைப் பொறுத்தருளுங்கள். உங்கள் திருமகளின் பெருமை தெரியாமல் குற்றம் கண்டு விட்டேன். கோதை சூடிக் கொடுத்த மாலைகளுக்கே அழகும் மணமும் இருப்பதாகப் பெருமாளே என் கனவில் வந்து கூறிவிட்டார்! நாளை முதல் நீங்கள் தொடுக்கும் மாலைகளைக் கோதைப் பிராட்டி சூட்டிக்கொண்டு மணம் ஏற்றியபின் கொண்டு வரவேண்டும். இதுவே இறைவனுடைய திருவுள்ளம்!'' என்று கேட்டுக் கொண்டார்.

வயதில் முதுமையும் அறிவில் முதிர்ச்சியும் ஏற்பட்டால்கூட இறைவன் உணர்த்தும் புதிய உண்மைகள் அனைத்தையும் புரிந்துகொண்டுவிட முடியாது என்பதை இரண்டு பெரியார்களும் கண்டுகொண்டார்கள். பெரியாழ்வார் தம் மகள் முன் வந்து நின்றார். அவளை அர்ச்சகரிடம் சுட்டிக் காட்டி, "அர்ச்சகரே! என் செல்வத் திருமகளால் நான் பெற்ற பேறுதான் என்னே! என்னை ஆண்டாள் இவள்!'' என்று கூறி, மகளை அணைத்துக் கொண்டு உச்சி மோந்தார். ஆனந்தம் கொண்டார்.

கோதை சூடிக் கொடுத்த மாலைகளை அணிந்து கொண்ட இறைவனுடைய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது என்று பக்தர்களும் பாமரர்களும் ஒருங்கே கூறினார்கள். "சூடிக் கொடுத்த சுடர்க் கொடி அணிந்த மாலைகள் இறைவனுக்கு மேலும் அழகு செய்கின்றன'' என்று ஊர் முழுதும் செய்தி பரவியது.

பூமாலையையும் கூந்தலேயும் ஒருங்கே குறிக்கும் கோதை என்ற பெயருடன், ஆண்டாள், 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்ற பெயர்களால் அன்று முதல் அனைவரும் அழைக்கத் தலைப்பட்டு விட்டார்கள். பெரியாழ்வாரோ பூமகளே தமக்கு மகளாக வந்து வாய்த்ததை எண்ணி எண்ணி ஆனந்தப் பரவசரானுர்.

கோதை தன்னைக் கண்ணன் காலத்தில் வாழ்ந் திருக்கும் கோபிகையாக எண்ணிக் கொண்டாள். முன்பு நிகழ்ந்த காட்சிகள் ஒவ்வொன்றையும் நேரிலே நிகழ்வது போல இன்பம் சுரக்கும் இனிய தமிழிலே கவிதைகளாகப் பாடினுள். பாடுபவர் உள்ளம் பேரின்பத்தில் திளைக்கவும் கேட்பவர் உள்ளம் பேரின்பத்தைப் பருகவும் அமைந் திருந்தது ஒவ்வொரு பாடலும்.

கோபிகைகள் கண்ணனைக் காணுத காலத்தில் அவன் புகழை மற்றவர் சொல்லிப் பாடக் கேட்பதுபோல் கோதை பாடிப் பாடி மன நிறைவு பெற்றிருக்க முயன்ருள். நோன்பிருந்து தவமியற்றினுள். கனவிலே இறைவனுகிய கண்ணன் தன் கரத்தைப்பற்றி மணந்து கொண்டதாகக் கண்டு அதைத் தன் தோழிக்குச் சொன்னுள். கண்ணன் மேனியின் நறுமணத்தையும் அவன் அணிந்த மாலைகளின் நறுமணத்தையும் அவள் கனவிலே தெளிவாக நுகர்ந் தாள். கண்ணனது வாய்பட்ட வலம்புரிச் சங்கத்திடம் அவளுக்குப் பொருமை மூண்டது. "கர்ப்பூரம் நாறுமோ? கமலப் பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்திக்குமோ?" என்று சங்கத்தை நோக்கிக் கேட்டாள்.

இத்தகைய அமுதம் கசியும் இனிய பாமாலைகளால் தமிழ் வளர்த்த கோதை, கண்ணன் மனம் குளிரப் பூமாலை சூடிப் பக்தியையும் வளர்த்தாள்.

ஆண்டாள் தன் உள்ளம் கவர்ந்த கண்ணனைக் குறித்து நோற்ற நோன்பு மார்கழி நோன்பு. அதைப்

பாவை நோன்பு என்றும் வழங்குவது மரபு. இந்த நோன்புக்குரிய பாவைப் பாடலை ஆண்டாள் 731-ஆம் ஆண்டில் இயற்றியதாகத் தெரிகிறது. டிசம்பர் மாதம் 18-ஆம் தேதி அதிகாலை நாலு மணியளவில் இந்த நிகழ்ச்சி நேர்ந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு கூறுகிறார்கள். திருப்பாவை தோன்றியபோது ஆண்டாளுக்கு வயது பதினைந்து. எனவே ஆண்டாள் பிறந்தது 716-இல் ஆடிப்பூரத்தில் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். அழகிய மணவாளப்பெருமான் கோதைப் பிராட்டியை அங்கீகரித்த காலத்தில் ஆண்டாளுக்கு எத்தனை வயது என்பது திட்டமாகத் தெரியவில்லை. கிட்டத்தட்ட திருப்பாவை பாடி முடிந்த ஓராண்டுக்குள் இது நிகழ்ந்திருக்கலாம் என்று பெரியோர்கள் கருதுகிறார்கள்.

ஸ்ரீவில்லிப்புத்தூரை ஆய்ப்பாடியாகவும் பிருந்தாவனமாகவும் கோகுலமாகவும் கருதிப் பாடிய கோதை, கண்ணன் நினைவாகவே கசிந்துருகி, அவனைக் கண்ணாரக் காணவேண்டும் என்று ஏங்கியிருந்தாள்.

அவளுடைய உடல் உள்ளத்து நிலைகளைக் கண்ட பெரியாழ்வார் ஒரு சமயம் திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் அழகிய மணவாளப் பெருமானின் சிறப்பியல்புகளை ஆண்டாளுக்கு எடுத்துக் கூறினார். நூற்றெட்டுத் திருப்பதிகளில் திருவரங்கனையே தன் கருத்தைக் கவரும் கண்ணனாகக் கண்டு கொண்டாள் ஆண்டாள்.

திருவரங்கனைக் காணவேண்டும் என்ற ஆவல் நாளுக்கு நாள் வளர்ந்தது. மேகத்தைத் தூதாக்கிப் பாடுகிறாள். குயிலைக் கூவும்படி ஏவுகிறாள். சங்கத்தை முழங்குமாறு பணிக்கிறாள். இந்தப் பாடல்கள் எல்லாம் பக்திச் சுவையும் கவிதைச் சுவையும் கலந்து பாடுவோர்க்குப் பரவசமாகும் இன்பத்தைக் காலம் காலமாக அளித்து வருகின்றன.

கோதையின் விருப்பத்தை அறிந்த பெரியாழ்வார் அவளை ஒரு மூடு பல்லக்கில் ஏறிக்கொள்ளச் செய்து, திருவரங்கத்தை நோக்கிப் புறப்பட்டார்.

“ஸ்ரீரங்கநாதனுடைய கோபுர விமானம் தெரியும் போது எனக்குச் சொல்லுங்கள். அங்கிருந்து கால் நடையாகவே வந்து மணவாளப் பெருமானைத் தரிசிக்க விரும்புகிறேன்'' என்று கேட்டுக் கொண்டாள் கோதை.

வழியெல்லாம் பக்தர்கள் சூழ்ந்துகொண்டு வந்தார்கள். மலர் தூவினார்கள். காவிரி ஆற்றின் தென் கரைக்கு வந்த பின்னர்தான் பெரியாழ்வார் பொன்னரங்கத்தின் பொற்சிகரம் தெரிவதாகப் பெரியாழ்வார் தம் மகளிடம் கூறினார். ஆனால் சிவிகையினுள்ளே அவளைக் காணவில்லை. எந்த இடத்திலிருந்து கோபுர விமானம் தெரிந்ததோ, அந்த இடத்திலேயே அவள் உடல் சிவிகையைவிட்டு, திருவரங்கத்தை நோக்கிப் போய் விட்டது என்று தெரிந்து கொண்டார்கள். பெரியாழ்வார் திடுக்கிட்டுப் பதறி, ‘சீரார் திருவரங்கர் செய்த களவு ஈது' என்று பாடியவாறு ஓடிப் போய்ப் பெருமானை வணங்கினார்.

என்ன விந்தை! திருவரங்கத்துள் உறையும் மணவாளப் பெருமானின் திருமார்பில் கோதை வீற்றிருப்பதைக் கண்டு அவர் மனம் பரவசம் கொண்டது.

“பெருமானே! என்னை ஆண்டவனே! ஊரறிய உலகறிய வேதங்கள் முழங்கும் வில்லிப்புத்தூருக்கு வந்து என் பெண்ணை மணந்து கொள்ள வேண்டும்! அங்கேயே என் செல்வத் திருமகளோடு அமர்ந்திருந்து பக்தர்களுக்கெல்லாம் அருள் புரியவேண்டும்'' என்று பெரியாழ்வார் வேண்டிக் கொண்டார்.

அவர் கோரியதை மனமுவந்து அங்கீகரித்த பெருமாள், “பங்குனி உத்திரத்தில் மண்ணும் விண்ணும் தொழ நாம் வந்து உமது திருமகளை ஸ்ரீவில்லிப்புத்தூரில்

மணம் புரிவோம்'' என்று தெளிவாக வாக்களித்தார். அடுத்த கணம் கோதை தன் தந்தைக்கு அருகில் வந்து நின்ருள். அவளை அழைத்துக்கொண்டு பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

ஆண்டாள் ஊர் திரும்பியதைக் கண்ட மக்கள், "மலர்க் கோதை வந்துவிட்டாள். ஞானமயச் செழுங் கோதை வந்து விட்டாள்'' என்று துள்ளிக் குதித்து வரவேற்ருர்கள்.

பாண்டிய மன்னன் வல்லப தேவனுடனும், தம் திருமகள் ஆண்டாளுடனும் பெரியாழ்வார், பக்திப் பழ மாக விளங்கிய நம்மாழ்வாரைக் குருகையூர் (ஆழ்வார் திருநகரி) சென்று தரிசித்து அவருடைய ஆசி பெற்றுத் திரும்பினர்.

குறித்த நாள் வந்தது. ஸ்ரீவில்லிப்புத்தூர் விண்ணக ரம்போல் கோலாகலமாக விளங்கியது. குறித்த நேரமும் வந்தது. மாயவன், கோதையின் கையைப் பற்றியது மன்றி, அவள் காலையும் பிடித்து, அம்மி மிதித்து அருந்ததியும் காட்டினன். கோதையின் திருமணம் இனிது முடிந்துவிட்டது.

ஆண்டாளின் திருமணம் குருகையூரில் நம்மாழ்வார் முதலான பெரிய ஆழ்வாராதிகள் முன்னிலையில் சுயம் வரமாக நிகழ்ந்ததாகவும் கூறுவதுண்டு. கோதையின் வாக்காகிய 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி' என்ற இரண்டு பிரபந்தங்களையும் கேட்டு, நம்மாழ்வார் பெரிதும் மெச்சி மகிழ்ந்தாராம். பிறகு அவர் திருமுன்னிலையில் நிகழ்ந்த சுயம்வரத்தில் கோதை ஸ்ரீரங்கநாதனுகிய பெருமானை நாயகனுக வரித்து மணம் செய்து கொண்டாளாம். பிறகுதான் அவள் மணக்கோலத்துடன் திருவரங்கம் சென்ருளாம். திருவரங்கப் பெருமான் அவளை அப்போதுதான் களவு எடுத்துச் சென்ருராம்.

பெரியாழ்வார் வேண்டிக்கொண்டபடி அதன் பிறகே ஸ்ரீவில்லிப்புத்தூரில் கல்யாணம் நடைபெற்றதாம்.

இவ்வாறு பக்திக்குப் புதிய பொருள் விளக்க மாகவும் தமிழ் மொழிக்குப் பெரும் அணிகலனுகவும் விளங்கிய ஆண்டாளின் பெருமை வழிவழியாக இந்த நாட்டை உய்வித்து வந்திருக்கிறது. தெய்வ மணம் கமழும் அவளுடைய இனிய பாடல்கள் குழந்தைகளின் வாயிலும் தவழுகின்றன; பக்தர்கள் இதயத்திலும் நிலைத்திருக்கின்றன. நினைத்தாலே இன்பம் தரும் செஞ்சுவைப் பாடல்களைக் கேட்டால் உயிர் இனிக்கும். சுவைத்தால் அமுதமென அருள் சுரக்கும். வில்லிப் புத்தூர்ச் செல்வி என்றும் வாழ்கிருள் என்ற கருத்திலே தானே என்னவோ, எங்கும் அவள் எத்தனை காலம் வாழ்ந்து எந்த நாளில் மறைந்து போனுள் என்ற செய்திகள் தெரியவில்லை. தெரியவேண்டிய அவசியந் தான் என்ன? திருவரங்கன் கீர்த்தி உள்ளளவும் பூங்கோதையின் பாசுரத்தின் மூலம் ஆண்டாள் வாழ்ந்திருப்பாள்.

௬

மகான் ஜயதேவர்

உலகப் புகழ்பெற்ற ரசமான காவியம் கீத கோவிந்தம். மாயவனுகிய கண்ணபிரானுடைய லீலா விநோதங்களையும் பெருமைகளையும் புகழ்ந்து பாடும் கீதங்களைக் கொண்ட பிரபந்தம். இதை அஷ்டபதி என்றும் சொல்வார்கள். அன்புருவான ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் உள்ள நட்புறவை, பிரேமையை விவரித்துக் கூறும் பாடலகள் அவை. ராதை என்னும் ஜீவாத்மா, பரமாத்மாவை அடையும் வழியைத் தத்துவார்த்தமாக விளக்குவது அந்தப் பிரபந்தம். பகவானிடம் கொள்ளும் பக்தி முழு நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்பதைக் கூறும் இனிமையான நூல் அஷ்டபதி. பக்தனுக்கும் பகவானுக்கும் உள்ள உறவுகளில் நாயக, நாயகி பாவம் என்பதும் ஒன்று. மொத்தமுள்ள ஒன்பது வகையான வழிகளில் இந்த நாயகன்—நாயகி பாவனை எட்டாவது வகையாக அமைந்துள்ளது. அத்துடன் ஒவ்வொரு பாடலும் எட்டுப் பாதங்களைக்கொண் டிருப்பதால் அஷ்ட பதிக்குப் பெயர்ப் பொருத்தமும் இருக்கிறது.

அஷ்டபதி என்றுல் ஆந்திர நாட்டவர்களுக்கு உயிர். வெகு காலமாகப் பாடகர்களுடைய சங்கீத வித்தையின் அளவுகோலாக, கீத கோவிந்தத்தை மதித்து வருகிறுர்கள். பொருள் உயர்வும், சொல் இனிமையும், இசை நுட்பப் பெருமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற உயரிய பக்திப் பாடல் அஷ்டபதி.

கீத கோவிந்தம் நம் நாட்டில் மிகவும் பிரபலமாக விளங்குவதுடன் மட்டுமல்ல; மேல்நாட்டவர் கவனத்தையும் இது வெகு காலத்துக்கு முன்னே கவர்ந்துவிட்டது. கீத

கோவிந்தம் மேல்நாட்டு மொழிகளில்கூட மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. ஸர். வில்லியம் ஜோன்ஸ் என்பவரும் எட்வின் ஆர்னுல்டு என்பவரும் இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிருர்கள். லாஸன் என்ற கவிஞர் லத்தீன் மொழியிலும், ரூக்கெட் என்பவர் ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்த்திருக்கிருர்கள். பிரெஞ்சு மொழியில் கூட இது மொழிபெயர்க்கப்பட் டிருப்பதாகச் சொல்கிருர்கள். ஆனுல் யார், எப்பொழுது இதைச் செய்திருக்கிருர்கள் என்ற விவரம் தெரியவில்லை.

இதன் பிரபலமான பெருமை காரணமாகப் பின்னுல் வந்த பல கவிஞர்கள் இதே போன்ற பல நூல்களை ஒரியா மொழியிலும் சம்ஸ்கிருத மொழியிலும் இயற்றியிருக்கிருர்கள். ஒரிஸ்ஸாவில் முதலில் இந்த அஷ்டபதியைப் பாடிவிட்டுத்தான் பஜனைகளைத் தொடங்குகிருர்கள். ஆவணி மாதத்துக் கிருஷ்ணுஷ்டமி (கோகுலாஷ்டமி)யின் போது கலிங்க வாசிகளும், கார்த்திகை சுக்கில ஏகாதசியின்போது மகாராஷ்டிரர்களும், அதே நாளில் வல்லபாசாரியாருடைய சிஷ்யர்களும் கீத கோவிந்தத்தை மெய்ம் மறந்து பாடுவார்கள். தமிழ் நாட்டில்கூட பஜனைகள், ராதா கல்யாண நிகழ்ச்சிகள் நடைபெறும்போது பாகவதர்கள் அஷ்டபதியைப் பாடுவதைக் கேட்கலாம். அஷ்டபதி இல்லாத ஹரிநாம பஜனையே சோபிப்பதில்லை. அத்தனை பெருமை வாய்ந்தது அஷ்டபதி. தத்துவப் பொருள் நிறைவிலும் பாடல்களின் அந்த இனிமையிலும் மயங்கி மெய்ம்மறந்து போகாதவர்களே இல்லை என்று நிச்சயமாகக் கூறலாம். பாடும்போதே ஒரு பரவசம்; கேட்கும்போது அதைவிட ஆனந்தப் பரவசம்! இந்த அநுபவத்தை அனைவருமே அடைந்திருப்பார்கள்.

ஒப்பற்ற மகா பக்தசிகாமணியாக விளங்கிய ஜயதேவரே இந்த அருமையான காவியத்தை இயற்றியவர். ஜயதேவர் ஒரு மகா கவி. இவருடைய இளம் பருவத்து வரலாறுகள் நமக்குக் கிடைக்கவில்லை. ஏதோ இங்கே

கொஞ்சம், அங்கே கொஞ்சமாகத்தான் தெரிகின்றன. ஆராய்ச்சியாளர்கள் கருத்து என்றைக்குமே ஒருமித்து இருப்பதில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக் குழப்பிவிட்டு விடுவார்கள். ஆயினும் பெரும் பாலோர் ஜயதேவர் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராய் இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். கீத கோவிந்தம் 24-ஆவது அஷ்டபதிக்குப் பிறகு வருகிற சுலோகத்தால் இவருடைய பெற்றோர் யார் என்பதை ஊகித்திருக்கி றார்கள். தந்தையின் பெயர் போஜதேவர் என்றும், தாயின் பெயர் ராதாதேவி என்றும் இருக்கக் கூடும் என்பதே அறி ஞர்கள் முடிவு. பக்தர்களுடைய சரித்திரங்கள் வாயிலாக ஜயதேவரின் வாழ்க்கை வரலாறுகள் சில நமக்குக் கிடைத் திருக்கின்றன. 15-ஆம் நூற்றாண்டில் 'பக்தமாலை' என்ற தொகுப்பு நூல் வெளிவந்திருக்கிறது. சந்திரதத்தர் என்பவர் தொகுத்தது இது. அதில் ஜயதேவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் சில சருக்கங்களில் காணப்படு கின்றனவாம். இதைத் தவிர அவரைப்பற்றிக் கர்ண பரம்பரையான கதையும் வழங்கி வருகிறது.

வடநாட்டில் ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் பூரி என்ற புண்ணிய க்ஷேத்திரத்துக்கு அருகில் உள்ள கிந்துபில்வம் என்ற கிராமத்தில் ஜயதேவர் பிறந்ததாகத் தெரிகிறது. இவரது இளமைப் பருவம், கல்வி, குரு முதலிய விவரங்கள் சரிவரத் தெரியவில்லை.

ஜயதேவரின் மனைவியின் பெயர் பத்மாவதி. மகா உத்தமி. கணவனே தெய்வம் என்று உண்மையாக நம்பித் தொழுது வழிபட்ட பதிவிரதை. "பத்மாவதி சரண சாரண சக்கரவர்த்தி" என்று ஜயதேவரே தம்மைக் குறிப் பிட்டுச் சொல்லிக் கொள்கிறார்.

ஜயதேவருக்கும் பத்மாவதிக்கும் திருமணம் ஆனதே ஒரு ருசிகரமான கதை. ஜயதேவர் அவதரித்த கிந்து பில்வம் என்ற கிராமத்தில் தேவசர்மா என்ற வேதியர் ஒருவரும் வாழ்ந்து வந்தார். சிறந்த வைஷ்ண பக்தர்

அவர். பலகாலமாக அவருக்குக் குழந்தையே இல்லா மலிருந்தது. எனவே பூரியிலுள்ள புருஷோத்தம பகவானைப் பக்தியோடு பாடித் துதித்துக் கொண்டு வந்தார். அவர் அருளால் பிறக்கும் குழந்தையை அவருக்கே அர்ப்பணித்து விடுவதாக வேண்டிக் கொண்டார். ஆண்டவன் கருணையால் அவருக்கு முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் பத்மாவதி.

பத்மாவதிக்குப் பிறகு அவருக்கு ஆண் குழந்தைகள் பிறந்தன. முதலில் வாக்குக் கொடுத்தபடி பத்மாவதிக்கு மணப் பருவம் வந்தவுடன் அவளை ஜகந்நாதப் பெருமா னிடம் சேர்ப்பிக்க விரும்பினார் தந்தை தேவசர்மா.

ஜகந்நாதர் ஆலயத்தின் முக்கிய அர்ச்சகர் கனவில் பகவான் தோன்றினார். தேவசர்மா அர்ப்பணிக்கப் போகும் கன்னிகையை அதே கிராமத்தில் வசிக்கும் ஜயதேவருக்கு மணம் முடித்து வைக்கும்படி அவருக்குக் கட்டளை பிறந்தது.

அர்ச்சகர் தம் கனவில் நிகழ்ந்ததைக் கூறியது கேட்டு, தேவசர்மா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பிறகு பத்மாவதியை அழைத்துக்கொண்டு ஜயதேவரை அணுகி, நடந்தவற்றைவிவரமாகக் கூறி, பத்மாவதியை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். ஜகந்நாதர் ஆலயத்து அர்ச்சகரும் கனவில் நிகழ்ந்தவற்றைக் கூறினார். அந்த நாளில் ஜயதேவர் ஒரு துறவியைப் போல வாழ்ந்து வந்தார். சொத்துச் சுதந்தரம் எதுவு மில்லாமல், ஒரு பெண்ணை மணந்துகொண்டு அவளை வைத்துக் காப்பாற்றத் தம்மால் முடியாது என்று ஜயதேவர் அடியோடு மறுத்துவிட்டார். அர்ச்சகருக்கு அதற்குமேல் என்ன சொல்வது என்று புரியவில்லை. ஆனால் தேவசர்மா உறுதியோடும் பகவானிடம் நம்பிக்கை யோடும் இருந்த காரணத்தால், "ஜயதேவரே! இறைவ னுடைய திருவுள்ளப்படி நான் என் பெண்ணைக் கொண்டு

வந்து கொடுத்துவிட்டேன். அவளை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது. பகவான் கட்டளைப்படி நடக்கட்டும்'' என்று சொல்லிவிட்டு, பத்மாவதியை அங்கேயே விட்டுவிட்டுப் போய்விட்டார்.

பத்மாவதி நின்ற நிலையைக் கண்டு ஜயதேவரின் மனம் கரைந்துவிட்டது. தனியே நின்ற அந்தப் பெண் குனிந்த தலை நிமிரவில்லை. முகத்திலே அருள் பொங்கும் எழில் வடிந்தது. சற்றுப் பொறுத்து அவள், அவர் காலில் விழுந்து வணங்கி, ''பகவானுடைய சித்தம் இது. நான் உங்களுடையவள்; என் தந்தை கூறுவது சத்தியம். என்னை ஏற்றருளவேண்டும்'' என்று விநயமாகக் கேட்டுக் கொண்டாள்.

ஜயதேவர் மனம் பாகாய் உருகிவிட்டது. ''பெண்ணே! நீ இங்கே கிருக லக்ஷ்மியாக விளங்குவாய். எழுந்திரு. உன் தந்தையிடம் என் சம்மதத்தைப் போய்த் தெரிவிக்கலாம்'' என்றார். அதன்படியே இருவருமாகவே தேவசர்மாவிடம் போனார்கள். அவர் உள்ளம் குளிர்ந்தது. விதிப்படி இருவருக்கும் திருமணம் நடத்தி வைத்தார். அந்த வேளை முதல் பத்மாவதி தன் கணவனை விட்டுப் பிரியாமலே இருந்து வந்தாள்.

ஜயதேவர் ஒரு பிறவிக் கவி. சாஸ்திர ஞானமும் சங்கீத ஞானமும் மிகுந்தவர். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா விடம் இணையற்ற பக்தி பூண்டவர். மக்கள் அவனை மறந்து படும் அல்லல்களை எண்ணி அவர் மனம் வருந்தியது. அவர்கள் கடைத்தேற வேண்டுமானால் பகவானுடைய பெருமைகளை அறிந்து அவனிடம் பக்தி செலுத்த வேண்டும். இதற்கு என்ன வழி? சங்கீதம் இதற்கு ஒரு சிறந்த சாதனம். கானத்தில் மயங்காதவர்கள் யார்? பகவானுடைய அளப்பரிய மகிமைகளையும், மக்கள் குலம் உய்ய அவன் புரிந்த பல லீலா விநோதங்களையும் அமைத்துப் பல பாடல்கள் இயற்றினால் நல்லது என்று அவருக்

குத் தோன்றியது. இதன் விளைவாகத் தோன்றியதுதான் கீத கோவிந்தம் என்னும் அழகிய காவியம். அந்த இனிய கானத்தைப் பாடுவோரும் கேட்போரும் பக்தி வெள்ளத்தில் மூழ்கி, கண்ணனுடைய தியானத்தில் ஆழ்ந்து, தன் மயமாய் விளங்கவேண்டும் என்பதே அவருடைய நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறக் காவியம் உருவாகத் தொடங்கியது.

பதினெட்டு அஷ்டபதிகள் பாடி முடித்துவிட்டார் ஜய தேவர். பத்தொன்பதாவது அஷ்டபதியில் ஓர் இடத்தில் பாட்டுத் தடைப்பட்டது. ஆறு சரணங்கள் அருமையாக அமைந்துவிட்டன. ஏழாவது சரணம் எழுத வேண்டும். அதில் கிருஷ்ணன் பிடிவாதக்காரியான ராதையின் பாதங் களைத் தூக்கித் தன் தலையில் வைக்கும்படி வேண்டுகிறுன் என்று ஒரு கட்டம் வந்தது. ஆனுல் அதை எழுத அவருக்குக் கை ஓடவில்லை. ''இது என்ன விபரீதம்! பகவானுடைய தலையில் ராதை காலை வைப்பதாவது! அப்படி எழுதுவது பெரிய அபசாரம் அல்லவா?'' என்று தோன்றிவிட்டது. மேலே எழுத மனம் வராமல் ஏட்டுச் சுவடியைத் தம் மனைவி பத்மாவதியிடம் கொடுத்துவிட்டுப் பின்கட்டுப் பக்கம் எண்ணெய் ஸ்நானம் செய்யச் சென்றுர்.

சற்றைக்கெல்லாம் எண்ணெய்த் தலையோடு ஜயதேவர் பத்மாவதியிடம் வந்தார். ''எங்கே, அந்த ஏட்டுச் சுவடியைக் கொடு! அருமையான கற்பனை ஒன்று தோன்றியிருக்கிறது. உடனே அதை எழுதிவிட வேண்டும். அப்புறம் என்றுல் அது மறந்து போய்விடும்'' என்று கேட்டார்.

பத்மாவதி தேவி அவ்வாறே ஏடும் எழுத்தாணியும் கொண்டு வந்து கொடுக்க, அவர் தம் கற்பனையை ஓட விட்டு எழுதினுர். ராதையின் பாதங்களைத் தன் தலையில் வைக்கும்படி கண்ணன் கெஞ்சுவதாக அந்தச் சரணம் மிகுந்த ஒலி நயத்தோடு அமைந்து விட்டது. பிறகு

ஜயதேவர் ஸ்நானம் செய்யச் செல்வதுபோல் போய் விட்டார்.

ஸ்நானம் எல்லாம் முடிந்து, பூஜை ஆகாரமெல்லாம் ஆயிற்று. ஜயதேவர் அஷ்டபதியை விட்ட இடத்தி லிருந்து எழுதுவதற்காக ஏட்டுச் சுவடியைக் கொண்டு வரும்படி பத்மாவதியைப் பணித்தார்.

“அதுதான் முன்பு வந்து வாங்கிக் கொண்டீர்களே! அங்கேதான் இருக்கும்; பாருங்கள்” என்றாள் பத்மாவதி.

“நான் எப்போது வாங்கிக் கொண்டேன்? ஸ்நானம் செய்யப் போகும்போது கொடுத்துவிட்டுப் போனவன் இப்பொழுதுதானே இந்த அறைக்குள்ளேயே நுழை கிறேன்?” என்றார் ஜயதேவர்.

“எண்ணெய் தேய்த்த தலையோடு, அப்புறம் அந்தக் கற்பனை வராது என்று சொல்லி, ஏட்டுச் சுவடியை வாங்கி எழுதவும் எழுதினீர்களே!” என்று நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னாள் பத்மாவதி.

ஜயதேவருக்கு உண்மை விளங்கிவிட்டது. ஓடோடிச் சென்று சுவடியைப் பிரித்துப் பார்த்தார். என்ன விந்தை இது! எந்தப் பகுதியை எழுத அவருடைய கை கூசியதோ அந்தப் பகுதியே அதில் மிக அழகாக எழுதப்பட் டிருந் ததைக் கண்டார். கையெழுத்து அவருடைய கையெழுத்தைப் போலவே இருந்தது. சுவடியில் எண்ணெய்க் கறைகூடப் பட்டிருந்தது.

ஜயதேவர் ஆச்சரியத்தோடு கரை காணாத துக்கமும் பட்டார். அந்தப் பாதத்தை எழுதிப் பூர்த்தி செய்தவன் மாயக் கண்ணன்தான் என்று அவருக்கு நிச்சயமாகப் பட்டுவிட்டது. “பத்மாவதி! நீ பாக்கியசாலி. என்னைப் போலவே வந்து உன்னிடம் ஏட்டுச் சுவடியை வாங்கிக் கொண்டு உனக்குக் காட்சியளித்தவன் அந்த மாயவனே தான். எனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையே!” என்று வருந்தினார்.

ராதையின் பாதம் தன் தலையில் படுவது தனக்குப் பரமானந்தத்தைத் தருவது என்றும் என்னைக் காட்டிலும் என் பக்தர்களே மேலானவர்கள் என்றும் உபதேசிக்க அல்லவா கிருஷ்ண பரமாத்மா அவசர அவசரமாக ஓடிவந்து, திருட்டுத்தனமாக எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறான் என்று ஜயதேவருக்குத் தோன்றியது. பகவான் பக்தர் சேர்க்கையால்தான் துயரமும் கவலையும் ஒழிந்து அருள் சுரக்கிறது என்ற உண்மையை அவர் உணர்ந்தார். அத்தகைய பெருமையை உணர்த்த வந்த பெருமானைக் கணவன் வடிவில் கண்ணாரக் கண்டு பேசும் பாக்கியம் பெற்ற பத்மாவதியைப் புகழ்ந்து கொண்டாடினார். அத்துடன் அவர் பேச்சளவில் விட்டுவிடவில்லை. அதன் பின் எழுதிய கீதங்களில் எல்லாம் தம்மைப் பத்மாவதியின் கணவன் என்றே முத்திரையடிகளிலும் குறிப்பிட்டுக் கொண்டார்.

ஜயதேவருடைய கீத கோவிந்தம் மக்கள் மனத்தைக் கவர்ந்ததுடன் மன்னனையும் கவர்ந்து இழுத்தது. அந்த நாட்டையாண்ட மன்னன் சாத்தியகி அதைப் பாடச் சொல்லிக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தான். ஜயதேவ சுவாமிகளைப் போற்றிப் பணிந்தான்.

ஒரு சமயம் அரசன் சாத்தியகியுடன் பிறந்த ஒருவன் இறந்து போனபோது அவனுடைய மனைவியும் உடன் கட்டை ஏறுவதாக இருந்தது. ஊரே திரண்டு வேடிக்கை பார்க்கப் போயிருந்தது. அரசன் கூட அங்கே போயிருந்தான்.

அன்றைக்கு அரசியைப் பார்க்கப் பத்மாவதி வந்திருந்தாள்.

“ஏன், நீங்கள் அந்த ஸ்திரீயைப் பார்க்கப் போகவில்லையா?” என்று பத்மாவதியைக் கேட்டாள் அரசி.

“இல்லை. கணவன் இறந்துவிட்டான் என்று அறிந்ததும் விழுந்து இறவாமல், உடன்கட்டை ஏறுவ

தாகச் சொல்லி அதை ஆடம்பரமாகவும் தெருக் கூத் தாகவுமா செய்யவேண்டும்! இதில் என்ன வேடிக்கை இருக்கிறது?'' என்று கேட்டாள் பத்மாவதி.

“சொல்லலாம்; அது எளிது. ஆனல் அப்படி நடக்குமா? கணவன் இறந்துவிட்டான் என்று தெரிந்த வுடனே மனைவிக்கு உயிர் எப்படிப் போகும்?'' என்று கேட்டாள் அரசி.

“ஏன் போகாது? கணவனைத் தெய்வமாகக் கருதும் பெண்களுக்கு உயிர் போகும் என்றுதான் சொல்வேன்!'' என்ருள் பத்மாவதி.

இதைச் சோதித்துப் பார்த்துவிட வேண்டும் என்ற விபரீதமான ஆசை உண்டாயிற்று அரசிக்கு. பத்மாவதி சொன்னதைப் பொய்யாக்கிக் காட்ட வேண்டும் என்று கருதிஞள். அதற்கேற்ற சமயம் ஒன்றும் வந்தது.

ஒருநாள் அரசன் வேட்டையாடச் சென்றபோது ஜயதேவரையும் கூடவே அழைத்துச் சென்றிருந்தான். வேட்டைக்குப் போனல் சில சமயம் திரும்பிவர இரண்டு மூன்று நாட்கள் பிடிக்கும். அரசிக்கு அந்த விபரீத ஆசை தலை தூக்கியது. சேவகன் ஒருவனைவிட்டு ஒரு துக்கச் செய்தியைக் கொண்டு வரும்படி ஏற்பாடு செய்து விட்டாள். அதன்படி அரசியும் பத்மாவதியும் அரண்மனை யில் பேசிக்கொண் டிருந்த நேரம் பார்த்து அந்தச் சேவகன் வேட்டையிலிருந்து திரும்பி வருவதுபோல் ஓடி வந்தான். ஜயதேவரை ஒரு புலி அடித்துக் கொன்றுவிட்டது என்று அழுது புலம்பியவாறு கூறினன்.

பத்மாவதி அந்தச் செய்தியைக் கேட்டாளோ, இல்லையோ அந்தக் கணமே தரையில் சுருண்டு விழுந்து விட்டாள். உயிர் பிரிந்து போய்விட்டது.

அரசிக்கு இப்போதுதான் தன் விபரீத விளையாட்டின் விளைவு புரிந்தது. அவள் பயந்து நடுங்கிவிட்டாள். அரசனும் ஜயதேவரும் அரண்மனை திரும்பினர்கள். நடந்த

செய்தியைக் கேட்டதும் அரசன் அதிர்ச்சியுற்றுன். அரசியின் விபரீதச் செயலுக்கு மனம் நொந்தான். அவள் செய்த பிழைக்குப் பரிகாரமாக அவன் தன்னேயே மாய்த்துக்கொள்ள விரும்பி, வாளே உருவினுன்.

ஜயதேவர் அவனேத் தடுத்து நிறுத்தினுர். பிறகு கண்ணன் பூர்த்தி செய்து வைத்த பத்தொன்பதாம் அஷ்டபதியான 'வதனியதி' என்ற கீதத்தைப் பாடத் தொடங்கினுர். கீதத்தை அவர் பாடி முடித்த போது, துயில் நீங்கி எழுவதுபோல் பத்மாவதி உயிர் பிழைத்து எழுந்துவிட்டாள். அரசனும் அரசியும் அவர்களுடைய பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கி, தங்கள் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டார்கள். எதையாவது அவர்கள் பிழையாகக் கருதினுல்தானே மன்னித்துவிடுவதற்கு? ஜயதேவரையும் பத்மாவதி தேவியையும் அரசனும் அரசியும் லக்ஷ்மி நாராயணர்களாக வழிபட்டு வந்தார்கள்.

காய்கறித் தோட்டத்தில் ஒரு பெண்மணி ஒரு நாள் இரவு நிலவொளியில் கத்தரிக்காய் பறித்துக்கொண்டே கீத கோவிந்தத்தைத் தேனெழுகப் பாடிக்கொண்டிருந்தாள். அந்த நிலவொளியில் பரவிய அந்தப் பக்தி கீதத்தைக் கேட்கப் புருஷோத்தமனே வந்துவிட்டானும். அவளுடைய பரம பக்திக்கு வசப்பட்ட அந்த மாதவன் அவள் கண்ணில் படாமல் அவள் பின்னுலேயே போய்க் கொண்டிருந்தானும். கத்தரிச் செடியிலுள்ள முட்களில் அவன் அணிந்திருந்த பீதாம்பரம் சிக்கி அங்கங்கே கிழிந்து போய்விட்டது.

மறுநாள் கோயிலில் பூஜை செய்யும் அர்ச்சகர் கதவைத் திறந்து பார்த்தார். பகவானுக்குச் சாத்தியிருந்த பட்டாடைகள் கிழிந்தும் முட்கள் குத்திக் கொண்டும் கத்தரி இலேகள் ஒட்டிக் கொண்டும் இருப்பதைப் பார்த்துத் திகைத்துப் போனுர். செய்தி உடனே அரசனுக்கும் எட்டியது. பெரிய பூட்டுப் போட்டுப்

பூட்டியிருந்த கர்ப்பக்கிருகத்தினுள் யார் நுழைந்திருக்க முடியும். பகவானுடைய ஆடையில் மாசு உண்டானது எப்படிச் சாத்தியமாயிற்று என்று அரசனும் அதிசயித்துப் போய் விசாரணை செய்ய உத்தரவிட்டான்.

அன்று இரவில் அவன் கனவில் பகவான் புருஷோத்தமன் தோன்றினார். முதல் நாள் இரவு நடந்தவற்றை யெல்லாம் தத்ரூபமாகக் காட்டினார். பொழுது புலர்ந்த உடனே மன்னன் அந்தப் பெண்மணி இருந்த குடிசைக்கு விரைந்து சென்றான். அவளை ஆசார உபசாரத்துடன் அரண்மனைக்கு அழைத்து வந்தான். தினமும் கீத கோவிந்தத்தைப் பாடி ஆராதிக்க அவளுக்கு அரண்மனையிலேயே ஏற்பாடுகள் செய்து தந்தான்.

ஜயதேவர் தம் வழிபடு கடவுளான ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் கைங்கரியத்துக்காகப் பல க்ஷேத்திரங்களுக்குப் போய் வந்தார். பிருந்தாவனம், துவாரகை, ஜயபுரம் முதலிய இடங்களுக்குச் சென்று மாயக் கண்ணன் பாததூளி பட்ட இடங்களைச் சென்னியில் தரிந்து வந்தார். அங்கங்கிருந்த அன்பர்கள் பலர் அவருடைய ஆலயத் திருப்பணிக்கு என்று பொருள் கொடுத்து அனுப்பினார்கள். ஜயதேவரும் அவர் மனைவியும் அந்தப் பொருள்களுடன் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு ஊர் திரும்பினார்கள். வழியில் காடு. திருடர்கள் இதை எப்படியோ அறிந்து அவர்களை வழி மறித்துக் கொண்டார்கள். ஜயதேவருடைய கால்களையும் கைகளையும் வெட்டிப் போட்டுவிட்டு, பத்மாவதியைக் கதறவிட்டு விட்டுப் போய்விட்டார்கள்.

தற்செயலாக மறு நாள் அந்தக் காட்டுப் பக்கம் வந்த அரசன் ஜயதேவர் முண்டமாகக் கிடப்பதையும் பத்மாவதி மூர்ச்சித்துக் கிடப்பதையும் கண்டு, அவர்களை அரண்மனைக்கு எடுத்துச் சென்றான். வேண்டிய சிகிச்சைகள் செய்து அவர்களைத் தன் அரண்மனையிலேயே தங்கும்படிச் செய்தான்.

ஜயதேவர் தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்யும் இயல்புள்ளவர். தம்மை இம்சித்த திருடர்கள் சாது வேடம் பூண்டு அரண்மனைக்கே வந்த போது ஜயதேவர் அவர்களை அடையாளம் கண்டு கொண்டார். ஆயினும் அவர்களைக் காட்டிக் கொடுக்காமல் அவர்கள் தமக்கு மிகவும் வேண்டியவர்கள் என்று கூறி, அவர்களுக்குப் பல பரிசுப் பொருள்களும் சன்மானங்களும் அரசனிடம் வாங்கிக் கொடுத்தார். ஆனால் நன்றியில்லாத அந்தத் திருடர்கள் ஒரு பொய்க் கதை ஒன்றைக் கட்டிவிட்டார்கள். ஜயதேவர் செய்யத் தகாத காரியம் ஒன்றைச் செய்துவிட்டதாகவும் அதை வெளியில் சொல்ல வேண்டாம் என்று தங்களுக்குப் பல பரிசுப் பொருள்கள் வாங்கிக் கொடுத்திருப்பதாகவும் இழிவாகப் பேசிக்கொண்டு போனார்கள். அவர்கள் அந்த நகர எல்லையைத் தாண்டுவதற்குள் ஆகாயத்தில் இடி ஒன்று இடித்தது. மறுகணம் அவர்கள் தலையில் விழுந்தது. அரசாங்கத்துச் சேவகர் மூலமாக இந்தச் செய்தி ஜயதேவ சுவாமிகளுக்கு எட்டியது. அவர் பரிதவித்து, அறியாமையால் அவர்கள் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு பகவானிடம் முறையிட்டுக் கொண்டார். அவர்களுக்குப் போன உயிர் வந்துவிட்டது. அவருடைய காருண்யத்துக்கும் பொறுமைக்கும் வெகுமதியாக ஜயதேவருடைய கைகால்கள் அந்தக் கணமே குறையாது வளர்ந்தும் விட்டன.

ஜயதேவர் ஒவ்வொரு நாளும் கங்கையில் நீராடச் செல்வது வழக்கம். வயது முதிர்ந்து, உடலும் தளர்ந்து விட்டதால் ஒரு நாள் வழியில் அவர் விழுந்து மூர்ச்சை யாகிவிட்டார். இதைப் பார்த்த கங்காதேவியே மனம் கசிந்து போய்விட்டாள்.

''தினமும் உன்னால் என்னிடம் வருவது கஷ்டமாக இருக்கிறது. அதனால் நானே உன் வீடுதேடி வருவேன்'' என்று அவர் கிராமத்தில் உள்ள அவர் வீட்டுக்

கிணற்றுக்கே வந்துவிட்டாளாம். கிணறு பொங்கி வழிந்து அடங்கியது.

பகவான் வேதவியாசரே ஜயதேவராக அவதரித்தார் என்று ஒரு கொள்கை மக்களிடையே நிலவுகிறது. ஜயதேவர் தங்கள் ஊர்க்காரர் என்று வங்காளிகள் உரிமை பாராட்டுகிருர்கள். ஒரிஸ்ஸாவைச் சேர்ந்தவர் என்று ஒரியா மக்கள் உரிமை கொண்டாடுகிருர்கள். ஒரிஸ்ஸாவை ஆண்ட பிரதாபருத்திர மகாராஜாவின் சாசனம் ஒன்று இன்றும் இருக்கிறது. அது 16-ஆம் நூற்ருண்டில் எழுதப்பட்ட சாசனம்.

பூரியிலுள்ள ஜகந்நாதர் ஆலயத்தில் கீத கோவிந்தத்தைத் தவிர வேறு ஒன்றையும் தேவதாசிகள் பாடக் கூடாது என்று அவன் உத்தரவு பிறப்பித்துவிட்டான். இதுதான் அந்தச் சாசனத்தில் கண்டிருப்பது. மகாராஷ்டிரர்களும் ஜயதேவர் ஒரிஸ்ஸாவைச் சேர்ந்தவர்தான் என்று கூறுகிருர்கள்.

யார் எப்படிக் கருதினுலும் உலகம் போற்றும் உன்னதமான இசைக் காவியம் ஒன்றை இயற்றிய ஜயதேவர் நம் பாரத நாட்டுக்கே சொந்தமானவர். இதைக் கொண்டு நாம் பெருமைப்படலாம்.

ஜயதேவரைப் பற்றி வழங்கும் கதைகள் உண்மையாகவும் இருக்கலாம்; மிகையாகவும் இருக்கலாம். ஆனல் கீத கோவிந்தத்தைப் பற்றி எவ்வளவு புகழ்ந்து பேசினுலும் அது ஒரு நாளும் மிகையாக இருக்க முடியாது. அதைப் புகழ்ந்து பேசுவதற்கே ஆண்டவன் திருவருள் நமக்கு இருக்க வேண்டும்.

7

மகான் கபீர்தாஸர்

வீட்டுக்குள்ளே நுழைந்து வந்தது ஒரு நாய். அங்கே ஒரு தட்டிலே காய்ந்த ரொட்டித் துண்டு வைத்திருப்பதைக் கண்டு, வாயிலே கௌவிக்கொண்டு வெளியே ஓடியது. இந்தக் காட்சியை அருகிலே ஒரு தறிமுன் அமர்ந்து, துணி நெய்துகொண் டிருந்த மனிதர் ஒருவர் பார்த்தார். உடனே ஒரு தொன்னையில் கொஞ்சம் நெய்யை ஊற்றி வைத்துக்கொண்டு, "பிரபோ, ஹே பிரபோ!" என்று கூவிக்கொண்டே அந்த நாயைத் துரத்தியவாறு ஓடினார்.

கடைசியில் நாயைத் தடுத்து நிறுத்திவிட்டார்.

"பிரபுவே! இது காய்ந்த ரொட்டித் துண்டு. அப்படியே தின்றால் தொண்டையில் அடைத்துக் கொள்ளும். இந்தாருங்கள்; ரொட்டியை இந்த நெய்யில் தோய்த்துக்கொண்டு சாப்பிடுங்கள்!" என்று அந்தக் காய்ந்த ரொட்டிக்கு நெய்யைத் தடவிக் கொடுத்தார் அந்த மனிதர்.

மனிதனா அவர்? நாயிலும் இறைவன் திருவுருவைக் கண்ட அவர் ஒரு மகான்தான். சந்தேகமே யில்லை. அவர்தான் மகான் கபீர்தாஸ்.

"கடவுள் ஒருவரே; எல்லா ஜீவராசிகளும் அவருடைய சொரூபமே. எங்கும் அவர் இருக்கிறார். அப்படி யிருக்க அவர் என் கடவுள், இவர் அவன் கடவுள், உன் கடவுள் இந்தப் பிரிவினை யெல்லாம் ஏன்?" என்பது அவருடைய கேள்வி.

பாரத நாட்டில் தோன்றி, உண்மையாகவே இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்ட பெரிய மகான்கள் சிலருக்குள் கபீர்தாஸர் ஒருவர். அவர் காசியில் அவதரித்ததாகச் சொல்லுகிறார்கள். பிறந்த வருஷம் 1399-ஆம் ஆண்டு; மாதம் மே; தேதி 20.

இன்றைக்கும் அந்த மகாத்மாவின் பிறப்புப் பற்றிய உண்மை விவரம் சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. பக்தியில் சிறந்த பிருகல்லாதனே இந்த உலகில் கபீராக அவதரித்ததாகச் சொல்லுகிறார்கள். ஒரு யோகிக்கும் அப்சரப் பெண் ஒருத்திக்கும் பிறந்தவர் என்பது அவர்கள் கருத்து. வேறு சிலர் வேறு விதமாகக் கருதுகிறார்கள். காசியிலுள்ள லஹர்தாரா ஏரியில் பூத்த ஒரு தாமரை மலரிலிருந்து தோன்றியவர் அவர் என்று சொல்லு கிறார்கள். மூன்றாவது கட்சி ஒன்று உண்டு. காசியில் இருந்த புண்ணியபுரி என்ற அந்தணர் தம் விதவை மகளோடு தினம் பக்தரான ராமானந்தருடைய உபதேசங்களைக் கேட்கப் போவாராம். அந்த மகான் உபதேசம் முடிந்ததும் ஒரு நாள் எல்லாரையும் ஆசீர்வதிப்பதைப் போல அந்த இளம் விதவையையும், "உனக்குப் புத்திர சௌபாக்கியமெல்லாம் உண்டாகட்டும்!" என்று உண்மை தெரியாமல் ஆசீர்வதித்து விட்டாராம். அந்த மகானுடைய வாக்குப் பலித்துவிட்டது. அந்த வாக்குப் பொய்க்காமல் பிறந்த குழந்தையை ஊரார் அபவாதத்துக்குப் பயந்து, ஏரி கரையிலே போட்டுவிட்டுப் போய் விட்டதாகவும் அந்தக் குழந்தையை நீரு என்ற முஸ்லிம் நெசவாளி கண்டெடுத்துக் கொண்டு போய் வளர்த்ததாகவும் அதுவே கபீர் என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

நீருவின் மனைவி நிமா அதைக் கடவுள் கொடுத்த குழந்தையாகக் கருதி சொந்தக் குழந்தையாகவே வளர்த்தாள். கபீர் வயது வந்ததும் லோயீ என்பவளை மணந்து கொண்டார். கமால் என்று ஓர் ஆண் குழந்தையும் கமாலி என்று ஒரு பெண் குழந்தையும் அவர்களுக்குப்

பிறந்தார்கள். இந்தக் கதைதான் கபீரைப்பற்றிப் பிரபலமாக வழங்குகிறது.

கபீர் பிறவியிலேயே முஸ்லிம் என்றும் ஒரு கதை. முப்பது வயதானபோது ஒரு நாள் அவர் கங்கைக் கரையிலுள்ள படிக்கட்டில் உட்கார்ந்திருந்தார். ஹரிநாம சங்கீர்த்தனம் பாடி, பக்தியை அந்தப் பகுதியெல்லாம் பரப்பி வந்த சாது ராமானந்தர் என்பவர் ஸ்நானத்துக்கு வந்தபோது ஒரு படிக்கட்டில் இடறி விழப்போனுர். அந்தச் சமயத்தில் கபீர்தாஸரின் தலையைப் பிடித்து, ''ஹே ராமா!'' என்று தாங்கிச் சமாளித்துக்கொண்டார். அந்த ராமநாமமே தாரக மந்திரமாகக் கொண்டு, அவருடைய சிஷ்யராக மாறிவிட்டார் கபீர். இப்படியும் ஒரு வரலாறு வழங்குகிறது.

எது உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவருடைய தொழில் நெசவுத் தொழில் என்பதில் மாறுபாடே இல்லை. சிறுவயதில் அவர் ஒரு நாள் தறியில் அமர்ந்து, துணி நெய்து கொண்டிருக்கையில் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து ஒரு துணி வேண்டும் என்று யாசகம் கேட்டாராம். கபீர், ''பிஸ்மில்லா!'' என்று இறைவன் திருநாமத்தை ஓதிவிட்டுத் துணியை எடுத்துக் கொடுத்தார், அந்தணரோ அதை வாங்க மறுத்து விட்டார்.

அது போலவே அவர் போன பிறகு ஒரு முஸ்லிம் பக்கிரி அவரிடம் துணி யாசகம் கேட்டுக்கொண்டு வந்தார். கபீர், ''ஹே ஜய் சீதாராம்!'' என்று ராம நாமத்தைச் சொல்லியவாறு துணியை எடுத்துக் கொடுத்தாராம். அந்தப் பக்கிரி துணியை வாங்கிக் கொள்ளாமலே போய்விட்டார்.

கபீர் கவலைப்படவில்லை. ''ஆண்டவன் ஒருவனே. இந்துக்களுக்கு ஒரு கடவுள்; முஸ்லிம்களுக்கு இன்னொரு கடவுள் என்றெல்லாம் கிடையாது. எல்லா மதங்களின்

கொள்கைகளும் ஒன்றே. அப்படியிருக்க நம்மிடையே இந்த வேற்றுமையும் பகைமையும் ஏன்?'' என்று கேட்டார் கபீர்.

கபீர் பள்ளிக்கூடம் சென்று பாடம் ஏதும் படிக்க வில்லை. சின்னஞ் சிறு வயதிலே அவர் மனம் நேரிய முறையில், தர்ம நெறியில் சென்றது. நன்ருக விவரம் தெரிந்த பிறகு அவர் மனம் நல்ல குருவாக ஒருவரை நாடி உபதேசம் பெற்றுக்கொள்ள ஆவல் கொண்டது. வைஷ்ணவர்களின் பக்தி மார்க்கம் அவரை மிகவும் கவர்ந்தது. வைஷ்ணவர்களின் குருவான சுவாமி ராமானந்தர் உபந்நியாசத்தை அவர் ஒரு முறை கேட்க நேர்ந்தது. அவரிடம் சென்று பாடம் கேட்க விரும்பினார் அவர். அவர் முஸ்லீம்; வைஷ்ணவ குருவிடம் அவர் வந்து பயிலுவதாவது? எனவே ராமானந்தருடைய சிஷ்யர்கள் அவரை முதலில் ஏளனம் செய்து அவமதித்து அனுப்பி விட்டார்கள். பிறகுதான் கங்காநதிப் படித்துறையில் ராமானந்தரைச் சந்தித்த அந்த நிகழ்ச்சி நேர்ந்தது.

''ராம், ராம்!'' என்று ராமானந்தர் அவர் சிரசில் கை வைத்தபோது அவர் உடலில் ஒரு புளகம் உண்டாயிற்று. அதுமுதல் அவரையே தம் குருவாகவும் ராமநாமத்தையே குரு அருளிய உபதேச மந்திரமாகவும் பற்றிக்கொண்டு விட்டார் கபீர். நெஞ்சிலும் நினைவிலும், 'ராம் ராம்' என்ற நாம ஸ்மரணைதான் எப்போதும். ''காசியில் பிறந்து, ராமானந்தரால் ஒளி கண்டேன்'' என்று அவரே பின்னால் ஒரு சமயம் பாடியிருக்கிறார்.

கபீரின் முஸ்லிம் பக்தர்கள் அவர் ஷேக் தக்கி என்ற சூபி பக்கிரியின் அருள் பெற்றவர் என்கிறார்கள். ஆனால் கபீர்தாஸரின் தோஹா என்னும் இரண்டடிப் பாடல்களைக் கவனித்தால், அவர் ராமானந்தரின் பெயரைக் குரு பக்தியோடு குறிப்பிட்டிருப்பது நன்ருக விளங்கும். அவரைக் குறிப்பிட்டிருப்பது மாதிரி வேறு யாரையும் அத்தனை சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. பீர்

பீதாம்பர் என்ற ஒருவரிடத்திலும் கபீர்தாஸருக்கு மதிப்பு உண்டு என்று அவர் பாட்டுக்களிலிருந்து தெரிகிறது.

மனைவி மக்களைப் பராமரிக்க அவர் மிகவும் சிரமப் பட்டு நெசவு வேலை செய்யவேண்டி யிருந்தது. சாதுக்களையும் பக்தர்களையும் அவர் எப்போதும் உபசரித்து உணவும் அளிப்பது வழக்கம். இதனால் பல சமயம் அவர் பட்டினி கிடக்க நேரிட்டுவிடும். கல்வி கேள்வி களில் சிறந்தவர் என்று அவரைச் சொல்ல முடியாது. அவரே ஓர் இடத்தில், ''காகிதத்தையோ பேனாவையோ, மசியையோ நான் தொட்டதில்லை'' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். இருந்தாலும் அவருடைய இரண் டடிப் பாடல்கள் பக்தி இலக்கிய வகையில் இன்றைக்கும் பாரத நாட்டில் சிறந்து விளங்குகின்றன.

அவருடைய பாடல்கள் 'பீஜக்' என்று நூலில் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. ரமையினி, ஸப்த, ஸாகி என்ற மூன்று பகுதிகள் கொண்டது இந்த நூல். பஞ்சாபி, ராஜஸ்தானி, கடீபோலி, அவதி, பூர்பி, ப்ரஜபாஷை முதலிய பேச்சு வழக்குகள் இந்தப் பாடல் களில் மிகுதியாக வழங்கப்பட்டுள்ளன என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். கருத்துக்களை நேராகவும் தெளிவாகவும் அவர் பாடல்கள் தெரிவிக்கின்றன. சொல்லுகின்ற முறையில் நேராகச் சொல்லுவது எல்லாருக்கும் பலித்து விடுவதில்லை.

அவருடைய பாடல்களில் காணும் தத்துவங்கள் மிகவும் உன்னதமானவை. இறைவனைத் தோழனாகவும், தந்தையாகவும், நாயகனாகவும் பாவித்து ஆழ்ந்த கருத்துக்களைப் பொதித்து பாடியிருக்கிறார். கள்ளம் கபட மற்ற குழந்தை போல் ஒரே நிலையாகச் சத்தியத்தையே நாடி அவர் வாழ்ந்தார். அதனால் பல இன்னல்களுக்கு அவர் ஆளாகவேண்டி யிருந்தது.

கபீர்தாஸருக்கு ஜாதி, மதம், சடங்கு இவைகளில் சிறிதும் நம்பிக்கையில்லை. இந்து மதத்திலும் சரி, முஸ்லிம் மதத்திலும் சரி. உள்ள உண்மைகளை மத வேற்றுமை சிறிதும் இன்றி, பல மகான்களிடம் தீட்சை பெற்று அறிந்து பாடியிருக்கிருர்.

"பரமாத்மா என்ற ஒன்றுக்கு உருவம் கிடையாது. அவர் அனைவரது உள்ளங்களிலும் உறைகிருர். அதனுல் ஆண்டவனைத் தியானத்தினுல் மனத்தில் நிறுத்திக் கொள்ளவேண்டும்" என்று அவர் தம் பாடல்களிலே வலியுறுத்தி யிருக்கிருர். அதே மூச்சில் வேஷதாரிகளையும் போலியான மோசக்காரர்களையும் கண்டித்து அவர்களு டைய உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்தி யிருக்கிருர்.

15-ஆம் நூற்ருண்டில் மதச் சடங்குகள், சம்பிர தாயங்கள் காரணமாக இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையே இருந்த சழக்குச் சச்சரவுகள் கபீர்தாஸரின் பெரு முயற்சியால் தணியலாயின. மத வெறியிலிருந்து அவர்களை மீட்டு, அவர்களுடைய அந்தரங்கத்தில் சகிப்புத் தன்மையும் அன்பும் சுரக்க அவர் வழிகோலித் தந்தார்.

தர்மம் செய்வதில் கபீர் மிகுந்த நம்பிக்கையும் பற்றும் கொண்டவர். "எவ்வளவு பெரிய மனிதனுக இருந்தால் என்ன? வழிப்போக்கனுக்கும் நிழல் தராமல், எளிதில் பறித்து உண்ணவும் வகையின்றி பழத்தைக் குலை குலையாகச் சுமந்து நிற்கும் பேரீச்சை மரம்போல் இருந்து என்ன பயன்? கொடுக்கும் குணமுடையவனே உயர்ந்தவன். பிறருடைய துயரங்களை உணர்ந்து, தானே உதவி செய்ய முன்வருகிருனே அவன்தான் உயர்ந்தவன். மற்றவர்களது துயரத்தை உணர முடியாதவன்தான் நாஸ்திகன்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிருர் கபீர்தாஸர்.

கபீருடைய பாடல்களில் உள்ள எளிமையையும் ஜீவன் ததும்பும் தத்துவக் கருத்துக்களேயும் பண்டிதர் முதல் பாமரர் வரையில் தெளிவாகக் காணலாம்.

“உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். தினம் தினம் குளித்துப் புற அழுக்கை அகற்றி விடுவதால் மட்டும் என்ன பயன்? மீன் எப்போதும் தண்ணீரில்தான் வாழ்கிறது. அப்படி இருந்தும் அதன் துர்நாற்றம் போகிறதா?” என்று கேட்கிருர் அவர். சாமானியமான இந்த உதாரணம் எத்தனே உயர்ந்த உண்மையை விளக்குகிறது!

“உன்னுடைய நோக்கம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஆனுல் பேராசை என்பது துளியும் கூடாது. உன்னிடம் இருப்பதைக் கொண்டு நீ திருப்தி அடைவாய். இந்தக் காய்ந்த ரொட்டித் துண்டும் தண்ணீருமே வயிற்றுக்குப் போதும். அதை விட்டுப் பிறர் வீட்டுப் பொருள் மேல் உனக்கு ஆசை ஏன்?” என்று மனித னுடைய ஆசைகளே அவர் கண்டிக்கிருர்.

இந்தப் பிறவி பெறுவதற்கு அரிய மானிடப் பிறவி. இந்தப் பிறவியை உண்டும் உறங்கியுமே வீணே கழிக்கும் சில மனிதர்களேப் பார்த்து, “இரவெல்லாம் தூங்கியும் பகலெல்லாம் உண்டுமே கழித்தாய். அருமையான இந்த மனிதப் பிறவியை வீணே போக்கி விட்டாயே!” என்று அவர் பிறர் உணரும்படி வருந்துகிருர்.

“கடவுளே நீ நம்பாவிட்டால்கூடப் பரவாயில்லே. தெய்வத் தன்மையுள்ள மனிதர்களேயாவது நம்பு. அவர்கள் உன்னேக் கடவுளின் திருச்சந்நிதிக்கு அழைத்துச் சென்று விடுவார்கள்” என்பதும் அவருடைய வாக்கு.

கபீர்தாஸருக்குப் பல சிஷ்யர்கள் ஏற்பட்டார்கள். அவர் நெடுங்காலம் வாழ்ந்து வந்தார். அவருடைய புகழும் பெயரும் நாடெங்கும் பரவின. ஆனுல் அவரோ தனிமையையே நாடினுர். கடவுளே மனதாரப் பாடவும்

பக்தி செய்து புகழவும் மதமோ குலமோ ஒருகாலும் தடையாக இருப்பதில்லை என்பதற்கு ஓர் உதாரணமாக அவருடைய பெரு வாழ்வு அமைந்திருந்தது.

இறுதியில் அவர் காசிமா நகரத்தை விட்டு மகர் என்ற இடத்துக்கு வந்து தம்முடைய 119-ஆம் வயதில் அமரத்வம் பெற்றார். அவர் பிரம்மத்தைக் கண்டவ ராதலால் அவர் இறந்த இடத்தில் மலர்களே இருந்தன. அவர் சடலம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அந்தப் பூக்களை வைத்து அவர்களுடைய சீடர்களான முகம்மதியர் களும் இந்துக்களும் தங்கள் தங்கள் மத வழக்கப்படி இறுதிச் சடங்கு நடத்தினார்களாம்.

மக்களிடையே அன்பையும் பரஸ்பர நல்லெண்ணத் தையும் உபதேசித்து, பக்திப் பாடல்களாக வழங்கிய மகான்களுள் கபீர்தாஸர் பிரகாசமாக விளங்குகிறார். பக்தி பெறுவதற்குச் சிறந்த சாதனமாக அவர் பாடல்களை இசையோடு பயன்படுத்தினார். அவர் தம்முடன் மக்கள் குலத்தைக் கடைத்தேற்றுவது ஒன்றே பெரும் பணியாகக் கொண்டு வாழ்ந்தார்.

"உன் அண்டை வீட்டுக்காரனை நேசிப்பது ஆண்டவனை நேசிப்பது போல" என்ற சித்தாந்தத்துக்கு வழி வகுத்தவர் கபீர்தாஸர்.

8

மீரா பாய்

மேவார் ராணுவின் அரண்மனே திமிலோகப் பட்டது. சேடிப் பெண்கள் அங்கும் இங்கும் ஓடினர்கள், அந்தப்புரமெங்கும் அலசிப் பார்த்துவிட்டார்கள். மூலே முடுக்கெல்லாம் தேடிப் பார்த்தார்கள். எங்குமே இல்லே. அந்த மாளிகையின் ஒவ்வோர் அறையாக நுழைந்து கவனித்தார்கள். தோட்டத்திலும் துரவிலும் தேடினர்கள். ஆனுல் என்ன பயன்? தேடியது கிடைக்கவில்லே; காணவில்லே. ராணியின் முகத்தில் கோபக் கனல் வீசியது. சோகமும் வருத்தமும் இடையிடையே அதைக் கவிந்துகொண்டன.

அரண்மனேயின் அருந்தவக் குழந்தை, தாத்தா தூதாஜியின் அருமைப் பேத்தி, குழந்தை மீராவைக் காணவில்லே. வெகு நேரமாகக் காணவில்லே. பின்னே அரண்மனேயில் இத்தனே சேடிப் பெண்கள் எதற்காக இருக்கிருர்கள்? குழந்தையை ஒருத்தி இல்லாவிட்டால் ஒருத்தி கவனிக்கக்கூடாதா? தூதாஜி தானே தேடப் புறப்பட்டுவிட்டார்.

இத்தனே அமர்க்களத்துக்கும் இடையே, இத்தனே பேர் தேடியும் கண்ணில் படாமல், மீரா மேல் உப்பரிகையின் ஒரு மூலேயில் நின்றுகொண்டு, ஜன்னல் வழியாகத் தெருவில் எதையோ உன்னிப்பாகக் கவனித்துக்கொண் டிருந்தாள்.

அப்போது தெருவில் மங்களு வாத்தியங்கள் முழங்க, திருமண ஊர்வலம் ஒன்று போய்க்கொண் டிருந்தது. நல்ல கூட்டம். வாண வேடிக்கைகள், பூமத்தாப்புக்கள் எல்லாம் ஒரே கோலாகலமாக இருந்தன. வண்ண ஒளி

களுக்கு இடையே வாத்தியங்களின் இன்னிசை காற்றிலே தவழ்ந்து வந்தது. இதற்கு நடுவிலே முத்துப் பல்லக்கு ஒன்றில், பட்டாடைகள் உடுத்து, பொன்னாபரணங்கள் பூண்டு, வண்ண வண்ண நறுமலர்கள் சூடி, பூமாலை அணிந்து சர்வாலங்கார சுந்தரியாகக் காட்சியளித்தாள் கல்யாணப் பெண்.

பல்லக்குக்கு முன்னால் உயர்ந்த ஜாதிக் குதிரை ஒன்றின் மீது பட்டுமகமல் பீதாம்பரங்கள் தரித்து, அழகான தலைப்பாகை அணிந்து, மின்னும் உடைவாள் வண்ண ஒளியிலே கண்களைக் கூசவைக்க, புயவலி திரண்ட தோளிலே மலர் மாலை அசைய, கம்பீரமாக மாப்பிள்ளை வந்துகொண்டிருந்தார். இந்தக் காட்சியைத் தான் கண் கொட்டாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் குழந்தை மீரா.

எப்படியோ குழந்தையைத் தேடிக்கொண்டு மீராவின் தாய் மேல் உப்பரிகைக்கே வந்துவிட்டாள். மீராவைப் பார்த்ததும் வாரியணைத்துக் கட்டித் தூக்கிக்கொண்டாள். உச்சி மோந்தாள். குழந்தை அந்த அன்புப் பிணைப்பிலிருந்து மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

பிறகு ஆவலோடு, "கீழே போகிறதே, அது என்ன அம்மா?" என்று தாயைக் கேட்டாள்.

"அது கல்யாண ஊர்வலம், குழந்தாய்!"

"முன்னால் அழகான குதிரை மேலே ஏறிக்கொண்டு போவது யார்?"

"அவர்தான் கல்யாண மாப்பிள்ளை. பல்லக்கிலே உட்கார்ந்திருப்பது கல்யாணப் பெண். இரண்டு பேருக்கும்தான் கல்யாணம்."

இதைக் கேட்டுவிட்டு, குழந்தை தயங்கியவாறே அம்மாவைப் பார்த்து என்னவோ சொல்ல நினைத்தாள்.

"என்ன குழந்தாய்!"

"எனக்கும் கல்யாணம் வேணும்."

அம்மாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "ஆகட்டும்; கல்யாணம்தானே. செய்து வைத்துவிடலாம். நீ முதலில் கீழே வா. உன்னைக் காணுமல் உன் தாத்தா எங்கே யெல்லாம் தேடுகிறுர், தெரியுமா?" என்றுள்.

"ஊகும்; நான் மாட்டேன். இப்போதே கல்யாணம் பண்ணிஞல்தான் நான் வருவேன்."

"நீ முதலில் உள்ளே வா. உன் தாத்தாவிடம் சொல்லி, இப்போதே கல்யாணம் செய்து வைக்கச் சொல்கிறேன்!" என்று குழந்தை மீராவைச் சமாதானம் செய்தாள் தாய்.

தாத்தாவிடம் எதைச் சொன்னுலும் உடனே அது நடந்துவிடும் என்று மீராவுக்குத் தெரியும். தூதாஜியின் செல்லப் பேத்தி அவள். சரி என்று தாயோடு உப்பரிகையி லிருந்து இறங்கி வந்தாள்.

கொஞ்ச தூரம் வந்ததும், "ஏன் அம்மா? எனக்கு மாப்பிள்ளை எங்கே யிருக்கிறுர்?" என்று கேட்டாள்.

தாயிஞல் உடனே இதற்குப் பதில் கூற முடிய வில்லை. சுற்றுமுற்றும் பார்த்தாள். எதிரே மண்டபத்தில் கிருஷ்ண விக்கிரகம் ஒன்று இருந்தது. அதைச் சுட்டிக் காட்டி, "அதோ பார், மண்டபத்தில்; அவர்தான் மாப்பிள்ளை!" என்றுள் அம்மா. மீரா அந்தக் கிருஷ்ண விக்கிரகத்தை ஆவலோடு பார்த்தாள்.

இரண்டு கைகளையும் ஒய்யாரமாய் இடுப்பில் வைத்துக்கொண்டு மந்தகாசத்துடன் நின்றுர் மாப்பிள்ளை யான கண்ணபிரான். அவர் கண்களிலே நிலவிய குறுகுறுப்பும், இதழிலே நெளிந்த புன்னகையும் குழந்தை மீராவின் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டன. அதையே மீண்டும் மீண்டும் உற்றுப் பார்த்தாள். கண்கள் இரண்டையும் கசக்கிவிட்டுக்கொண்டு அந்த விக்கிரகத்

தையே கவனித்தாள். அது அவளைப் பார்த்து மென் முறுவல் செய்வதுபோல் தோன்றியது. அடுத்த கணமே அந்தக் குழந்தை வயதையும் மீறி, "கிரிதர கோபாலா!" என்று மழலையாகப் பாட ஆரம்பித்துவிட்டது.

பகவான் கோபாலனிடம் பிரேமை கொண்டு கவி இயற்றிய இசைக் கவிஞர்களுள் பக்தையான மீரா தனிச் சிறப்பு வாய்ந்தவள். மீரா பாயின் தந்தையின் பெயர் ரத்னசிங். தாத்தாதான் தூதாஜிராவ். கி. பி. 1498-1504 இதற்கு இடையில் குட்சி என்னும் கிராமத்தில் மீரா பாய் பிறந்ததாகக் கூறப்படுகிறது. மகா பெரிய வீரரான ரத்னசிங் போர் முனைக்குச் சென்றவர் திரும்பி வரவேயில்லை. தாத்தா தூதாஜிதான் அவளை உயிருக்கு உயிராகப் பாராட்டி வளர்த்தார். தூதாஜி கிருஷ்ணனிடம் அளவற்ற பக்தி கொண்டவர். அடிக்கடி சாதுக்களையும் பக்தர்களையும் வரவழைத்து, பஜனைகளும் பாடல்களும் நடத்தி இன்பமாகக் கேட்டுக்கொண் டிருப்பது அவர் வழக்கம். அவர்களோடு சேர்ந்து குழந்தை மீராவும் பாடத் தொடங்கிவிடுவாள். பாடல்கள் அவளுக்கு ஊற்றுப்போல் வந்துகொண்டே யிருந்தன. பக்தி ஊற்றுப் பெருகிக்கொண்டே யிருந்தது. தூய பாடல்கள் புதிது புதிதாக வந்தன.

ஒரு நாள் இரவில் நல்ல மழை பெய்தது. தூக்கத்தி லிருந்த தூதாஜி எழுந்திருந்தார். அருகில் படுத்திருந்த மீராவைக் காணுமல் திகைத்தார். வெளியில் சோவென்று மழை பெய்துகொண் டிருந்தது. அவசரம் அவசரமாக வெளியே வந்து பார்த்தார் தூதாஜி. மண்டபத்தில் இருந்த கிருஷ்ண விக்கிரகத்துக்கு அருகில் உட்கார்ந் திருந்தாள் குழந்தை மீரா.

"மீரா, இங்கே என்ன செய்துகொண் டிருக்கிறுய்?"

"கிருஷ்ண பகவான் மேல் மழை பெய்யாமல் பார்த்துக்கொள்கிறேன் தாத்தா!"

“பகவான் உலகம் நனையாமல் மலையைக் குடையாகப் பிடித்துக் காப்பாற்றியவர், அம்மா. அவர் நனைய மாட்டார், குழந்தாய். நீ வந்து படுத்துக்கொள், அம்மா.”

ஆனால் மீரா நகரவேயில்லை. கடைசியில் அந்தக் கிருஷ்ண விக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு தன் படுக்கைக்குச் சென்ற பிறகுதான் அவளால் நிம்மதியாகத் தூங்க முடிந்தது.

குழந்தை மீராவின் கிருஷ்ண பக்தி தூதாஜிக்கு மிகவும் உவப்பாக இருந்தது. அவளைத் திரும்பத் திரும்பப் பாடச் சொல்லிவிட்டுத் தம்மை மறந்து அதில் லயித்துப் போய் விடுவார். தாம் பூஜை செய்யும் போதும், பஜனை செய்யும் போதும் குழந்தையைத் தம் பக்கலில் உட்கார வைத்துக்கொள்வார். தூதாஜிக்கு அந்தக் குழந்தையோடு அதிக நாள் வாழக் கொடுத்து வைக்கவில்லை. சில ஆண்டுகளில் அவர் மரணம் சம்பவித்தது. அவருக்குப் பிறகு, அவருடைய பதினொரு பிள்ளைகளில் மூத்தவரான ராணா வீர்மதேவ் சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

ராணாவுக்கும் குழந்தை மீராவிடம் அதிக அன்பு. அவரும் செல்வமாகவே வளர்த்தார். மீரா திருமணப் பருவத்தை அடைந்திருந்ததால் அவளுக்கு ஏற்ற கணவனைத் தேடலானார். மீராவின் கிருஷ்ண பக்திக்குத் தடையில்லாத இடமாக இருக்க வேண்டுமே என்பதே அவர் கவலை.

கடைசியில் அப்படி ஓர் இடம் பொருத்தமாகப் பட்டது. சித்தோடு நாட்டு ராணா சாங்கா ராவின் குமாரன் போஜராஜா பக்தையான மீராவுக்கு ஏற்ற கணவனாக இருப்பான் என்று தோன்றியது. ராணா சாங்காவின் வம்சம் வீரத்துக்கும் கடவுள் பக்திக்கும் பெயர் பெற்ற வம்சம். கல்யாணம் நிச்சயமாயிற்று. ஒரு நல்ல முகூர்த்தத்தில் கல்யாணம் நடைபெற்றது.

மீராவின் மணவாழ்க்கை ஏற்றதாக இருந்தது. அவளுடைய கிருஷ்ண பக்திக்கும் வழிபாட்டுக்கும் சிறிதும் தடையாக இல்லை. கிருஷ்ண பகவானின் சௌபாக்கிய குணங்களைப் பாடுவதும் பக்தி செய்து அவரைப் பூஜிப்பது மாகவே இருந்தாள் மீரா. குழந்தைப் பருவத்திலிருந்து மீரா அந்தக் கண்ணன்மீது கொண்டிருக்கும் பக்தியைக் கேள்விப்பட்டிருந்த போஜராஜன் மிக்க மகிழ்ச்சியோடு அவள் பூஜை வழிபாடு செய்வதற்காகவே ஓர் அழகான கோயில் கட்டிக் கொடுத்தான். அந்தக் கிருஷ்ணன் கோயிலில் பஜனையும் பூஜையுமாக எப்போதும் பக்தர் களின் கூட்டம் பெருகி வழிந்துகொண் டிருக்கும். மீரா ஒரு ராணிக்குரிய சம்பிரமங்களுடன் வாழாமல் எளிய முறையிலேயே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டாள். இயன்ற வரையில் மற்றவர்களுக்குச் சேவை புரிந்தாள். அவளுடைய அன்பும் சாந்தமுமான குணம், ஆழ்ந்து ஊன்றியிருந்த பக்தி, தேனினும் இனிய தெவிட்டாத கீதம் இவையெல்லாம் மக்களைக் கவர்ந்தன. அவள் புகழ் நாடு முழுவதும் விரைவாகப் பரவியது. இந்தச் சமயத்தில் எதிர்பாராத துக்கம் நேர்ந்தது. மீரா தன் கணவனை இழந்து விட்டாள்.

போஜராஜனின் சிறிய சகோதரன் விக்கிரமாதித்தன் சிம்மாசனம் ஏறினான். அவன் தன் வம்சத்தையொட்டிய குணத்தைப் பெற்றிருக்கவில்லை. மீராவைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு. எப்போதும் அரண்மனையைச் சுற்றியும் கோயிலைச் சுற்றியும் பக்தர்களின் கூட்டமும் பஜனைக் கோஷ்டியின் அணியும் இருந்துகொண் டிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதிலும் ராஜஸ்திரீ கோயி லுக்குச் சென்று எல்லாரோடும் அமர்ந்து பஜனை பாடுவதும் மற்றவர்களுக்குச் சேவை புரிவதும் அவனுக்குக் கொஞ்சமும் பொறுக்கவில்லை. சாதுக்களாலும் இந்தப் பக்தர்களாலும் அரண்மனை நாசமாவதாக அவன் கருதினான். அதனால் மீராவை முதலில் அரண்மனை

யிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று நினைத்தான். ஊருக்கு ஒதுப்புறத்திலே இருந்த ஓர் எளிய குடிசையில் மீராவின் வழிபாடுகளை வைத்துக் கொள்ளும்படி உத்தர விட்டான்.

மீரா வந்ததனால் அந்தக் குடிசை புனிதமடைந்தது. தன்னை மறந்த லயத்தில் மீரா பாடிய கீதங்கள் மக்கள் உள்ளத்தே பக்தியைப் பரப்பின. அந்தக் குடிசையே கிருஷ்ணன் கோயிலாகிவிட்டது.

மீராவின் புகழ் இதனால் மேலும் ஓங்கியதைக் கண்ட விக்கிரமாதித்தனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவளுக்கு நஞ்சு கலந்து கொடுத்துக் கொன்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தான். பாலில் விஷத்தைக் கலந்து, 'கிருஷ்ணனுடைய பிரசாதம்' எனச் சொல்லிக் கொடுக்குமாறு ஏவலாளரைப் பணித்தான். அவன் கொடுத்தனுப்பிய அந்தப் பாலை மீரா பருக வேண்டாம் என்று பக்தர்கள் தடுத்தனர்.

"கிருஷ்ண பிரசாதம் என்று வந்திருக்கிறதே. வேண்டாம் என்று எப்படி நான் சொல்வேன்?" என்று அவள், "கிருஷ்ணா!" என்றவாறு அந்தப்பாலை அருந்தி விட்டாள்.

பக்தர்களைக் காப்பதும் அவர்கள் கஷ்டங்களை நீக்கு வதும் அந்தப் பகவானுடைய பொறுப்பு என்று நம்பியவர் இந்த நாட்டில் அதிகம். அந்த நம்பிக்கை எப்படிப் பொய்க்கும்? பாலில் இருந்த விஷத்தைப் பகவானே ஏற்றுக் கொண்டு விட்டார் என்றுதான் தோன்றியது. பாலைக் குடித்ததும் மீராபாய் கணீரென்று கண்ணனுடைய நாமத்தைச் சொல்லிப் பாடவாரம்பித்து விட்டாள். அமுத கானம் என்றால் அதுதான். பக்தர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

விக்கிரமாதித்தன் அதிர்ச்சியடைந்தான். தான் கொடுத்தனுப்பிய விஷம் மீராவை ஒன்றும் செய்யவில்லை

என்று அறிந்து அவன் முதலில் திகைத்தான். அவனுடைய மூட புத்திக்கு மீராவின் பெருமை புலப்பட வில்லை. அவளிடம் குரோதம்தான் மேலும் வளர்ந்தது. துன்மார்க்கர்களுடைய இயல்பு எப்படி வேறு விதமாக இருக்கும்?

மற்றொரு நாள் அழகான பெட்டி ஒன்றில் கொடிய கருநாகம் ஒன்றை வைத்து மூடி, "பூஜைக்கு ஒரு புதிய கிருஷ்ண விக்கிரகம் வைத்திருப்பதாகச் சொல்லி, மீராவின் கையில் கொடுக்கும்படி அனுப்பிவைத்தான். பக்தர்கள் இதை நம்பவில்லை. மீராவுக்கு ஏதோ தீங்கு இழைக்கவே அரசன் அழகிய பேழையை அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். மீராவை அதைத் தொட வேண்டாமென்று எச்சரித்தார்கள். யார் தடுத்ததையும் கேளாமல் மீரா அந்தப் பெட்டியைக் கையில் வாங்கி, அங்கேயே திறந்தாள்.

புஸ்ஸென்று சீறி வந்த கருநாகம் உடனே அழகான விக்கிரகமாகவே மாற்றம் பெற்றுவிட்டது. கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் மூழ்கினார்கள். மீராவின் பெருமை நாடெங்கும் இன்னும் அதிகமாகப் பரவியது.

மீராபாய் சித்தோடு நாட்டைவிட்டுப் புறப்பட எண்ணினாள். அது 1543-ஆம் ஆண்டு. பல க்ஷேத்திரங் களுக்குச் சென்று ஒவ்வொரு கோயிலாகத் தரிசித்துக் கொண்டே பிருந்தாவனத்தை அடைந்தாள். பஜனைக் கிருதிகள் இயற்றிப் பாடியவாறு அங்கே சில காலம் தங்கியிருந்தாள். பிறகு துவாரகைக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

மீரா சென்ற பிறகு சித்தோடு களையிழந்து, ஒளி யிழந்து வெறிச்சிட்டுப் போயிற்று. மீராவை அவளுடைய சிறிய மைத்துனனான அரசன் விக்கிரமாதித்தன்தான் கொடுமை செய்து துரத்திவிட்டதாக மக்கள் கிளர்ந்து

எழுந்தனர். அதற்கு ஏற்றாற்போல் நாட்டில் பஞ்சமும் துர்ப்பிட்சமும் ஏற்பட்டன. ஆங்காங்கு கலகங்கள் மூண்டன. நாடு அமைதியின்றித் தவித்தது. மீராவுக்குச் செய்த கொடுமையால் இந்த நிலை வந்துவிட்டது என்ற கூச்சல் எங்கும் எழுந்தது. மீராபாயை உடனே நாட்டுக்குத் திருப்பி அழைத்துவர வேண்டும் என்று மக்கள் ஒரு முகமாகக் கிளர்ச்சி செய்து, கோஷமிட்டார்கள். விக்கிர மாதித்தனுக்கு முதலில் என்ன செய்வதென்றே தெரிய வில்லை. பிறகு மெல்ல மெல்லத் தன் தவற்றை உணரத் தொடங்கினான். மீராவுக்குத் தான் இழைத்த கொடுமை களை எண்ணி மனம் வருந்தினான்.

அவளை எங்கிருந்தாலும் சென்று தரிசித்து, மன்னிப்புக் கோரி, அவளைத் தன் நாட்டுக்குத் திரும்ப அழைத்து வரவேண்டும் என்று அவனே புறப்பட்டு விட்டான். அவனோடு பக்தர்களும் சாதுக்களும் அடங்கிய ஒரு பெருங்கூட்டமே புறப்பட்டு விட்டது. புத்திரவாஞ்சை காரணமாக உயிரை இழக்கப்போகும் அரசனைக் காப்பாற்ற ராமபிரானை அழைத்து வரச் சென்ற அயோத்தி மக்கள் இவ்வாறுதான் அன்று புறப்பட்டார்களோ என்று எண்ணும்படி இருந்தது, அவன் புறப்பட்டுச் சென்ற காட்சி.

துவாரகாபுரியில் மாதவனுடைய ஆலயத்தில் மீரா தன்னை மறந்த நிலையில் பஜனைசெய்து தியானத்தில் மூழ்கியிருந்தாள். விக்கிரமாதித்தன் வெகுநேரமாக வந்து காத்திருப்பதே அவளுக்குத் தெரியாது. அவளுடைய நிலையைக் கண்டு அரசன் மனம் பெரிதும் நெகிழ்ச்சி யுற்றது. மீராவின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்துவிட்டான். மீரா கண் விழித்துப் பார்த்து, நிலைமையைப் புரிந்துகொண்டாள். தனக்கு மன்னிப்பு அளிக்குமாறு கோரிய அரசனைக் கருணையோடு நோக் கினாள். ஊருக்குத் திரும்பி வரவேண்டும் என்று அவன் மன்றாடிக் கேட்டுக்கொண்டான்.

"எனக்கு என்று ஊர் ஏது? உற்றார் உறவினர் யார்? கிருஷ்ண பரமாத்மாவைத் தவிர எனக்குப் புகலிடம் ஏது? அவர் இருக்கும் இடமே என் ஊர். அவரே எனக்கு உற்றார் உறவினர் எல்லாம். அவருடைய அநுமதி கிடைத்தாலன்றி எங்கும் வருவதற்கில்லை" என்று கூறினாள் மீரா.

"கண்ணபிரான் எங்கும் நிறைந்தவர். அவரை எங்கிருந்தாலும் அன்போடு நினைத்தால் போதும். மக்கள் துயர் தீரும். அல்லல் நீங்கி, இன்பம் பெற அவன் நாமம் தான் அனைவருக்கும் கதி" என்று கூறிவிட்டு அவள் மீண்டும் தியானத்தில் அமர்ந்தாள். கிருஷ்ண பரமாத்மாவோடு அப்படியே உட்கார்ந்த நிலையில் இரண்டறக் கலந்துவிட்டாள்.

அவள் பாடிய கண்ணனின் நாமம் அன்று முதல் இன்று வரை கணீரென்று ஒலித்துக்கொண்டே யிருக்கிறது. என்றும் சுழன்றுகொண்டே யிருக்கும்.

௯

மகான் புரந்தரதாஸர்

அன்று நான்காவது நாள். அந்த வேதியர் கடைத் தெருவிலுள்ள கிருஷ்ணப்ப நாயக்கருடைய காசுக் கடை வாயிலில் காத்துக்கொண் டிருந்தார். ஏதோ வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதுபோல் பாவனை செய்துகொண் டிருந்த கிருஷ்ணப்ப நாய்க்கர் அந்த அந்தணரைக் கவனிக்காதது போலவே இருந்தார். அந்தணரும் அவரை விட்டுவிடுவதாக இல்லை. பொறுமையாகக் காத் திருந்தார்.

வேறு வழியில்லை என்று தெரிந்துகொண்ட கிருஷ்ணப்ப நாயக்கர் அவரைப் பார்த்து, "என்ன சுவாமி, என்ன வேண்டும்? சொல்லித் தொலையுங்கள்!" என்று எரிச்சலோடு கேட்டார்.

"என் பையனுக்குப் பூணூல் போடுகிறேன். நீங்கள் அதற்கு ஏதாவது உதவி செய்யவேண்டும். அதற்காகத் தான் நிற்கிறேன்!"

"அட யாசகமா? பூணூலுககுப் பணம் வேண்டும் என்றால் காலை நேரத்தில் வரக்கூடாதோ? கடையை மூடும் நேரத்தில் வந்தால் எப்படிக் கொடுப்பது, சுவாமி? போய்வாரும், போம். நாளைக் காலையில் பார்க்கலாம் ஏதாவது!" என்றார் நாயக்கர்.

"நேற்றுக் காலையில் வந்தேன். சாயந்தரமாக வரச் சொல்லிச் சொன்னீர்கள்!"

"சாயந்தரமாக வருவதற்கென்ன?"

"சாயந்தரம் முதற்கொண்டுதான் நிற்கிறேன். நீங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தீர்கள். என்னைக் கவனிக்க வில்லை."

“கூப்பிடுவதுதானே?”

“அப்படித்தான் முந்தாநாள் கூப்பிட்டேன். உங்களுக்குக் கோபம் வந்துவிட்டது. கோபத்தில் பேசிவிட்டீர்கள்!”

“இது ஏது பெரிய வம்பாகப் போய்விட்டதே. ஏதோ கொடுத்து வைத்திருப்பது மாதிரி வந்து படையெடுக்கிறீர்களே...... சரிசரி; நாளைக்கு வாருங்கள். ஏதாவது பார்த்துச் செய்கிறேன்......”

கிருஷ்ணப்ப நாய்க்கர் கடையைப் பூட்டிவிட்டு ஒரு முறைக்கு இரண்டு முறையாக இழுத்துப் பார்த்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டார்.

அவர் மனைவிகூடக் கேட்டாள்: “அந்தப் பிராம்மணர் நாலைந்து நாட்களாக வந்துகொண் டிருக்கிறாரே, அவருக்கு ஏதாவது கொடுத்து அனுப்பக் கூடாதா?”

“இங்கேயும் வந்துவிட்டாரா அவர்? கொடுத்து அனுப்புவதா? இங்கே என்ன கொட்டியா வைத்திருக்கிறது? இவர்களுக்கெல்லாம் கொடுத்துக் கொடுத்து அனுப்பத்தான் நான் கடைவைத்து நாளெல்லாம் உட்கார்ந்திருக்கிறேனா?”

“அப்படியானால், ‘இங்கே வரவேண்டாம்; என்னிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை’ என்று அவரிடம் கண்டித்துச் சொல்லி விடுவதுதானே? எதற்காக அவரை வீணாக அலைக்கழிக்க வைக்கிறீர்கள்?” என்றாள் மனைவி.

“எல்லாம் எனக்குத் தெரியும். அதை என் வாயால் நான் சொல்வானேன்? தானே தெரிந்து கொள்கிறார், மனிதர். நாலைந்து நாட்கள் நடந்து பார்த்தால் தானே தெரிகிறது. அப்புறம் ஏன் வருகிறார் அங்கே?”

கணவருடைய பதில் சரஸ்வதிக்குப் பிடிக்கவில்லை தான். அது முறையாகப் படவில்லை. ஆனால் அவரை

எதிர்த்து எப்படிப் பேசுவது? பேசாமல் இருந்துவிட்டாள். இவ்வளவு தூரம் அவள் பேசியதே பெரிது.

கிருஷ்ணப்ப நாயக்கருடைய கருமித்தனம் அந்தப் பண்டரிபுரத்தில் மிகவும் பிரசித்தம். மகா லோபி என்று பட்டம் வாங்கியவர் அவர். அவர் கருமியாக இருக்கலாம்; ஆனால் மனைவிக்கு அவர் தெய்வம் போன்றவர். எனவே சரஸ்வதி பாய் அத்துடன் விட்டுவிட்டாள்.

இவருடைய கருமித்தனம் தெரிந்தும் அந்த மனிதர் இவரிடம் யாசகம் கேட்க வந்தாரே, அதையல்லவா சொல்லவேண்டும்? கிருஷ்ணப்ப நாயக்கரை விடுவதாகத் தெரியவில்லை. எனவே நாயக்கர் சொன்னபடி மறுநாள் காலையில் அவர் கடைக்கு வந்து நின்றார். முதல் நாள் மனைவி கேட்டிருந்ததாலோ என்னவோ, கிருஷ்ணப்ப நாயக்கர் கல்லாப் பெட்டியில் கையை விட்டுச் சிறிது சில்லறை எடுத்தார். "ஐயா, இந்தாரும்; போய், சந்தோஷமாகப் பையனுக்குப் பூணூல் போட்டு வையும்" என்று சொல்லிக் கொடுத்தார்.

அந்த வேதியருக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அந்தச் சில்லறையை வைத்துக்கொண்டு ஒரு படி அரிசிகூட வாங்க முடியாது. இதில் எப்படிப் பூணூல் போடுவது? நாயக்கருடைய பணத்தாசையையும் கஞ்சத்தனத்தையும் கண்டபோது அவருக்குச் சிரிப்புத் தான் வந்தது.

அவருக்கு வேறு யோசனை தோன்றியது. நாயக்கர் கருமியாக இருந்தாலும் அவருடைய மனைவி கொஞ்சம் தாராளமாக இருக்கக்கூடும். தானே உதவி செய்தாலும் செய்யக்கூடும்; அல்லது கணவனுக்காவது எடுத்துச் சொல்லக்கூடும். எதற்கும் வீட்டுக்குப் போகலாம் என்று சரஸ்வதி பாயிடம் வந்து நின்றார்.

"கடையில் ஏதாவது பணம் கிடைத்ததா?" என்று கேட்டாள் சரஸ்வதி பாய்.

“அம்மா, அதை என்ன என்று சொல்வேன், தாயே. பூணூல் கல்யாணத்துக்கு இன்னும் இரண்டே நாள்தான் இருக்கிறது. உங்கள் கணவர் ஏதோ உதவி செய்கிறேன் என்று மூன்று நாள் அலைக்கழித்துவிட்டு இன்று காலையில் இரண்டே காசு கொடுத்துப் போகச் சொல்லிவிட்டார். நான் என்ன செய்வேன்? எதையாவது விற்று ஒருவிதமாகப் பூணூல் போட்டுவிடலாம் என்றால் என்னிடம் விற்பதற்கும் ஒரு பொருளுமில்லை” என்றார் அந்த மனிதர்.

அவருடைய கதையைக் கேட்க மிகவும் பரிதாபமாக இருந்தது. அவள் பக்தியும் கருணையும் மிக்கவள். என்ன தோன்றியதோ என்னவோ, தன் மூக்கில் அணிந்திருந்த வைர மூக்குத்தியைக் கழற்றி அந்த வேதியரின் கையில் கொடுத்துவிட்டாள். அந்த மனிதனுடைய வயிறு எரிந்தால் அதனால் கணவனுக்குத் தீங்கு நேருமோ என்று அஞ்சினாள் அவள்.

“ஐயா, இந்த மூக்குத்தியை விற்றுவிடுங்கள். இது நல்ல வைரம்; விலையுயர்ந்தது. இதை விற்று உங்கள் பையனுக்கு உபநயனம் செய்து வையுங்கள். என்னால் வேறு எவ்வித உதவியும் செய்ய இயலவில்லை” என்றாள்.

அவளை உள்ளம் குளிர வாழ்த்திவிட்டு மூக்குத்தியை வாங்கிக்கொண்டு போய்விட்டார் அந்தப் பிராம்மணர்.

அந்த மூக்குத்தியை விற்றுப் பணமாக்க, பண்டரிபுரத்தில் வேறு பெரிய கடைகள் இல்லை. அதனால் கிருஷ்ணப்ப நாயக்கருடைய கடைக்கே வந்தார் அந்த மனிதர். கிருஷ்ணப்ப நாயக்கர் அவரையும் மூக்குத்தியையும் மாறி மாறிப் பார்த்துத் திகைத்தார். இவருக்கு எப்படி இவ்வளவு விலையுயர்ந்த வைர மூக்குத்தி கிடைத்தது என்று ஆச்சரியப்பட்டார்.

“சுவாமிகளே! ஏது ஐயா, இந்த மூக்குத்தி?”

“பகவானிடம் பக்தி கொண்ட ஒருவர் கொடுத்தது!”

"இது எவ்வளவு விலை மதிப்பு உள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. எனக்குப் பூணூல் கல்யாணச் செலவுக்குப் பணம் வேண்டும். அது எவ்வளவு விலை பெறும் என்று எனக்குக் கவலையில்லை!"

கிருஷ்ணப்ப நாயக்கர் கீழ்ப் பார்வையாகப் பார்த்து, "ஊம்; இது மிகவும் சாதாரண மூக்குத்தி. கொஞ்ச ரூபாய்தான் பெறும்" என்று கூறிவிட்டு, அவரிடம் ஒரு சிறு தொகையைக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு அந்த மனிதர் புறப்பட்டுவிட்டார்.

நாயக்கருக்குத் திடீரென்று அச்சம் உண்டாகி விட்டது. மூக்குத்தியைக் கொடுத்தவரிடமே போய் அந்த மனிதர் இவ்வளவு தொகைதான் கிடைத்தது என்று சொன்னால் வம்பு வந்துவிடப் போகிறதே என்று பயந்தார். அந்த அப்பாவி மனிதரை ஏமாற்றியது ஊருக்கெல்லாம் தெரிந்துவிட்டால் என்ன செய்வது? தம் கடையிலிருந்த ஒரு பையனை அந்தப் பிராம்மணர் எங்கே போகிறார் என்று அவருக்கே தெரியாமல் பின் தொடர்ந்து பார்த்து வரும்படி அனுப்பினார். பாவம், பையன் திரும்பி வந்தான். அந்தப் பிராம்மணர் பண்டரி புரத்து விட்டலர் கோயிலுக்குள் போனாராம். அப்புறம் அவர் எங்கே போனார் என்று எவ்வளவு தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லையாம்! திடீரென்று மறைந்து போயிருந்தாலொழிய அவரைப் பார்ப்பது ஒருகாலும் கஷ்டமாக இருக்காது. ஆகவே அவர் கோயிலுக்குள் நுழைந்த மறுகணமே மறைந்துதான் போயிருக்க வேண்டும் என்றான் பையன்.

அந்த வேதியர் உருக்கொண்டு நாலைந்து நாட்களாக அவரிடம் வந்து யாசகம் கேட்டவர் பகவான் விட்டலராகவா இருக்கப்போகிறார்?

பிற்பகல் சாப்பிடுவதற்காகக் கிருஷ்ணப்ப நாயக்கர் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். இலையின் முன்னால் உட்கார்ந்த போதுதான் தம் மனைவியின் முகத்தைக் கவனித்தார். மூக்கு மூளியாக இருந்தது. மூக்குத்தி யைக் காணோம். அவருக்குச் சட்டென்று ஒரு சந்தேகம் தட்டியது. "மூக்குத்தி எங்கே?" என்று மனைவியிடம் கேட்டார்.

"கழற்றி வைத்திருக்கிறேன்!"

"எங்கே வைத்திருக்கிறாய்?"

"எண்ணெய் ஸ்நானம் செய்தேன். பானைக்குள் ஒரு சம்புடத்தில் வைத்திருக்கிறேன்!"

இப்பொழுதுதான் அவருக்கு நன்றாக நினைவு வந்தது. அந்தப் பிராம்மணர் கொண்டு வந்து கொடுத்த வைர மூக்குத்தி சரஸ்வதியின் மூக்குத்திதான். எதற்கும் அவசரப்படக் கூடாது என்று கடைக்குத் திரும்பியதும் முதல் வேலையாக, பெட்டிக்குள் மூக்குத்தி இருக்கிறதா என்று பார்த்தார். இருந்தது. அசல் வைர மூக்குத்தி; அவருடைய மனைவியின் மூககுத்தியேதான்! இருந்தாலும் சரஸ்வதி பொய் சொல்ல மாட்டாளே! அந்தப் பிராம்மணன், தம்மிடமே வந்து தம் மனைவியின் மூக்குத்தியை விற்றுப் பணத்தை அடித்துக்கொண்டு போய்விட்டாரோ என்று தோன்றவே, கடையை அவசர அவசரமாகப் பூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்தார்.

சரஸ்வதிக்கு உள்ளூற அச்சமாக இருந்தது.

"இன்னும் மூக்குத்தியைப் போட்டுக்கொள்ளாமல் இருப்பானேன்?"

"எண்ணெய் இறங்கும்; அதனால்தான் போட்டுக் கொள்ளவில்லை."

"சரிதான்; ஆனால் அது எங்கே? கொஞ்சம் கொண்டுவா, பார்க்கலாம், உயர்ந்த வைரம் எப்படி இருக்கிறது என்று!" என்றார் நாயக்கர்.

சரஸ்வதி செய்வதறியாது திகைத்தாள். "ஹே விட்டலா! இது என்ன உன் சோதனே!" என்று கையைப் பிசைந்தாள்.

அவள் கணவருடைய கோபம் அவளுக்குத் தெரியும். அந்த அந்தணரின் பரிதாபமான முகத்தைப் பார்த்த போது வேறு எதுவும் நினைவுக்கு வரவில்லை. இப்படி ஓர் இக்கட்டான நிலையில் மாட்டிக்கொள்ளும்படி ஆகிவிட்டதே!

யத்தினுல் கண்களை இறுக மூடிக்கொண்டு பண்டரி நாதனைக் குறித்துத் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டாள். உள்ளே பானையைத் திறப்பதுபோல் திறந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாள்.

"சரஸ்வதி, மூக்குத்தியை எடுத்து வரவா இத்தனை நேரம்?"

"ஹே பிரபோ! பாண்டுரங்கா! பண்டரிநாதா! நீதான் கதி! எப்படியாவது இந்த ஆபத்தான நிலையிலிருந்து என்னை மீட்க மாட்டாயா?" என்று கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் மூழ்கினுள். சிறிது நேரம் ஆயிற்று.

"அதைத் தொலைத்துவிட்டாயா?"

கிருஷ்ணப்ப நாயக்கர் குரல் ஓங்கி ஒலித்தது.

அவரிடம் அகப்பட்டுக்கொள்வதைவிட உயிரை விட்டு விடுவதே மேல்! அதற்கு விஷம் வேண்டுமே! பானைக்குள் பாம்பு ஒன்று இருந்து, தன்னைத் தீண்ட லாகாதா என்று பண்டரிநாதனையே தியானித்தவாறு பானைக்குள் கையை விட்டாள். என்ன ஆச்சரியம்! அதனுள் ஏது சம்புடம்? அதை எடுத்து ஆட்டிப் பார்த் தாள். 'லொட லொட' என்று ஏதோ உருண்டது. திறந்து பார்த்தாள்.

"பண்டரிநாதா! இதுவும் உன் கருணையோ? என் கதறல் உன் செவிகளில் விழுந்துவிட்டதோ?" என்று அதனுள்ளிருந்த வைர மூக்குத்தியைக் கையில் எடுத்துப் பார்த்தாள். அதே மூக்குத்திதான். அந்தப் பிராம்மணரிடம் அவளே கழற்றிக் கொடுத்த மூக்குத்திதான்.

"ஹே ஆபத் பாந்தவா! பரந்தாமா! இந்த ஏழையையும் ஒரு பொருட்டாக எண்ணி உதவ வந்தாயோ?" என்று அண்ணாந்து பார்த்து ஒரு கணம் மெய்ம்மறந்து நின்றாள்.

"எங்கே மூக்குத்தி?" குரல் கடுமையாக மிரட்டியது.

"இதோ!" என்று கொடுத்தாள் சரஸ்வதி பாய்.

கிருஷ்ணப்ப நாயக்கர் திகைத்துப்போனார். அவர் பார்த்து எடைபோட்ட அதே மூக்குத்தியல்லவா இது? ஒரே குழப்பமாகி விட்டது. எனவே கடைக்கு விரைந்தார். பெட்டியைத் திறந்தார்; பார்த்தார். அதிலிருந்த மூக்குத்தியைக் காணவில்லை! 'சொரேர்' என்றது. வியப்பும் திகைப்பும் கோபமும் ஏமாற்றமும் மேலிட்டவராக அவர் வீடு திரும்பி மனைவியை அழைத்து, "ஏது இந்த மூக்குத்தி? உண்மையைச் சொல்!" என்றார்.

சரஸ்வதி பாய் நடந்தவற்றை நடந்தபடியே கூறி விட்டாள். "பகவான் விட்டலப்பிரபுதான் எனக்கு மூக்குத்தியைக் கொணர்ந்து கொடுத்தார்" என்றாள் முடிவாக.

அந்த அந்தணரைப் பின் தொடர்ந்து சென்று, திரும்பி வந்த பையன் கூறியதும் அவருடைய நினைவுக்கு வந்தது. அவருக்கு உண்மை புலனாயிற்று.

"சரஸ்வதி, இன்றுதான் என் கண்கள் திறந்தன! இத்தனை ஆண்டுகள் என் வாழ்க்கையை வீணாக்கி விட்டேன். என் குருட்டுக் கண்களைத் திறந்து விட்டார் பிரபு விட்டல்! ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடுத்து

அதனுல் அவர் அடையும் மகிழ்ச்சியைக் கண்டு ஆனந்திப்பதைவிட வேறு இன்பம் இருக்கிறதா? என் பொருள் அனைத்தும் இனி நமது பண்டரிநாதனுக்கே சொந்தம்!'' என்று உணர்ச்சி வசப்பட்டு நெகிழ்ச்சியோடு கூறினர்.

அப்படிக் கூறியதற்கு இணங்க, தம் சொத்துக்கள் அனைத்தையும் பாண்டுரங்கனுக்கே அர்ப்பணமும் செய்து விட்டார். அவர் தோற்றம், பேச்சு எல்லாம் ஒரே நாளில் மாறிப் போய்விட்டன. ஊரே இதைக் கண்டு வியந்தது. லட்சாதிபதியாக இருந்த கிருஷ்ணப்ப நாயக்கர் மறு நாள் காலையில் உஞ்சு விருத்திக்குப் புறப்பட்டபோது, இதை வேடிக்கை பார்க்கவென்று பெரும் கூட்டமே கூடி விட்டது. அன்று முதல் உஞ்சு விருத்தியைக் கொண்டே அவர் குடும்ப ஜீவனம் நடைபெற்றது. அவ்வாறு ஒரு நொடியில் கண்கள் திறக்கப்பட்டு, அனைத்தையும் துறந்து, மனம்மாறி, கர்நாடக இசை என்ற ஒன்றையே தோற்றுவித்த பெரிய மகான்தான் புரந்தரதாஸர். பண்டரிபுரத்துப் புரந்தரனுக்கு மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் தொண்டு செய்து வாழ்ந்த மகாத்மா அவர்.

கிட்டதட்ட இவர் காலமும் மீரா பாயின் காலமும் ஒன்றுதான். 1484-ஆம் ஆண்டு ஹம்பியில், பண்டரிப்பூருக்குச் சமீபத்தில் உள்ள ஊரில் பிறந்தவர் கிருஷ்ணப்ப நாயக்கர். அந்த ஊருக்குப் புரந்தரகாட என்று பெயர் வழங்குகிறது. அவருடைய தந்தையின் பெயர் வரதப்ப நாயக்கர்; தாய் கமலாம்பாள். செல்வம் படைத்த பெற்றோருக்குப் பிறந்த கிருஷ்ணப்ப நாயக்கர் தம் குலத் தொழிலாகிய காசுக் கடையையே நடத்தி வந்தார். அவரை அந்தத் தொழிலில் செல்ல விடாமல் தடுத்தாட் கொண்டுவிட்டான் புரந்தரன்.

இந்த உலகத்து மக்கள் நிலையற்ற இந்த வாழ்வின் மீதும் வீண் ஆடம்பரமான பொருள்கள் மீதும் மோகம் கொண்டு அலைவதைத் தடுக்க விரும்பினர்

புரந்தரதாஸர். விஜயநகரத்திலிருந்த ஸ்ரீ வியாசராயரிடம் சீடனாகப் போய்ச் சேர்ந்தார்.

"ஹே பாண்டுரங்கா! நடந்ததெல்லாம் நன்மைக்கே! நான் பெரிய கோடீசுவரன் என்று கர்வப்பட்டுக்கொண்டிருந்தேன். துளசியையும் அதை அணிந்த பக்தர்களையும் அலட்சியம் செய்துகொண்டிருந்தேன். என் கர்வம் ஒழிந்தது. நான் என்னைப் புரிந்துகொண்டு விட்டேன். என் சொத்துக்களை உனக்கே அர்ப்பணித்து விட்டு, கையில் ஓடு எடுத்துக்கொண்டு விட்டேன். என்னுடைய இந்த மாற்றத்துக்குக் காரணமான என் மனைவி சிறப்படையட்டும்."

புரந்தரதாஸர் பாடிய முதல் பாட்டு இதுதான். கன்னட மொழியிலே எளிமையும் ஆழ்ந்த கவிச் சுவையும் கொண்ட அவருடைய பாடல்கள் மக்களைக் கவர்ந்தன.

புரந்தரதாஸர் மக்களுக்குப் பக்தி மார்க்கத்தைப் போதிக்க ஆரம்பித்தார். கர்நாடக சங்கீதத்துக்கு முதல் பயிற்சிகளான ஸ்வர வரிசை, ஜண்டை, அலங்காரம், தாளம் முதலியவைகளை முறைப்படுத்தி, கீர்த்தனம் என்னும் முறையையும் அதில் பல்லவி, அநுபல்லவி, சரணம் முதலியவற்றையும் ஏற்படுத்தியவர் புரந்தர தாஸரே. சங்கீத உலகம் அவரைக் கர்நாடக சங்கீதத்தின் சிருஷ்டி கர்த்தா என்று போற்றுகிறது. சங்கீதத்தில் மார்க்க, தேசி என்ற இரண்டு வழிகளையும் ஒன்று சேர்த்துப் புதிய பாணியை உண்டாக்கியவர் புரந்தரதாஸர்.

புரந்தரதாஸருக்குக் குழந்தைகளிடத்தில் அலாதிப் பிரியம். ஒரு சமயம் வீட்டிலே சமைப்பதற்கு ஒன்றும் இல்லை. அண்டை வீட்டுக்காரர்களும் கடன் கொடுத்துச் சலித்துவிட்டார்கள். சரஸ்வதிபாய் தன் கணவனிடம் முறையிட்டுக்கொண்டாள். வெளியே கிளம்பிய புரந்தர தாஸர் அங்கே ஒருவன் கரும்பு விற்றுக்கொண்டிருப்ப தையும் அந்தக் கரும்புத் துண்டங்களை வாயிலே எச்சில்

ஊற ஆசையோடு பார்த்துக்கொண்டிருக்கும் சில குழந்தைகளையும் கண்டார். கரும்பு வியாபாரியிடம் கடனுக்குக் கரும்பு வாங்கி, அந்தக் குழந்தைகளுக் கெல்லாம் கொடுத்து அவர்கள் மகிழ்ச்சியிலே தாமும் திளைத்துப் போனார்.

கணவர் சமையலுக்கு ஏதாவது வாங்கிக்கொண்டு வருவார் என்று காத்திருந்த சரஸ்வதிபாய் அவர் வெறும் கையோடு வந்தபோது திகைத்தாள். அதனால் என்ன? அதுவரை பசியால் துடித்து அழுதுகொண்டிருந்த அவருடைய குழந்தைகளும் உண்ட களிப்பிலே விளையாடுவதுபோல் சிரித்து விளையாடிக் கொண் டிருந்தார்கள்.

புரந்தரதாஸருடைய பாடல்கள் கன்னட மொழி யினருக்கு வேதம் போன்றவை. அவருடைய பாடல் களின் சொற்சுவையையும் பொருள் சுவையையும் எண்ணி எண்ணி வியக்காதவர்களே இல்லை. புரந்தரதாஸர் சுமார் நாலே முக்கால் லட்சம் பாடல்கள் எழுதியிருப்பதாக அவருடைய சீடரான விஜய விட்டலர் குறிப்பிட் டிருக்கிறாராம்.

பரந்தாமனுடைய நாமத்தை முழு நம்பிக்கையோடு உச்சரித்தால் போதும். நம் கஷ்டங்களை அவன் தீர்த்து வைப்பான் என்பது புரந்தரதாஸர் வலியுறுத்தும் கொள்கை. அதன்படி அவர் தம் வாழ்க்கையில் நடந்தும் காட்டினார். வாழ்க்கையில் துறவு மேற்கொண்டு 1564-ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் நாள் அவர் சமாதி நிலையுற்றார்.

வறுமையை வலிய மேற்கொண்டு இன்பம் கண்ட அந்த மகான் இறைவன் திருவருளைப் பூரணமாகப் பெற்றவர். கர்நாடக சங்கீதம் என்ற மகாசமுத்திரத்தைத் தோற்றுவித்தவர்; உலகம் உள்ளளவும் அவர் புகழும் பாடல்களும் இருக்கும் என்பது முக்காலும் உண்மை.

பக்த கவி ஸூர்தாஸர்

கண்ணன் என்றாலே தன் ஒப்புயர்வற்ற பேரழகினாலும் அரிய லீலைகளினாலும் கண்வழியே புகுந்து கருத்தைக் கவர்பவன் என்றுதான் நாம் நினைக்கிறோம். நம் கண்ணைக் காட்டிலும் அவனை இனியவனாகவே எண்ணி வருகிறோம். எல்லாருமே கண்ணுக்கினிய கண்ணனை உள்ளங் கவர் கள்வனாகவே கண்டு பக்தி பூண்டிருக்கிறார்கள்.

யசோதை அவனை அந்தப் பொருளில்தான், ‘கள்வா’ என்று அழைத்து அணைத்து உச்சி மோந்திருக்கிறாள். அவனைப் பார்த்துப் பார்த்து அவன் அழகில் சொக்கிப் போன மகிழ்ச்சியின் பூரிப்பினால் அவள் ‘ஏரார்ந்த கண்ணி’ ஆனாளாம். கோகுலத்து ஆய்ச்சியர் தங்கள் கவலைகள் தீர அவனை நாடி ஓடி வந்து கிங்கிணிகளும் நூபுரங்களும் வளைகளும் குலுங்கி ஒலிக்கக் குரவையாடியிருக்கிறார்கள். ‘உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே’ என்று கண்ணனை அழைக்கிறாள், ஆண்டாள்.

‘கோலமே, தாமரைக் கண்ணதோர் அஞ்சன நிலமே, நின்று எனதாவியை ஈர்க்கின்ற சீலமே’ என்று கண்ணனை நினைந்து நினைந்து நைந்துருகிப் போகிறார் ஆழ்வாரிலே முதன்மையான நம்மாழ்வார்.

இன்னும் கண்ணனைப் பகைத்திருந்தவர்களும்கூட அவனுடைய வடிவழகிலே கண் தோய்ந்து மயங்கியதாகத் தெரிகிறது. குந்தி போன்றவர்கள், ‘எங்களுக்கு அடிக்கடி விபத்துக்களே வரட்டும். அதனால் நாங்கள் கண்ணனையும் அவன் பெருமைகளையும் அடிக்கடி காணமுடிகிறது’ என்ற அளவுக்குப் போய்விட்டார்கள்.

பிருந்தாவனம், ஆயர்பாடி, மதுரை, கோவர்த்தனம், துவாரகை முதலான இடங்கள் சூழ்ந்த விரஜ பூமியில் கண்ணன் காலடிபட்ட தூய்மையை இன்றைக்கும் மக்கள் போற்றிக் கொண்டாடி வருகிறார்கள். அங்கே பாய்ந் தோடும் சில்லென்ற யமுனையில் அவர்கள் ஆண்டு முழு வதும் பின் இரவிலேயே சென்று நீராடி உள்ளம் மகிழ கிறார்கள்.

வடநாட்டில் கிருஷ்ணபக்தி சம்பந்தமான இலக் கியமும் கலையும் சாதிபேதங்களை அறவே ஒழித்து அன்பு வழியைப் பரப்ப உதவின. ஹிந்துக்களையும் முஸ்லிம் களையும் ஒன்றுபடுத்திய பெருமை கிருஷ்ண பக்திக்கு உண்டு.

கிருஷ்ணனைப்பற்றிப் பாடிய கவிகளில் பாதுஷா அக்பர் அக்கறை காட்டினார். ருஸ்தம்கான் என்ற முஸ்லிம் ஒருவர் கண்ணனிடம் பேரன்பு கொண்டு பக்தி செலுத்தினாராம். ரஸகான் என்ற முஸ்லிம் கவி வல்லபா சாரியருடைய சிஷ்யர்களில் ஒருவராகப் புகழ் பெற்றிருந் தார். அக்பருடைய அவையில் இருந்த ரஹீம் என்ற கவி கண்ணனைப்பற்றி நிறையப் பாடியிருக்கிறார். தாஜ் என்ற முஸ்லிம் பெண்மணியும் கண்ணனிடத்தில் நிறைந்த பக்தி யுடைவளாக, 'பிருந்தாவனத்தில் வாழும் கிருஷ்ணன் என் தலைவன்' என்று பாடியிருக்கிறாள்.

அந்தப் பூமியில் பிறந்து, வாழ்ந்து, கிருஷ்ண பக்தியில் இணையற்ற கவியாகச் சிறந்து விளங்கியவர் களில் ஸூர்தாஸருக்கு ஒரு தனிஇடம் உண்டு. ஸூர்தாஸர் ஸாரஸ்வதப் பிராம்மண குலத்தில் பிறந்தவர். ராமதாஸ் என்பவர் இவருடைய தந்தை. ஆக்ரா—மதுரா நெடுஞ்சாலையிலுள்ள ருனக்தா என்ற ஊரில், 1483-இல் ஸூர்தாஸ் பிறந்தார். இவர் பிற்காலத்தில் குருடராக இருந்தார். ஆனால் பிறவிக் குருடர் அல்ல. இந்த உண்மை இவரது கவிதையிலிருந்தே தெரிகிறது. எழுதப் படிக்கக் கற்றுக் கவியான பின்பே இவர் பார்வையை இழந்

திருக்கிருர் என்று நிச்சயமாகச் சொல்லலாம். வேறு வேலை எதுவும் செய்ய இயலாமற்போகவே, மதுரைக்கும் ஆக்ராவுக்கும் இடையே உள்ள கவூகாட் என்ற ஊரில் வாழ்ந்து, சாலையில் போகிற வழிப் போக்கர்களுக்குக் கிருஷ்ணனைப்பற்றிய கீர்த்தனைகளை இயற்றிப் பாடிக் களிப்பித்து அவர்கள் கொடுத்த பொருளை ஊதியமாகப் பெற்று ஜீவித்து வந்தார். இவருக்கு மணமாயிற்ரு, குழந்தை உண்டா என்பவை போன்ற விவரங்கள் எதுவும் இன்று யாருக்கும் தெரியவில்லை. உறுதியான சான்று களும் கிடைக்கவில்லை.

ஆனால் இவரைப்பற்றிய கதைகள் மட்டும் சில வழங்குகின்றன என்று தெரிகிறது. அவற்றில் ஒன்று இவர் தம் குருநாதரைச் சந்தித்து அவரை நாடியடைந்தது. குருநாதரை இவர் தேடிச் செல்லவில்லை. ஆனால் அவர் இவரை நாடிவந்தார். அவர் வரப்போகிருர் என்ற உண்மையை ஸூர்தாஸர் குருட்டுக் கனவிலேயே கண்டு தெரிந்துகொண்டு விட்டார்.

கண்ணன் குழந்தையாக அவர் அகக் கண்ணெதிரே தோன்றி அனவரதமும் அவரை மகிழ்வித்து வந்திருக் கிருன். கண்ணன் நினைவிலே தோய்ந்து போய், அவர் கவியாகப் பொழிந்து பாடுவார்; ஆடுவார். புறக் காட்சி களைக் காண முடியாத அவர் கண்கள் கண்ணன் தோற்றத்தைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை. அந்தக் கண்ணன் ஒரு சமயம் அவர் உள்ளக் கோயிலில் இருந்து திடீரென்று மறைந்து விட்டானும். ஸூர்தாஸர் கண் பார்வையோடு குரலும் இழந்த ஊமையாகி விட்டார்.

"கண்ணு, எங்கே இருக்கிருய் நீ? எங்கே போய் விட்டாய் என் செல்வமே!" என்று அவருடைய உள்ளம் ஏங்கிக் கூவியது.

பதிலைக் காணேம்!

"கண்ணா—கண்ணா!" அவர் நா வறண்டுவிட்டது. குரல் என்னவோ எழும்பவேயில்லை.

கண்ணிரண்டும் தாரையாக நீரைப் பெருக்கின. துந்தன வாத்தியம் தந்தியை மீட்டவில்லை. யமுனைக் காற்று ஸ்தம்பித்துப் போய்விட்டது போல் தோன்றியது. பூக்கள் மணம் வீசவில்லை. அவர் பாடல்களுக்கு எப்போதும் சுருதி கூட்டுவது போல் அமைந்திருக்கும் பறவைகளின் இன்னிசை அவர் காதில் விழவில்லை.

உலகமே தேங்கிப்போய் விட்டதுபோல் ஒரு பெரிய சூனிய உணர்ச்சி உண்டாயிற்று அவருக்கு. உண்மையில் அவர் இதயமும் நினைப்பதைக் கூட மறந்து நின்று விட்டது.

சற்றைக்கெல்லாம் நூபுரத்தின் கிண்கிணியோசை கேட்டபோதுதான் அவர் உலகில் அசைவு இருப்பதை உணர்ந்தார். கண்ணன்தான் குறும்புத்தனம் செய்து இப்படி ஓர் இருட்டடிப்பைச் செய்துவிட்டான் என்று அவர் புன்னகை செய்தார்.

"கண்ணா!"—குரல் வந்துவிட்டது.

"உம்" என்று எதிரேயிருந்த ஆசனப்பலகையி லிருந்து குரல் கொடுத்தான் கண்ணன்.

"எங்கே போய்விட்டாய் என் இறைவா?"

கலகலவெனச் சலங்கை ஒலிப்பதுபோல் நகை செய்த கண்ணன், "தெரிந்துகொள்! உன்னுடைய குருநாதரை இந்தப் பக்கமாக வருமாறு செய்வதற்காகத் தான் போனேன்? அதற்குள் தவித்துப் போய்விட்டாயே! நல்ல ஆள் நீ!" என்றான்.

"குருநாதனா? உன்னைத் தவிர எனக்கு வேறு ஒரு நாதன் ஏது கண்ணா?"

"இதோ பார்-உன் குருநாதனை! இவரால் நீ செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்-

கின்றன. நீ மட்டும் என்னைக் கண்டு மகிழ்ந்தால் போதுமா? நீ கண்ட இந்த அநுபவத்தை உன் பாடல் களிலே தேக்கி, காலமெல்லாம் பாடப்போகிறவர்களுடைய உள்ளத்தில் நிலைக்கும்படி நீ செய்ய வேண்டாமா? அதற்கு உதவப் போகிற ஒருவரை உனக்காக வரவேற்பதற்காகத் தான் போயிருந்தேன்!'' என்றான் கண்ணன்.

ஸூர்தாஸர் அப்படியே தம்மை மறந்துபோய் உட்கார்ந்திருந்தார். தம்மைச் சந்திக்க வரப்போகிற அந்தக் குருநாதனை அகக்கண்ணிலே ஒரு நொடி கண்டு கொண்டார்.

''ஸூர்தாஸ்!''

''ஐயனே! என்னைக் கடைத்தேற்ற வேணும்!'' என்று நிலந்தொழுது வணங்கினார் ஸூர்தாஸர்.

''உனக்குக் கண் பார்வை?''

''இந்தக் கண்கள் பார்க்காவிட்டால் என்ன சுவாமி, நீலமேனிக் கண்ணன் இதோ எப்பொழுதும் என் பார்வையில் நின்றுகொண் டிருக்கிறான்! அவன் சொல்லத்தான் நீங்கள் வரப்போவதை நான் அறிந்து கொண்டேன்.''

வல்லபாசாரியார் ஸூர்தாஸரின் மன நிலையைப் புரிந்துகொண்டு புன்னகை செய்தார். ஸூர்தாஸர் பேசிய தெல்லாம் அருமை அருமையான பாடல்களாக வெளி வந்தன. இவருடைய பாடல்களின் அழகையும் தன்மை யையும் கண்டு வல்லபாசாரியார் மகிழ்ந்து, அவரைத் தம் சிஷ்யர்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டார்.

வல்லபாசாரியார் (1473 - 1531) சுத்தாத்வைத வேதாந்தத்தை ஆதரித்து அதைப் பரப்பியவர். மத்தியப் பிரதேசத்தில் ஐய்பூருக்கு அருகே கம்பாரண்யத்தில் பிறந்தவர். அலகாபாத்துக்கு அருகே ஆடெல் என்னும் ஊரில் வாழ்ந்தவர். இளமையிலேயே கல்வி கேள்விகளில்

சிறந்த இவர் கடவுளைக் கலைக் கண்கொண்டு பார்ப்பதில் நிகரற்று விளங்கினார். 'என்னால் ஆவது ஒன்றுமில்லை. சாஸ்திர விதிப்படி கடவுளிடம் அன்பு செய்வது ஒன்று தான் நான் செய்யக்கூடியது' என்பதே இவருடைய சித்தாந்தம். இவருடைய பக்திக்கு உணர்ச்சியே அடிநிலை. அந்த உணர்ச்சிதான் கலைப் பிரச்னையை இவருக்குக் கொடுத்தது. இவர் தோற்றுவித்த மார்க்கத்துக்குப் புஷ்டி மார்க்கம் என்று பெயர். ஸூர்தாஸரின் பக்தி கிட்டத்தட்ட அந்த உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதுதான். அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடக்கி முறையாக அதை ஒரு வாய்க்கால் வழியே பாய்ச்ச உதவுவதற்குத்தான் இந்தச் சந்திப்பு அவர்களுக்கிடையே நிகழ்ந்ததாகத் தோன்றியது. 'யாவும் கண்ணன் அருளே!' என்று ஸூர்தாஸர் தம் குருநாதருடன் பிருந்தா வனத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். வல்லபாசாரியாரின் சிஷ்யர்களில் ஸூர்தாஸர் முதன்மை பெற்று விளங்கினார்.

தினம் பூஜைகள் நடைபெறும். வல்லபாசாரியார் தம்மை மறந்து அதில் ஈடுபட்டிருப்பார். அதற்குச் சுருதி கூட்டுவதுபோல, ஸூர்தாஸர் தினமும் புதுப் புதுக் கீர்த்தனங்களாக இயற்றி மொழிக்கே மெருகு ஏற்றிக் கொண்டு வந்தார். வல்லபாசாரியாருக்கே இவருடைய பாடல்கள் பல நுட்பங்களை உணர்த்துவதாக அமைந்திருந்தன. வல்லப சம்பிரதாயத்தைச் சார்ந்த 'அஷ்டசாப்' என்னும் கவிகள் எண்மரில் ஸூர்தாஸர் முக்கிய மானவராகிவிட்டார். இவருடைய பாடல்கள் அனைத்தும் சுத்தாத்துவைத முறையைப் பின்பற்றிய கிருஷ்ண பக்தியை ரசமாகப் பிழிந்து கொடுப்பதாக அமைந்திருந்தன.

டில்லி, ஆக்ரா இந்தப் பகுதிகளுக்கிடையே வழங்கி வந்த ஹிந்தி மொழியின் பழைய உருவமே விரஜபாஷை எனப்படும். இவர் அந்த மொழியில் லட்சத்துக்கு மேல் கீர்த்தனங்களைப் பாடியிருக்கிறார். 'ஸூர்ஸாகர்' என்ற

இவருடைய நூல் மிகவும் புகழ்பெற்றது. இவர் பாடிய கீர்த்தனைகளின் முக்கியமான தொகுதி அது. இப்போது இவர் பாடியவற்றில் சுமார் ஐயாயிரம் பதங்களே கிடைத்திருக்கின்றன.

கிருஷ்ணப் பிரேமையில் ஈடுபட்டுப்போன இவர் கடைசிவரையில் திருமணமே செய்து கொள்ளவில்லை என்று நிச்சயமாகக் கூறலாம். இவர் குருடராக இருந்தார் என்பதனால் மட்டும் இப்படிச் சொல்வதற்கில்லை. கண்ணனையே நாயகனாக வரித்து நேரமின்றித் தவித்த இவருக்குத் தம் அன்பைப் பகிர்ந்து கொடுக்கவும், இல்லறத்தில் ஈடுபடவும் நேரமேது?

வாழ்க்கை முழுவதையும் கண்ணனுக்கே அர்ப்பித்து அதனால் அழியாப் பெயர் பெற்றவர்கள் பலர் உண்டு. அவர்களில் ஸூர்யதாஸ் என்ற ஸூர்தாஸர் தலைசிறந்து நிற்பவர்.

கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பல வகைகளில் அவனோடு குலாவி மகிழும் காட்சிகளைச் சித்திரித்துப் பல பாடல்கள் பாடியிருக்கிறார் ஸூர்தாஸர். கண்ணனின் லீலா விநோதங்கள், அவனுடைய கொள்ளையழகு, அவனுடைய வேய்ங்குழலிசையின் இனிய தன்மைகள் முதலியவற்றைப் பற்றி இவர் பாடியிருப்பதைப் பார்த்தால், தமிழில் பாடிய பெரியாழ்வாரின் நினைவு நமக்கு வராமல் போகாது. பக்தியில் சிறந்த பெரியாழ்வாரின் பாசுரங்களுக்கு இவருடைய பாடல்களில் சில விளக்கமாக இருக்கின்றன என்றும் கூறலாம்.

தென்னாட்டு ஆழ்வார்களின் கிருஷ்ண பக்தி வெள்ளம் தீந்தமிழ்ப் பாடல்களின் வழியோடு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பிருந்தாவனத்துக்குப் போயிருந்தது என்பதை இதனால் நாம் அறிகிறோம்.

வல்லபாசாரியரின் குமாரர் ஸ்வாமி விட்டலநாத் என்பவர் இவருடன் எப்பொழுதும் இருந்து வந்ததாகத்

தெரிகிறது. அவரும் பெரிய கவிஞர். தந்தையைப் போலவே சுத்தாத்துவைத வேதாந்தத்தை ஆதரித்துப் பரப்பி வந்தவர். 1563-இல் பாராஸாலி என்ற ஊரில் ஸூர்தாஸர் கண்ணன் திருவடியை அடைந்தார். அவர் காலமானபோது ஸ்வாமி விட்டலநாத் அருகில் இருந்து ஆகவேண்டியவற்றைச் செய்ததாகச் சில ஆதாரங்கள் கூறுகின்றன.

இவருடைய பிரமர கீதம் மிகவும் அருமையான காவியம். கிருஷ்ணன் விளையாட்டு, ராதையின் பிரேமை, பிணக்கு, புல்லாங்குழலின் மயக்கம் முதலியவற்றை இவர் கோபிகைகளின் வாயிலாகச் சொல்லி வெளிப்படுத்துகிறார். நிர்க்குணப் பிரம்மத்தை அறியும் ஞானயோகத்தைப் பயின்ற உத்தவர் என்பவர் தாம் மிகவும் அறிவாளி என்ற செருக்குடையவராக இருக்கிறார். கண்ணன் அவரைக் கோகுலத்திலுள்ள கோபிகைகளிடம் அனுப்புகிறார். உத்தவர் கோபிகைகளிடம் சென்று ஞானயோகத்தைப் பயிலும் அவசியத்தை எடுத்துச் சொல்ல முனைகிறார்.

கண்ணனையே நேரில் கண்டு ஆனந்தம் கொண்ட ஆய்ச்சியரா இந்த நிர்க்குண உபாசனையை ஏற்றுக் கொள்ள ஒப்புவார்கள்?

“இனிமையான திராட்சைக் கனியை எறிந்துவிட்டு, கசப்பாகக் கசக்கும் வேப்பங்காயைத் தின்பார்களா? கையிலுள்ள பாலைக் கொட்டிவிட்டு, உப்புத் தண்ணீர் உள்ள கிணற்றை யாராவது தேடியலைவார்களா? எங்களுக்குக் கண்ணனைத் தவிர வேறு எதுவுமே வேண்டாம்” என்று ஆய்ச்சியர்கள் அனைவரும் ஒரு குரலில் கூறுகிறார்கள்.

உத்தவர் அந்த அன்பைக் கண்டு திகைத்து உருகிப் போய் நிற்கிறார். அவரே ஆயனாக உருமாறி, “கண்ணா, கண்ணா!” என்று மாயனை நோக்கிக் கூவிக் கொண்டு ஓடுகிறார். அவருடைய செருக்கெல்லாம் பக்தி ரசமாக

உருகி ஓடுகிறது. பிரமர கீதம் இந்த வரலாற்றைச் சொல்கிறது. படிக்கப் படிக்க இனிமை வாய்ந்த காவியம் என்று பிரமர கீதத்தை அன்று முதல் இன்று வரையில் புகழாதவர்கள் இல்லை. பல்லாயிரக் கணக்கான இவருடைய பாடல்களை இன்றும் என்றும் மக்களும் பக்தர்களும் பாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்; இருக்கப் போகிறார்கள்!

ஏனெனில் இவர் கண்ணனைக் காவிய நாயகனாக மட்டும் எண்ணிப் போற்றியவர் அல்ல. கண்ணனுடனேயே அல்லும் பகலும் அனவரதமும் வாழ்ந்தவர். அவருடைய உயிராற்றல் இன்று என்ன, என்றைக்குமே இலக்கியத்திலும் வாழ்விலும் பொலிவுற்றுக்கொண்டு தான் இருக்கும்.

முற்றும்